கல்கி

KALKI 27-4-75 60 காசு





பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
Vim
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!
ஹிந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்-V-38-140 TM


பாராட்டுவோர் பலருண்டு
உங்கள் முகத்திற்கு, பகைகள் பல
உண்டு உங்கள் மேனிக்கு.
பக்கபலமாக வைத்துக்
கொள்வீர்—பாண்ட்ஸ்
வானிஷிங் க்ரீம்
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள்
சருமத்தைக் காற்று, தூசி,
சீதோஷ்ண நிலைகளின் கொடுமைகளி
லிருந்து பாதுகாக்கிறது. ஈரத்
தளதளப்பை எழில்பட மேனியிலே
நிலை நிறுத்தும் ஒரு விசேட
'ஹ்யூமெக்டண்ட்' அதில் அடங்கி
யுள்ளது. அது பிசுக்கற்ற மழமழப்
பான பொலிவைத்தருகிறது.
அதைப் பரிபூரணப் பவுடர் படி
மானப் பூச்சாக உபயோகியுங்கள்
பல மணி நேரங்களுக்கு உங்கள்
'மேக்-அப்'பை புதுமை குன்றாது
அழகுற வைக்கிறது. அல்லது
பூரணமான 'மேக்-அப்'
சாதனமாக வேண்டுமானாலும்
உபயோகியுங்கள்.
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பரிபூரணப் பவுடர் படிமான க்ரீம்.
POND'S
VANISHING CREAM
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ. எஸ். ஏ. யில் இணைக்கப்பெற்றது)

286

165

மேஜிக எண்கள் அல்ல ஆனால் கெல்வினேடர் எண்கள். அவைகள் லிட்டர் கொள்ளளவுகளை குறிக்கின்றன. அதாவது ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்றவாறு ஒரு

135

கெல்வினேடர் உள்ளது—அதன் எண் எதுவாயினும். என் குடும்பத்தினர் கெல்வினேடர்கள் மகிழ்வுடன் இருக்கச் செய்கின்றன என்பதற்கான காரணங்களில் அதுவும் ஒன்று.

65

எல்லா எண்களும் ஒரு குடும்பத்தை மகிழ்விக்கவே. நபர்களின் எண்ணிக்கை எப்படியிருப்பினும்

ஸ்பென்ஸர்ஸ்

— 1865 முதல் நமது வாழ்க்கைப் பாதையில் சேவையுடன்


ஸ்பென்ஸர் & கம்பெனி லிட்
153, மவுண்ட் ரோடு
சென்னை-600002.
19- அலிபூர் ரோடு
டெல்லி-110006
ஸ்பென்ஸர்ஸ் பில்டிங்
ஃபோர்ஜெட் தெரு
பம்பாய்-400036
டைமண்ட் ஹார்பர் ரோடு
கித்தர்பூர்
கல்கத்தா-700023

அதற்கும் மேலாக, கெல்வினேடர் வைத்திருப்பவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு காரணம் யாதெனில் ஒரு முறை வாங்கியவுடன் இரண்டு நன்மைகளை அடைகின்றனர். ஒவ்வொரு கெல்வினேடருடன் பெயர் பெற்ற ஸ்பென்ஸரின் சேவைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. அகில இந்திய தொடர்பு வசதியுடன் ஸ்பென்ஸர்ஸ் குறித்த கால திறமையான, தன்னடக்கமுள்ள விற்பனைக்குப் பின் சேவையை உறுதிப்படுத்துகின்றனர். இந்த நம்பிக்கை ஒரு முறை வாங்கியவுடன் உங்களை மறக்காமலிருப்பது இதுதான் கெல்வினேடரைப் பற்றிய சிறப்பு அம்சம்.

கெல்வினேடரின் மற்ற சிறப்புகள்:

- சிறந்த உள் வடிவமைப்பு
- ஒரு பக்க லைனிங்
- காந்த முறையுடன் கதவமைப்பு
- போலார்ஸ் பியர் கம்ப்ரெஸர்
- எழிலான சீரமைப்புடன் டிசைன்

FOCUS.SC.2391 TAM (a)



தேர்ந்தெடுக்கப்படுவது ஒவ்வொரு முறையும்!
அதுதான் கெல்வினேடர் ஸ்பென்ஸரிலிருந்து!

கல்கி

ராக்ஷஸ சித்திரை, 14

ஏப்ரல் 27, 1975

★

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே







டாக்டர் ராதாகிருஷ்ணன்

தத்துவ ஞானி என்ற முறையில் ஈடு இணையற்றவர்;

எழுத்தாளர் என்ற அளவில் உலகப் புகழ் பெற்றவர் ;

சொற்பொழிவாளர் என்ற முறையில் தம் நிகரற்றவர் ;

மிகச் சிறந்த ராஜதந்திரி;

பாரத ரத்தினங்களில் ஒருவர்;

பண்பாட்டின் உறைவிடம், அடக்கத்தின் உருவகம் ;

அறிஞர்களுள் பேரறிஞர், உபாத்தி யாயர்கள் அனைவருக்கும் உபாத்தியாயர் ;

கோடானு கோடி பாரத மக்களின் பெரு மதிப்புக்குப் பாத்திரமான மிகப் பெரிய மனிதர் —

அமரர் உலகுக்குச் சென்று விட்டார் !

அவர் சாதனைகளை அவரது நூல்களே பேசும். அந்த நூல்களைப் பற்றியே பலர் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இனியும் எழுதுவார்கள்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் எத்தனையோ பேர் எழுதியுள்ளனர், இனியும் எழுதுவார்கள்.

எத்தனை எழுதினாலும் அவருக்கோ அவரது அறிவாற்றலுக்கோ நியாயம் செய்ததாகாது.

"நாட்டில் பல சிரமமான சூழ்நிலைகள் இருந்து வந்துள்ளன. அவற்றை மறக்காமல் கணக்கில் எடுத்துக் கொண்டோமானாலும் கூடத் தேசத்தின் செல்வம் ஏராளமாய்ப் பாழாக்கப்பட்டுள்ளதை மறப்பதற்கில்லை, மன்னிப்பதற்குமில்லை" என்றார் ராதாகிருஷ்ணன், 1967ல். இத்தகைய நிலை இனியும் நம் தேசத்தில் நீடிக்காதிருக்க, "ஜனநாயகம் என்பது ஓர் அரசாங்க முறையல்ல, வாழ்க்கை முறை" என்ற அவரது கருத்தை மனத்தில் என்றும் அழியாதபடி ஒவ்வொருவரும் பதிய வைத்துக் கொள்வோம்.

கல்கி

மலர் 34

இதழ் 39

அழ வேண்டாம்; ஆனந்தப்படுங்கள்!

சிறுபிள்ளைத்தனமான பிடிவாதத்துடன் நடந்து கொள்கிறார் சோகியால். சக்கரவர்த்தியாக இருக்கலாம்; ஆனால் நாடு தமது என்று எண்ணினால் அவர் பாடு அதோகதிதான். 'தேசம் மக்களுக்குச் சொந்தம்; ஒரு தர்மகர்த்தா என்ற முறையில் நாம் பதவியில் இருக்கிறோம்' என்ற எண்ணம் இல்லாவிடில் சக்கரவர்த்தி என்ன, சிற்றரசன்கூட உருப்பட முடியாது.

ஸிக்கிம்மில் இன்று பெருவாரியான மக்கள் பாரதத்துடன் இணைவதெனத் தீர்மானித்து வாக்களித்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயத் தேர்தலை சோகியால் போன்றோரின் முணுமுணுப்புக்கு இடமில்லாதபடி இன்னும் சற்று நல்லபடியாக நடத்தியிருக்கலாம். அயல்நாட்டுப் பார்வையாளர்களைக்கூடத் தருவித்திருக்கலாம். சீனா வாயடைத்துப் போயிருக்கும்.

ஆனால் அது வேறு விஷயம். பெரும்பாலான சிக்கிம் மக்களின் அசைக்க முடியாத முடிவுக்குப் பாரதமும் சரி, சோகியாலும் சரி தலைவணங்கியே தீர வேண்டும். ஸிக்கிம் மக்களின் தீர்ப்பை ஏற்று ஸிக்கிம்மைப் பாரதத்தின் ஓர் அங்கமாக்கும் காரியத்தைச் சற்றும் தாமதத்துக்கு இடமின்றிப் பாரத அரசு நிறைவேற்ற வேண்டும். தாமதம் வெறும் வாயையே மெல்லுவோருக்கு அவலாக அமையும்.

ஸிக்கிம்மில் முடியாட்சிக்கு இடமில்லை என்று ஏற்பட்டுவிட்டாலும் சோகியாலுக்கு மதிப்பளித்துக் கௌரவமாகப் பாரதம் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கலாம். இந்தப் பெருந்தன்மையை சோகியாலும் பிரதிபலித்தால் அவருக்கு நல்லது.

ஸிக்கிம் மங்கை பாரத இளைஞனை மணாளனாக ஏற்று மாலையிட்டும் விட்டாள். 'வேளை வந்தது, விவாகம் நடந்தது' என்று மகிழ்ந்துவிட்டுப் போகாமல் சோகியால், 'ஐயோ, என்னுடைய பெண்!' என்று அச்சானியமாக அலறுவது அசட்டுத்தனமே.

அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று வழி காட்டப் பாரதத்திலேயே பல சுதேச சமஸ்தான மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் போல் சோகியாலும் மாறி வரும் சூழல்களை உணர்ந்து மக்களின் மதிப்பில் உயர்வதற்கு ஏற்பச் செயல்படட்டும்.

உபவாசம் முடிந்தது; உழைப்பு தொடர்கிறது!

மொரார்ஜி தேசாய் ஆரஞ்சுப்பழ ரசத்தை ஜே.பி.யிடமிருந்து வாங்கி அருந்தி உபவாசத்தை முடித்துக் கொண்டார். கோரிக்கைகளில் ஒன்றுக்குப் பாதியாவது நிறைவேறியதே என்று மொரார்ஜி தேசாய் உபவாசத்தை முடித்துக் கொண்டது நல்லதே. உயிரை இழக்க அவர் தயாராயிருக்கலாம்; ஆனால் தேசம் அவரை இழக்கத் தயாராயில்லை.

வெற்றி திருமதி இந்திராவுக்கே. பிடிவாதத்தைத் தளர்த்தியது போல் காட்டிக் கொண்டார். ஆனால் முக்கிய பிரச்னையான நெருக்கடி காலச் சட்டத்தை நீக்க அவர் இசையவில்லை.

குஜராத்தில் என்ன, தேசமெங்குமே தேர்தல்களை ஒத்திப் போடவும் சர்வாதிகாரப் போக்கில் ஆட்சியில் உள்ளோர் நடந்து கொள்ளவும் வசதி அளிப்பது நெருக்கடி காலச் சட்டம். எல்லைப் புறங்களில் ஆபத்து என்றும் கடல் மார்க்கமாகக் கூடப் பேராபத்து என்றும் பூச்சாண்டி காட்டிப் பிரதமர் தமது எதேச்சாதிகாரப் போக்குக்கு மேலும் கால தவணை பெற்றுக் கொண்டுவிட்டார்.

டிய்கோ கார்ஸியா தீவில் இருக்கும் அமெரிக்க ராணுவ தளம் இந்தியாவுக்கு ஆபத்தாம்; சொல்லாமல் சொல்கிறார் பிரதமர். அதையே கம்யூனிஸ ஆக்கிரமிப்பு மனப்பான்மைக்கு எதிரான ஒரு பக்கபலமாக நாம் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. ஆனால் பச்சை கம்யூனிஸ்டுகள் ஊடுருவியுள்ள இந்திரா அரசிடம் இந்த அரசியல் சாணக்கியத்தை நாம் எதிர்பார்க்க முடியாது.

மொரார்ஜியின் உபவாசம் முடிந்தது; ஆனால் அவருடைய பணி முடியவில்லை. தொடர்ந்து போராடத் தேவையிருக்கிறது.

வெற்றி தோல்வியாகிறது!

திரு ப.உ. சண்முகம் அரிசிபேர ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தாரா இல்லையா என்று நீதி விசாரணை நடத்த சட்ட சபையில் ஏகக் கூச்சலிட்டு முதல்வரை அதற்கு இணங்க வைத்தனர் அ. தி. மு. க. அங்கத்தினர்கள்.

நீதி விசாரணை என்று ஏற்பட்டபிறகு இப்போது ஒத்துழைக்கமாட்டோம் என்கின்றனர். இப்படிப் பின் வாங்குவது வெற்றியைத் தோல்வியாக்கிய கதை என்று இவர்களுக்கு ஏன் புரியவில்லை ? 'பயந்து விட்டார்கள், நழுவுகிறார்கள்' என்று பேச்சு எழ ஏன் இடமளிக்க வேண்டும் ? கண்மூடித்தனமாகக் குற்றம் சுமத்தக் கூடாது. யோசித்துக் குற்றம் சாட்டியபின் கடைசி வரையில் பின்வாங்கவும் கூடாது.

இங்குள்ள நீதிபதி பிரயோஜனமில்லை, வேற்று மாநிலத்தவர் வந்து விசாரிக்கட்டும் என்றெல்லாம் பேசுவது முறையல்ல என்பதோடு 'சறுக்கினது சாக்கு' என்பது போலவும் தொனிக்கிறது. இங்குள்ள நீதித்துறையிலேயே நம்பிக்கை இல்லை என்பதுபோல் காட்டிக் கொள்ளாமல் சவாலை ஏற்றுத் தி. மு. க.வுக்குச் சாதகமாக தீர்ப்பு அமையாதபடி தேவையான சாட்சியங்களைத் திரட்டவும் வாதங்களைச் சமர்ப்பிக்கவும் முயல வேண்டும்.

இதற்கு மாறான அ.தி.மு.க.வின் போக்கு அரசியல் அரிச்சுவடியையே இன்னும் அவர்கள் சரியாகக் கற்கவில்லையோ என்று எண்ணச் செய்கிறது.

புதிய கவிதை !

சரியாகப் படம் போட வராதவர்கள் மாடர்ன் ஆர்ட் மன்னர்களாக மாற முயல்வார்கள். இதுபோலத்தான் இன்று சிலர் புதிய கவிதை எழுத முற்படுகிறார்கள். இரண்டுமே தவறுதான்.

"செய்யுள் வேறு, கவிதை வேறு. செய்யப்படுவது செய்யுள் ; உணர்ச்சிகளை ஏந்தி வருவது கவிதை. செய்யுள் எல்லாம் கவிதையாகிவிடாது" என்றார் திரு ராமகிருஷ்ணன்.

"பண்டைய இலக்கியங்களைப் படியுங்கள், மரபுப்படி கவிதைகளை இயற்றக் கற்றுக் கொள்ளுங்கள், இலக்கணமும் படித்து அறிந்து கொள்ளுங்கள். பிறகு, அவற்றை ஒதுக்கி வைத்துப் புதிய கவிதை எழுதுங்கள்" என்ற அவரது கருத்து வரவேற்கத்தக்கது.

இலக்கிய சிந்தனை கூட்டத்தில் புதிய கவிதை பற்றிச் சண்டமாருதமாகப் பேசிய டாக்டர் எஸ். ராமகிருஷ்ணனால் தமது பேச்சிலிருந்து அரசியலையும் ஒதுக்க முடியவில்லை, பண்டைய இலக்கியத்தில் தாம் மூழ்கித் திளைப்பவன் என்பதையும் மறைக்க முடியவில்லை. ஒரு மணி நேரப் பேச்சில் கடைசி பத்து நிமிஷங்களில் புதிய கவிதைக்கு வந்து சேர்ந்தவர், அவற்றில் அங்கதம் அல்லது சுய இரக்கமே முக்கியத்துவம் பெறும் என்றார். ஆனால் சில கவிதைகளை அவர் படித்து விளக்கியபோது அந்த உணர்ச்சிகளை அவரால் பேச்சில் வெளிக் கொணர முடியவில்லை. கோபமே மேலோங்கி இருந்தது !

இந்தக் கூட்டத்தில் வண்ணதாசன் தீபத்தில் எழுதிய ஒரு சிறுகதை சென்ற 1974ம் ஆண்டின் மிகச் சிறந்த கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தீர்ப்பு வழங்கியவர் : "சுஜாதா".

மாதமொன்றாகச் சென்ற ஆண்டு இலக்கிய சிந்தனை தேர்ந்தெடுத்த பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கிய நூல் கிடைக்குமிடம்: வானதி பதிப்பகம், சென்னை — 17.

ராஜாஜி சிந்தனை


சீனத் தடுப்புச் சுவர்

அஹிம்சையில் எனக்குள்ள நம்பிக்கையை நான் கைவிடவில்லை. ஆனாலும் நாற்பது குடும்பங்களுக்கு ஒருவர் என்ற ரீதியில் இருபது லட்சம் வீரர்கள் அடங்கிய ஒரு சேனையைத் திரட்ட வேண்டும் என்று கோருகிறேன். இவர்கள் இந்தியப் பாதுகாப்புக்காகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு பயிற்சியும் பெற வேண்டும். முப்பத்தைந்து வயது வரை பொதுத் தொண்டாற்ற வேண்டும். அதுவரை திருமணமும் செய்து கொள்ளக் கூடாது. இதற்கான செலவுகள் எவ்வளவானாலும் பாதகமில்லை என்று இந்தத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இதுவே நாம் எழுப்பக்கூடிய மிகச் சிறந்த சீனத் தடுப்புச் சுவர். இமயமலை இவ்விஷயத்தில் நமக்கு உதவவில்லை.

இந்தப் பாதுகாப்பு அணி கடமை உணர்வை மக்களிடையே தூண்டும், லஞ்ச ஊழல்கள் குறையவும் உதவும். இதேபோல ஒரு நர்ஸ்கள் படையும் திரட்ட வேண்டும்.

டாங்குகளும் விமானங்களும் அவசியம்தான். ஆனால் வீரர்கள் அவற்றை விட முக்கியம்.

— சுயராஜ்யா, அக்டோபர் 16, 1965



இவரைப் பற்றி

சியாங் கெ ஷேக்

வியாபாரக் குடும்பத்தில் பிறந்த சியாங் சீனாவிலும் ஜப்பானிலும் இராணுவக் கல்வி பெற்றார். டோக்கியோவில்தான் பிரபல சீனப் புரட்சித் தலைவர் சன் யட்–சென்னை சியாங் சந்தித்தார்.



சியாங்கை ருஷ்யாவுக்குப் பயிற்சிக்கென அனுப்பிய சன், சியாங் திரும்பி வந்ததும் வாம்போவா இராணுவ அகாடமியின் தலைவராக அவரை நியமித்தார். சீனாவை ஆண்ட மஞ்சு மன்னர்களின் முடியாட்சியை ஒழித்து 1912ல் சீனக் குடியரசை ஸ்தாபித்தது கொமின்டாங் கட்சி. 1925ல் சியாங்கின் அரசியல் குரு சன் இறந்த மறு வருடம் கொமின்டாங் கட்சியின் தலைவரானார் மார்ஷல் சியாங் கெ ஷேக். நாளடைவில் கட்சியில் பிளவு ஏற்பட்டுக் கம்யூனிஸ்ட் இடதுசாரி ஒன்று உருவாயிற்று.

1937ல் ஜப்பான் சீனாவைத் தாக்கிய பொழுது, கம்யூனிஸ்டுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது தேசியவாதிகளுக்கு. இரு சாரிகளும் ஒருங்கிணைந்தபின் அனைத்து சீன தேசிய இராணுவத்தின் தலைவரானார், சியாங். முழு இராணுவப் பொறுப்பையும் ஏற்ற சியாங், 'ஜெனராலிஸ்மோ' (இராணுவப் பெருந் தலைவர்) என அழைக்கப்பட்டார். ஜப்பானுடன் நிகழ்ந்த போரில் முதலில் சீனர்களுக்குத் தோல்வி ஏற்பட்டதும், சியாங்கின் படைகள் தலைநகர் நான்கிங்கையே இழந்ததும், சங்கிங் நகரை இராணுவத் தலைவராகக் கொண்டு சியாங் போர் நிகழ்த்தி 1945ல் ஜப்பானை வெற்றி கொண்டதும் சரித்திரப் புகழ்பெற்ற நிகழ்ச்சிகள்.

பின்னர் கம்யூனிஸ்ட்டுகளின் தொல்லைகள் தொடர்ந்தன. 1949க்குப்பிறகு கம்யூனிஸ்ட்டுகளால் நாட்டிலிருந்தே விரட்டப்பட்டு டைவான் எனப்படும் ஃபார்மோஸா தீவுக்குக் குடிபெயர்ந்து சீனாவின் அரசாங்கத்தை அமைத்தார்.

கடந்த ஏப்ரில் 5ம் தேதி 87வது வயதில் காலமானார்.

'பாணன்'

50,000 ரூபாய் மதிப்புள்ள பரிசுகள் பெறுங்கள்

பாரியின் 'ஏற்ற தருணம் எது' போட்டியில்

சொருங்கள்

2 முதற் பரிசுகள் — ரூ 10,000 மதிப்புள்ள நகைகள், உங்கள் விருப்பம் போல்

2 இரண்டாவது பரிசுகள் — ரூ 5,000 மதிப்புள்ள நவீன குக்கிங் ரேஞ்ச் அல்லது ரேப்ரிஜிரேட்டர்

50 ஆறுதல் பரிசுகள் — ரூ 400 மதிப்புள்ள காஞ்சீபுரம் பட்டுச்சேலைகள்





முழு விவரங்களடங்கிய நுழைவுத்தாட்கள் உங்கள் அருகாமையிலுள்ள பாரி விற்பனையாளரிடம் பெறுங்கள்.

பாரியின் 'ஸ்வீட் பாங்க்' தரமான பாரி மிட்டாய்கள் அடங்கியது. கண்ணைக் கவரும் ஆறு அழகிய வண்ணங்களில். 450 கிராம் மிட்டாய்களுக்கு விலை ரூ 12 தான்!

முந்துங்கள்! போட்டி முடியும் நாள் ஜூன் 15, 1975

பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை

Parry's

SAA/PRS/1665

ஞாலத் தந்தையும் ஞானத்தனயனும்



இரண்டு ஆண்டுகள் இரண்டு மாதங்கள் இரண்டு நாட்கள் பெரியவர்களைப் பிரிந்து வடநாடு யாத்திரை சென்றிருந்த புதுப் பெரியவர்கள் தமிழகம் திரும்பிக் கலவையில் தாயோடு கன்று இணைந்தாற்போலப் பெரியவருடன் கலந்து உரையாடி உறவாடினார்கள்.

பத்தாந் தேதி இரவு பத்து மணிக்கு மேல் பெரியவர்களைத் தனியாகச் சந்தித்து ஒரு மணி நேரத்துக்கு மேல் பேசினார்கள்.

கலவை தன் பெயருக்கேற்பப் பொருள் பொதிந்ததாயிற்று. ஆத்ம — பரமாத்ம ஐக்கியத்துக்குச் சான்றே போல் இரு குருமார்களும் கலந்து உரையாடியது ஒருபுறமிருக்க, காஞ்சி காமகோடி பீடத்தை இவர்களுக்கு முன் அலங்கரித்த இரு பெரியவர்கள் இங்கு பரம்பொருளுடன் இணைந்து இவ்வூருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அவர்களது பிருந்தாவனங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டினாற்போல் இருப்பதாலும் இவ்வூருக்கு இந்தப் பெருமை ஏற்பட்டிருக்கிறது.

ஞாலத் தந்தையும் ஞானத் தனயனும் கலந்து என்ன உரையாடினார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற துடிப்பு புதுப் பெரியவரிடம் தனிமையை நாடும் துணிச்சலை எனக்குக் கொடுத்திருந்தது.

என் உள்ளக் கிடக்கையைப் புரிந்து கொண்ட புதுப் பெரியவர்கள் நடந்ததை அருள் உள்ளத்துடன் விவரித்தார்கள்:

''அன்று வடதேசத்து யாத்திரைக்குப் புறப்பட்டபொழுது இப்படித்தானே இருந்தாய்: என் உடல்நிலை பற்றிய கவலை, என் கண்களைப் பற்றிய பிரச்னை. எல்லாம் உன்னை வாட்டியதல்லவா? உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று பன்னிப் பன்னிச் சொன்னாயே நினைவிருக்கிறதா? இப்பொழுது பார்! என் உடல் தேறியிருக்கிறது. அன்று உட் கண்ணால் உன்னை நோக்கிவிடையளித்தேன். இன்று ஊனக் கண்ணாலும் பார்த்து மகிழ்கிறேன்!''

இப்படிக் கூறிக் குறுநகை புரிந்து குறுநகையைப் படரவிட்டுப் புதுப் பெரியவரை மெய் சிலிர்க்க வைத்தவர்கள், ''இந்த யாத்திரையில் என்ன கண்டாய்?'' என்று கேட்டார்கள்.

''பெரியவர்கள் காணுததை நான் என்ன கண்டேன்?'' என்று கேட்ட புதுப் பெரியவர்கள் இப்போது நமக்காகச் சொன்னார்கள்:

''எந்தச் சக்தி பாரதத்தை எப்படிப் பிரித்தாலும், பாரத தேசம் ஒன்று என்பதைக் கண்டேன். அந்த இணைப்புச் சக்தி ஆன்மிகத் துறைக்கே உரியது என்பதையும் கண்டேன். தென்னாட்டவர்களைப் பார்த்தால் வட நாட்டவர்களுக்கு ராமேசுவரம் நினைவுக்கு வருகிறது. வட நாட்டவர்களைப் பார்த்தால் தென்னாட்டவர்களுக்குக் காசி நினைவுக்கு வருகிறது. நடை, உடை, பாவனை, மொழி முதலியவை வேறுபட்டாலும், இந்து மதத்தினர் மட்டுமின்றி, எந்த மதத்தினருமே ஆன்மிகத் துறை மூலம் இரண்டறக் கலக்கவே முயல்கின்றனர்.

''மக்களுக்கு வாழக் கற்றுத் தந்த ஆதி சங்கரர் பாரதத்தின் இணைப்புக்கு எப்படி அடிகோலியிருக்கிறார் என்பதையும் அவர் வழி வந்தவர்களுக்கு மக்கள் எத்தகைய மதிப்புத் தருகிறார்கள் என்பதையும் எட்டுத் திசைகளிலும் கண்டேன்.''

''நமது பெரியவர்கள் அந்தக் காலத்தில் வட இந்திய யாத்திரை சென்றிருந்தார்களா,



புகைப் படங்கள் :
மேலே: ஜெ. சடகோபன், கீழே: உத்ரா

அதைப் பற்றி அங்கு யாருக்காவது நினைவு இருக்கிறதா?'' என்று நான் கேட்டேன்.

''இருக்கிறதாவா? அந்நாட்களில் அவரை வரவேற்று உபசரித்தவர்கள் பலர் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் வந்து போனதைக் கதை கதையாகக் கூறி, நினைவுகூர்ந்து மகிழ்கிறார்கள்! காசி மன்னர் எனக்கு அளித்த வரவேற்பில் கூறியது ஒன்று போதுமே, மக்களின் மனத்தில் நமது பெரியவர்களின் நினைவு எவ்வளவு பசுமையாக இருக்கிறது என்பதற்கு!'' என்று கூறிக் காசி மன்னரின் வரவேற்புரையை நினைவுகூர்ந்தார்கள், புதுப் பெரியவர்கள்:

''ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி காசிக்கு விஜயம் செய்தபொழுது எனக்கு வயது பன்னிரண்டோ பதின்மூன்றோதான். என் தந்தை என்னை அருகில் வைத்துக் கொண்டு ஆசாரிய ஸ்வாமிகளுக்கு வரவேற்பு அளித்தார்கள். பசுமரத்தாணிபோல அந்த நிகழ்ச்சி என் நினைவில் இன்னும் பதிந்திருக்கிறது. இப்பொழுது நான் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி அவர்களை வரவேற்கிறேன்; என் மகனை — இளவரசனை — அருகில் வைத்துக் கொண்டு வரவேற்கிறேன். இந்த நாவிழை சாசுவதமாக நீண்டு வளர வேண்டும். பெரியவர்கள் எங்கள் பரம்பரையை இப்படி வாழ்த்தியருள வேண்டும்!''

காசி மன்னர் தம் பரம்பரைக்கு வாழ்த்துப் பெறும் முகமாகக் காசிப் புலவர்களது பெருமையையும் அல்லவா நிலைநாட்டிவிட்டார்! காஞ்சிப் பீடம் என்றென்றும் நிலையாக நின்று அறப்பணி புரிந்து அளவிறந்த புகழ் பெறும் என்பதை யல்லவா கூறாமல் கூறியுள்ளார்!

இப்படி நான் அசை போட்ட வேளையிலே புதுப் பெரியவர்கள் கூறினார்கள்:

''பெரியவர்கள் என் யாத்திரையைப் பற்றி விசாரித்ததோடு மட்டும் அல்ல; அந்த நாட்களில் தாம் போயிருந்த ஊர்களின் பெருமைகளையும் எடுத்துக் கூறினார்கள்:

''ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் ஜாஜ்பூர் என்று ஓர் ஊர். இந்த ஊரைப் பார்த்தால், கோயில் குளங்கள் மிகுதியாக உள்ள நம் தஞ்சாவூரோ, கும்பகோணமோ என்று தோன்றும். இங்கு யாகம் செய்தவர்கள் ஏராளமானபடியால் இந்த ஊருக்கு 'யாஜ்பூர்' என்று பெயர் வந்தது. அதுவே ஜாஜ்பூர் ஆகியது!''

புதுப் பெரியவர்கள் தொடர்ந்தார்கள்: ''இவ்வூரில் நான்கு வேதங்களும் அறிந்தவர்கள் இருக்கிறார்கள். எம வாதனையிலிருந்து தப்புவிக்கும் வைதரணி நதி இங்கு ஓடுகிறது. பெரியவர்கள் கூறினாற்போலவே இன்றும் இவ்வூர் திகழ்கிறது!''

எம்மதமும் சம்மதமேயானாலும் எல்லாத் தெய்வங்களும் உடன்பாடே ஆனாலும் இஷ்ட தெய்வமாக ஒன்றைப் பற்றியே பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும் என்று புதுப் பெரியவர்கள் கூறிக்கொண்டிருந்தபொழுது அருகில் நின்ற ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'ஒன்றே தெய்வம். அதையே பற்றி நிற்க வேண்டும்' என்னும் பொருள் தரும் காரைக்கால் அம்மையாரின் பாடலை நினைவுபடுத்தினார். அப்பொழுது சுவாதி நீரை மட்டுமே பருகும் சாதகப் புள்ளாகி, ஸ்ரீராமனது பெருமை என்னும் நீருக்காகத் தவம் கிடக்கும் துளசிதாஸர் என் நினைவுக்கு வந்தார்.

பாரதம் முழுவதும் இப்படிக் கருத்து ஒற்றுமை பின்னிப் பிணைந்திருப்பதைக் கூறி வந்த புதுப் பெரியவர்கள் உலகத்தைப் புரிந்து கொள்ள, உலகம் நம்மைப் புரிந்துகொள்ள இன்றைய சுற்றுலா முறையைக் காட்டிலும் அன்றைய ஸ்தல யாத்திரைச் சுற்றுலா முறை எப்படிச் சிறந்திருந்தது என்பதை விளக்கினார்கள்.

நாங்கள் போனபொழுது புதுப் பெரியவர்கள் ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜை செய்து கொண்டிருந்தார்கள். உள்ளே பெரியவர்கள் இளையாத்தங்குடி பெரியவர்களது ஆராதனையில் ஈடுபட்டிருந்தார்கள். கொட்டகையிலோ ஏகக் கூட்டம். வைத்த கண் வாங்காமல் ஒருமித்த சிந்தனையோடு மக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார்கள்.

கடமைகளிலிருந்து விடுபட்டு இவ்வுலக வாழ்வுக்கு மீண்டு வந்த பெரியவர்கள் சப்பணம் கட்டிக் கொண்டு நிலையான இள நகையை உதடுகளில் தேக்கிக் குறுகுறுத்த அருட்பார்வையுடன் அனைவரையும் நோக்கினார். ஸ்ரீ கி. வா. ஜ. வுடன் உலகத் தமிழ் மகாநாடு பேச்சைத் தொடங்கியவர், கலாச்சார ஆராய்ச்சியில் இறங்கினார். அத்தனை நிபுணர்களின் ஆராய்ச்சி உரைகளையும் படித்து எங்கெங்கெல்லாம் மாறுபாடுகள் தோன்றினவோ, விண்டு வைத்தார். 'என்ன ஆராய்ச்சி நோக்கு!' என்று கூடியிருந்தோர் வியந்து நின்ற வேளையிலே குறுநகையைப் பல பொருள்களில் விளையாட விட்டு ஒரு முத்தாய்ப்பும் வைத்தார்:

''காலப் போக்கில், சுற்றுச் சூழலுக்கு ஏற்ப இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் மாறுபடுவதுண்டு; வேறுபடுவதுண்டு. இப்படி ஆராய்ச்சி செய்வதில் ஓர் ஆத்ம சந்தோஷமே தவிர....''

நடமாடும் தெய்வமாம் பெரியவர்களைத் தரிசித்து ஆத்ம சந்தோஷம் பெற வந்தவர்களின் துடிப்பு வெடித்தது: ''பார்த்தவர்கள் விலகினால் அல்லவா பின்னால் இருப்பவர்கள் தரிசிக்கலாம்!''

ஆனால் யாருமே அசைந்து கொடுக்கவில்லை. ஆத்ம சந்தோஷம் என்ன, அவ்வளவு இலகுவில் கிடைத்து விடக்கூடிய பொருளா?

இப்படி மக்கள் கூடுவார்களே என்ற எண்ணத்தில் பெரியவர்கள் புதுப் பெரியவர்களைக் கேட்டார்களாம்: ''வசந்த நவராத்திரி எங்கே வைத்துக் கொள்வதாக உத்தேசம்?''

''இங்கேதான்!''

''இடம் போதுமா? மிகச் சிறிய இடம் ஆயிற்றே!''

''யார் சொன்னது? பெரியவர்களது இதயம் விசாலமாயிற்றே! அதில் இல்லாத இடமா? எத்தனை பேர் வந்தாலும் கொள்ளுமே!''

இப்படிப் புதுப்பெரியவர்கள் சொல்லவில்லை; செயலில் காட்டி விட்டார்கள்.

இன்று வசந்த நவராத்திரிக்காகக் கலவை, திருவிழாக் கோலம் பூண்டு, வந்தவர்களையெல்லாம் வரவேற்று நிற்பதன் இரகசியம் இதுவே.

— ரா. வீழிநாதன்

முருகப்பெருமான்

(7)

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

மேகத்தில் நாம் பார்க்கிற மின்னல் ஜோதி வெளியிருட்டை மாத்திரம் வெகு சிறிது காலத்துக்கு நீக்குகிறது. சுப்பிரமணியமோ அருள் ஒளி—அருட்பெருஞ்சோதி. அது வெளியிருட்டு, உள்ளிருட்டு இரண்டையும் சாசுவதமாக நீக்குவது. மின்சாரம் மாதிரியே ஒருத்தரை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியாமல் தன்னிடம் இழுத்துக் கொள்கிற சக்தி இதுவென்றாலும், இங்கே 'எலெக்ட்ரோக்யூட்' ஆகாமல் அமிருதமாக மாறிவிடுவோம். அந்த ஜோதி நம்மையும் அது போலவே செய்துவிடும். அருணகிரிநாதர், ''கந்தர் அநுபூதி''யில் இந்தப் பெரிய அநுபவத்தையே சொல்கிறார். ஒன்று இரண்டாகப் பிரிந்து, மறுபடியும் ஒன்றாகச் சேர்ந்தபின் பலவாக நினைக்கிற நம்மையும் இழுத்துக் கடைசியில் அந்த ஒன்றாகவே ஆக்குகிறது.

அருணகிரி 'திருப்புகழ்' பாடல் ஒவ்வொன்றையும் 'பெருமாளே' என்கிற வார்த்தையுடனேயே முடிக்கிறார். பொதுவாக 'பெருமாள்' என்றால் மகாவிஷ்ணுதான். சிவசக்தியின் பூர்ண தேஜஸாக இழுக்கப்பட்ட சுப்பிரமணியத்தை இப்படிப் பெருமாளாகச் சொல்லிச் சொல்லி அவர் முடிப்பதும் அழகாகத்தான் இருக்கிறது.

தமிழ் நாட்டிலேயே பொதுவில் இவரை மகா விஷ்ணுவுடன் சம்பந்தப்படுத்திப் பேசுவது அதிகம். 'மருகன்' 'மருகன்' என்றும் முருகனைச் சொல்கிறோமே இது எதனால்? அவர் அம்பாளுக்குச் சகோதரராக இருக்கிற மகாவிஷ்ணுவின் மருமகன் என்பதால்தான். 'மால் மருகன்' என்பார்கள். மருமகன் என்றால் மாப்பிள்ளை என்றும் அர்த்தம். 'மருமகப் பிள்ளை' என்பார்கள். பூர்வத்தில் வள்ளி தேவசேனைகள் மகாவிஷ்ணுவின் புத்திரிகள்தான். அதனால் மாமாவான விஷ்ணு இவருக்கு மாமனாராகவும் இருக்கிறார். சிவனுக்கு மகன் — மகாவிஷ்ணுவுக்கு மருமகன் என்ற பெருமை இவருக்கே இருக்கிறது.

ஆனால் வட தேசத்தில் இந்த மாமனார் சமாசாரமே சுப்பிரமணியருக்குக் கிட்டே வரக் கூடாது. அவர் அங்கே எந்நாளும் பிரம்மசாரித் தெய்வம்தான். சில இடங்களில் சுப்பிரமணியர் கோயிலுக்குள் ஸ்திரீகளை அநுமதிப்பதுகூட இல்லை. வடக்கே அவரைக் 'கார்த்திகேயர்' என்றே சொல்வார்கள்.

பரமேசுவரனின் கண்களிலிருந்து ஆறு பொறிகள் வெளிவந்து, அவை சரவணப் பொய்கையில் தங்கி ஆறுமுகனாக உருக்கொண்டன. அப்போது கார்த்திகைப் பெண்கள் — கிருத்திகா தேவதைகள் — என்கிற ஆறு பேர் அவரை எடுத்துப் பாலூட்டினார்கள். ஆகாசத்தில் கிருத்திகா நக்ஷத்திரங்கள் என்று ஆறு (Constellation) இருக்கின்றனவே, இவற்றின் அதிதேவதை அவர்களே. கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் அவருக்குக் 'கார்த்திகேயர்' என்ற பெயர் வந்தது. தனக்குத் தாயார் மாதிரி இருந்தவர்களை வைத்து, அவர்களுக்குப் பெருமையாகப் பெயர் கொண்டார். வடக்கே இந்தப் பெயரே வழங்குகிறது. இல்லாவிட்டால் ''குழந்தை'' என்பதை வைத்துக் ''குமார'' என்பார்கள். 'குமாரஸ்வாமி' என்று நாம்கூடச் சொல்கிறோம். 'குமரன்' என்று குறுக்கிச் சொல்வது தமிழ் மொழிப் பண்பு. வடக்கே 'குமார்' என்றால் சுப்பிரமணியர்தான். சிவசக்திகளின் பிள்ளை — சர்வலோக மாதா பிதாக்களின் விசேஷமான புத்திரன் — இவர்தான். நாம் பிள்ளை (பிள்ளையார்) என்றால் விக்நேசுவரரைத்தான் நினைக்கிறோம். ஆனால் ஏனோ வடக்கே கணேசருக்கு 'குமார' சப்தத்தைக் காணோம். ஷண்முகரே அங்கே குமாரர். காளிதாஸன் செய்திருக்கிற காவியத்தைப் பாருங்கள் — 'குமார ஸம்பவம்' என்றே பெயர் இருக்கிறது.

'குமார ஸம்பவம்' என்ற சொற்றொடர் சாக்ஷாத் வால்மீகி ராமாயணத்தில் வருகிறது. பால காண்டத்தில் விசுவாமித்திரர் ராமலக்ஷ்மணர்களுக்கு ஸ்கந்த உத்பத்திக் கதையை விரிவாகச் சொல்கிறார். இதன் முடிவில் — வால்மீகி சாதாரணமாக 'இந்தக் கதை கேட்டதற்கு இந்தப் பலன்' என்று 'பலச்ருதி' சொல்வதில்லை என்றாலும், விதிவிலக்காக — சொல்கிறார்: ஸ்ரீராமனிடம் விசுவாமித்திரரின் வசனமாகச் சொல்கிறார்: ''குமார சம்பவக் கதையைச் சொன்னேன். இது தனத்தையும் கொடுக்கும், புண்ணியத்தையும் கொடுக்கும். அப்பா காகுத்ஸா, இந்தப் பூலோகத்தில் மட்டும் ஒரு மநுஷ்யன் கார்த்திகேயனிடம் பக்தி வைத்துவிட்டால் போதும், தீர்க்காயுள் புத்ரபௌத்ர சௌபாக்கியம் எல்லாம் அவனுக்குக் கிடைத்துவிடும். முடிவிலோ ஸ்கந்த லோகத்துக்கே போய் அவருடனேயே நித்திய வாஸம் செய்யலாம்'' என்கிறார். (பாலகாண்டம் — 37ம் ஸர்க்கம், சுலோ 31—2)

இங்கே 'குமார ஸம்பவம்' என்று ஆதி கவி சொன்னதைத்தான் மங்கள வாக்காகக் கொண்டு காளிதாஸன் தன் காவியத்துக்கு அதே பெயரை வைத்தான்.

'குமாரன்' என்ற பெயரை வைத்துத்தான் 'கௌமார மதம்' என்று ஏற்பட்டிருக்கிறது. ஷண்மதங்கள் என்று ஆறைச் சொல்வார்கள்: கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடுவது காணபத்யம்; சூரியனை முழுமுதலாகக் கொள்வது ஸௌரம்; அம்பாளையே (சக்தி) பரம தாத்பரியமாகச் சொல்வது சாக்தம்; சிவனைச் சொல்வது சைவம்; விஷ்ணுவைச் சொல்வது வைஷ்ணவம்; இன்னொன்று சுப்பிரமணியத்தையே பரமாத்வாக உபாஸிப்பது. இங்கே, 'குமார வழிபாடு' என்ற பொருளில் 'கௌமாரம்' என்றே பெயர் உண்டாகியிருக்கிறது. (தொடரும்)

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி

Sobhagya GR 74-2-Tam.



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பமிக்கமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மாக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)





சொல்பவர்: எஸ்.வி.சாரி

தலைவர் தரிசனம்-15

டாக்டர் எம். சந்தோஷம்

டாக்டர் சந்தோஷம் அவர்களுடன் எனக்கு ஏறத்தாழப் பத்து வருடங்களுக்கு முன்பு அறிமுகம் கிடைத்தது. அப்போது அவர் சுதந்திரக் கட்சியில் இருந்தார். அமரர் ராஜாஜி அவர்களிடம் சந்தோஷம் அவர்களுக்கு அளவில்லா ஈடுபாடு. ராஜாஜி அவர்களின் காலத்துக்குப் பிறகு, சூழ்நிலைகளின் போக்கினால் ஏறத்தாழ ஒரே நோக்குடைய பல்வேறு அகில இந்தியக் கட்சிகள் ஒருங்கிணைந்து 'பாரதீய லோக தளம்' உருவான போது, சந்தோஷம் அவர்களும் இந்தப் புதிய ஸ்தாபனத்தின் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். நேற்று மட்டுமல்ல, இன்றும், நாளையும் கூட டாக்டர் அவர்களுக்கு அரசியல் குரு ராஜாஜிதான்.

சந்தோஷம் அவர்களின் குடும்பம் மிகப் பெரியது. இவருடைய தந்தை வழிப் பாட்டனார் ஒரு டாக்டர். மதுரம் என்று பெயர். ஆகவே சந்தோஷம் அவர்களின் பெயரும் டாக்டர் மதுரம் சந்தோஷம்தான். சிறு வயதிலேயே 'தாத்தா மதுரத்தைப் போல் இந்தப் பேரன் மதுரமும் ஒரு நாள் பெரிய டாக்டராகப் போகிறேன்' என்று அடிக்கடி சொல்லுவாராம். அந்த எண்ணம் நூற்றுக்கு நூறு பலித்தது பிற்காலத்தில். இன்று சந்தோஷம் அவர்கள் நன்கு அறிமுகமான அரசியல்வாதி மாத்திரமல்ல! நுரையீரல் வைத்தியத் துறையில் நாடறிந்த ஒரு நிபுணரும் கூட!

மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் சந்தோஷம் அவர்கள் பல குரல் மன்னன். அதாவது, 'மிமிக்கிரி' 'மாநோ ஆக்டிங்' போன்ற கலைகளில் கைதேர்ந்தவர். நேருஜியே ஒரு முறை இவர் மிமிக்ரியைக் கேட்டுச் சிரித்துப் பாராட்டியிருக்கிறார்.

மருத்துவப் படிப்பை வெற்றியுடன் முடித்ததை யொட்டிச் சில ஆப்த நண்பர்களுக்கு ஒரு சிறு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அன்று காலை ஊரிலிருந்து 'தகப்பனார் உடல் நிலை மோசம்' என்று தந்தி வந்தது. உடனே ஊருக்குக் கிளம்பி விட்டார். ரெவினியூ இலாக்காவில் உத்தியோகம் பார்த்து வந்த இவர் தகப்பனார் இவர் ஊருக்குப் போன சில நாட்களில் காலமாகிவிட்டார். தாம் ஒரு டாக்டராகி, தம் தந்தை பார்க்கவில்லையே என்ற ஏக்கம் இவருக்கு நிறைய உண்டு. பிற்காலத்தில் தாம்பரத்தை அடுத்து நுரையீரல் வைத்தியத்துக்கான 'சானடோரி'யத்தை எழுப்பிய போது தம் ஏக்கத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் அந்தக் கட்டடத்தில் ஒரு நினைவுக் கல்லைப் பதித்தார் : 'பாலும் தேனும் ஓடும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அந்த வளமையைப் பார்த்து ரசிக்க அவர் வாழ்ந்திருக்கவில்லை.' இந்த வாசகத்தை 'பைபிளிலிருந்து' எடுத்துப் பொறிக்கச் செய்தார். எத்தனையோ குடும்ப சிரமங்களினூடே தம்மை ஆளாக்கிவிட்ட தந்தைக்கு இவ்விதம் ஓர் எளிய ஆனால் ஆத்மார்த்தமான அஞ்சலி செலுத்தினார்.

ஒரு சிறந்த மருத்துவராகப் பரிணமித்துக் கொண்டே அரசியலிலும் ஈடுபடலானார். 1959ல் ராஜாஜி அவர்கள் சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த போது சந்தோஷம் அவர்கள் உடனே ராஜாஜியைச் சந்தித்தார். சுதந்திரக் கட்சியில் சேர்ந்துவிடத் தாம் விரும்புவதாகவும் சொன்னார்.

''அடடா ! நீங்கள் பழைய கட்சியிலேயே இருந்தால் உங்களுக்கு மந்திரியாகும் வாய்ப்புக்கூடக் கிடைக்குமே ! இங்கே அந்தவிதமான ஆசைகளுக்கு இடமே இருக்காதே !'' என்றார் ராஜாஜி சிரித்துக் கொண்டே.

சந்தோஷம் சுதந்திரக் கட்சியின் தொண்டராக மாறினார்.

1967ம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளராக நின்று பாராளுமன்றத்துக்கு டாக்டர் சந்தோஷம் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1971ம் ஆண்டு தேர்தலில் அவருக்கு 'டிக்கெட்' கிடைக்கவில்லை. இதைப் பற்றி ராஜாஜியிடமே கேட்டுவிட்டார். ''டாக்டர்! எனக்கு வயசாயிடுத்து இல்லியா ? தேர்தல் வேலைகளை யெல்லாம் கவனிக்க முடியுமா ?

நீங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் உங்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தவில்லை'' என்ற பதில் வந்தது ராஜாஜியிடமிருந்து.

கருத்து வேறுபாடுகள் சில இருந்தாலும், ஒரு விஷயத்தைப் பற்றி ராஜாஜி முடிவாகச் சொல்லிவிட்டால் அப்படியே ஏற்றுக் கொள்ளும் சுபாவம் சந்தோஷம் அவர்களுக்கு உண்டு.

மரணத்தை அடிக்கடி பார்க்கும் மருத்துவராக இருந்தாலும் ராஜாஜியின் மரணத்தை இவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. பெரிதும் அதிர்ந்து போனார்.

சந்தோஷம் அவர்களுக்கு விளையாட்டுக்களில் நிறைய ஈடுபாடு உண்டு. மாநில 'வாலிபால்' சங்கத்துக்குப் பதினேழு ஆண்டுகள் தலைவராக இருந்திருக்கிறார்.

இரக்கம் மிகுந்த சுபாவம் இவருக்கு. கால் ஊனமுற்றவர்களுக்கு இதுவரை பதினைந்துக்கு மேலாகவே விசேஷ சைக்கிள்கள் வாங்கிக் கொடுத்து ஊக்குவித்திருக்கிறார்.

மருத்துவப் பணிக்கு இடையே பாரதிய லோக தளத்தின் வேலைகளிலும் தம் கவனத்தை நிறையச் செலுத்துகிறார். விவசாயிகள், நெசவாளிகள் போன்ற சாதாரண மக்களும், தாங்களாகவே இந்தக் கட்சியில் சேர முன் வருவது கண்டு, கட்சி வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல சூசகம் என்று நம்புகிறார் டாக்டர் சந்தோஷம்.

கேட்டு எழுதியவர்: **கோமதி ஸ்வாமிநாதன்**

வட்ட மேஜை

"**க**ல்வித்தரம் குறைந்ததா?'' தலையங்கம் கண்டேன். கல்வி கற்பிப்பவர்கள், போதிப்பவர்கள் ஆகியோரின் தரம் குறைந்து விட்டது என்பது வாஸ்தவம்தான். ஆனால் அதற்குக் காரணம் என்ன? கல்விக் கூடங்களிலே அரசியல் — அநாகரிகம் — அதிகார ஆதிக்கம் ஆகியவை புகுந்தால் தரத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? அதுமட்டுமல்ல. எந்த ஒரு தாக்குதலுக்கும் முதலில் ஆளாவது ஆசிரியர்களே - கல்வி போதிப்பதைத் தவிர அவர்களிடம் வேறு சில காரியங்களும் (உதாரணமாகக் கட்டிட நிதி வசூல்) ஒப்படைக்கப்படுகின்றன. அதுவுமல்லாமல் அவர்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதாரத் துறையில் எவ்வளவு குறைந்த நிலையில் இருக்கிறது? இவ்வளவுக்கும் மேலாக ஆசிரியர்கள் ஒருமித்த மனத்துடன் கல்வி போதிப்பது சிரம சாத்தியமான காரியமல்லவா? இக்குறைகள் களையப்பட்டு — தேசியக் குழு சிபாரிசு செய்துள்ள தொழில் தொடர்புள்ள கல்வியைச் செயல்படுத்தினால் தரத்தை எதிர்பார்க்கலாம்.

சென்னை—33
4—4—75 ஸ்ரீப்ரியா ராஜன்

கலைமாமணி — தேசிய நாடகாசிரியர் — கவிஞர் திரு எஸ். டி. சுந்தரம் அவர்களுக்கு அண்மையில் மத்திய சங்கீத நாடக அகாடமி 'சிறந்த நாடகாசிரியர்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள். இத்தருணத்தில் அவரது முப்பதாண்டு கலைப் பணியைப் பாராட்டி அவரது கலைப் பணி மேலும் தொடர்ந்து நடைபெற ஒரு நிதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி வழங்குவதனை முன்னிட்டு 1975 மே மாதம் 10ந் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கலைவாணர் அரங்கில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற விருக்கிறது. அந்நிகழ்ச்சியில் கலைமாமணி திரு டி. எம். சௌந்தரராஜன், டாக்டர் எம். பாலமுரளி கிருஷ்ணா, இசைமணி சீர்காழி திரு எஸ். கோவிந்தராஜன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

கவிஞர் எஸ்.டி. சுந்தரம் அவர்களது அருங்கலைப் பணியை அறிந்த அன்பர்கள் தங்களால் ஆன நிதி உதவியினை அன்புகூர்ந்து, 'பொருளாளர், திரு எஸ். டி. சுந்தரம் பாராட்டுக் குழு, நெ. 4, எட்டாவது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை—28' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து, மேற்படி பணி சிறப்புடன் அமைய உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சென்னை—28 சீர்காழி எஸ். கோவிந்தராஜன்
7—4—75 அமைப்பாளர், பொருளாளர்

சமாதானத்துக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு அதை வாங்க மறுத்த வடக்கு வியட்நாம் தலைவர் தோ உண்மையிலேயே புத்திசாலி. 'வியட்நாமில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு ஓயவில்லை, அமைதி ஏற்படவில்லை. எனவே சமாதானப் பரிசை நான் ஏற்கமாட்டேன்' என்றும் கிஸ்ஸிஞ்சருக்குச் சமமாகத் தம்மை 'உயர்த்தி' விட்டதைத் தாம் ஒத்துக்கொள்வதாக இல்லை என்றும் கூறி அந்தப் பரிசை அவர் மறுத்ததாகப் பத்திரிகைகள் தெரியாத்தனமாக எழுதிவிட்டன. உண்மையில் இன்று சைகோனின் வாசற்கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் தமது கம்யூனிஸ்ட் படைகள் நாளை தென் வியட்நாமை விழுங்கிய பிறகு, தாம் சமாதானப் பரிசு பெற்றவர் என்று உலகம் சொன்னால் தமக்கு வெட்கமாக இருக்குமே என்ற தன்னடக்கத்துடன்தான் அவர் அந்தப் பரிசைப் பெற மறுத்திருக்கிறார்!

திருச்சி
30—3—75 க. நாராயணன்

புது வார்த்தைகளை ஆங்கிலத்தில் சிருஷ்டி பண்ணுவதாக சர்ச்சிலுக்குப் பெயர் உண்டு. தமிழில் **prejudice**க்கு 'மனக் கோணல்' என்று ஆசாரிய சுவாமிகள் குறிக்கும்போது புளகாங்கிதமுற்றேன். மிக நேர்த்தியாக அமைந்துவிட்ட இந்தப் பதத்துக்கு ஈடு இல்லை. அவர் காலில் நமஸ்காரங்கள் சேரட்டும்.

கம்பரசம்பேட்டை
10—4—75 என். பாலசுப்பிரமணியம்

இரண்டாம் அத்தியாயம்


மானவன்மன்

திருக்கழுக்குன்றத்தைச் சுற்றிலும் விசாலமான பிரதேசத்தில் பல்லவ சைனியம் தண்டு இறங்கியிருந்தது.

அந்தக் குன்றின் உச்சியில் வீற்றிருந்த சிவபெருமானாகட்டும், அந்தப் பெருமானைத் தினந்தோறும் வந்து வழிபட்டுப் பிரஸாதம் உண்டு சென்ற கழுகுகள் ஆகட்டும், அதற்கு முன்னால் அக்குன்றின் சாரலில் அம்மாதிரிக் காட்சியை எப்போதும் பார்த்திருக்க முடியாது. குன்றின் மேலேயிருந்து வடக்கே நோக்கினால் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு ஒரே யானைகள், யானைகள், யானைகள்! உலகத்திலே வேறெங்கும் இத்தனை யானைகள் இருக்க முடியாது. இவ்வளவு யானைகளும் ஒரே இடத்தில் வந்து சேர்ந்திருப்பதினால் பூமி நிலை பெயர்ந்து விடாதா என்றெல்லாம் பார்ப்பவர்கள் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பும்படியாக எல்லையில்லாத தூரம் ஒரே யானைகள் மயமாகக் காணப்பட்டது.

கிழக்கே திரும்பிப் பார்த்தால், உலகத்திலே குதிரை







களைத் தவிர வேறு ஜீவராசிகளே இல்லையென்று சொல்லத் தோன்றும். எல்லாம் உயர்ந்த ஜாதிக் குதிரைகள்; அரபு நாட்டிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் கப்பலில் வந்து மாமல்லபுரம் துறைமுகத்தில் இறங்கியவை. வெள்ளை நிறத்தவை, சிவப்பு நிறத்தவை, பளபளப்பான கரிய நிறமுடையவை, சிவப்பு நிறத்தில் வெள்ளைப் புள்ளி உள்ளவை ; —ஹா ஹா ! அந்த அழகிய மிருகங்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் என்று தோன்றும். போர்க்களத்துக்குப் போகும் இந்தப் பதினாயிரக்கணக்கான குதிரைகளில் எவ்வளவு குதிரைகள் உயிரோடு திரும்பி வருமோ என்று நினைத்துப் பார்த்தால் கதி கலங்கும்.

தென்புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் குதிரைகள் பூட்டிய ரதங்களும், ரிஷபங்கள் பூட்டிய வண்டிகளும், பொதி சுமக்கும் மாடுகளும் ஒட்டகங்களும் கோவேறு கழுதைகளும் காணப்பட்டன.

வண்டிகளிலே தானிய மூட்டைகளும் துணி மூட்டைகளும் கத்திகளும் கேடயங்களும் வாள்களும் வேல்களும் ஈட்டிகளும் சூலங்களும் வில்களும் அம்பறாத் தூணிகளும் இன்னும் விதம் விதமான விசித்திர ஆயுதங்களும் பிரமாண்டமான வடக் கயிறுகளும் நூல் ஏணிகளும் கொக்கிகளும் அரிவாள்களும் மண் வெட்டிகளும் தீப்பந்தங்களும் தீவர்த்திகளும் அடுக்கப்பட்டிருந்தன. வண்டியில் ஏற்றப்படாமல் இன்னும் எத்தனையோ ஆயுதங்களும் மற்றக் கருவிகளும் மலை மலையாக ஆங்காங்கு கிடந்தன. ஓரிடத்தில் மலை போலக் குவிந்திருந்த தாழங் குடைகளைப் பார்த்தால், அவற்றைக் கொண்டு பூமியின் மீது ஒரு சொட்டு மழைகூட விழாமல் வானத்தையே மூடி மறைத்துவிடலாம் என்ற எண்ணம் உண்டாகும்.




மேற்கே திரும்பினால், அம்மம்மா! பூவுலகத்திலுள்ள மனிதர்கள் எல்லாம் இங்கே திரண்டு வந்திருக்கிறார்களா, என்ன? அப்படிக் கணக்கிட முடியாத வீரர்கள் ஈ மொய்ப்பது போலத் தரையை மொய்த்துக் கொண்டு நின்றார்கள்! இராவணேசுவரனுடைய மூல பல சைனியம் என்று நாம் கேள்விப்பட்டிருக்கும் மகா சைனியத்திலேகூட வீரர்களின் எண்ணிக்கை இவ்வளவு இருந்திருக்குமா என்று சொல்ல முடியாது.

இவ்விதம் அந்த நாலு வகைப்பட்ட பல்லவ சைனியமும் தண்டு இறங்கியிருந்த பிரதேசம் முழுவதிலும் ஆங்காங்கு ரிஷபக் கொடிகள் வானளாவிப் பறந்து காற்றில் ஆடிக்கொண்டிருந்தன.

மேற்கூறிய சேனா சமுத்திரத்தை அணுகி, மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியானவர் ரதத்தில் வந்து கொண்டிருந்தார்.

அவரைத் தூரத்திலே பார்த்ததும், பூரண சந்திரனைக் கண்டு ஆஹ்லாதித்துப் பொங்கும் சமுத்திரத்தைப் போல் அந்தச் சேனா சமுத்திரத்தில் மகத்தான ஆரவாரம் ஏற்பட்டது.

சங்கங்களும் தாரைகளும் பேரிகைகளும் முரசுகளும் 'கடுமுகங்'களும் 'சமுத்திர கோஷங்'களும் சேர்ந்தாற்போல் முழங்கியபோது எழுந்த பேரொலியானது, நாற்றிசைகளிலும் பரவி, வான முகடு வரையில் சென்று,



அங்கிருந்து கிளம்பி எதிரொலியோடு மோதி, கொந்தளிக்கும் கடலில் அலைகள் ஒன்றையொன்று தாக்கி உண்டாக்குவது போன்ற பேரமளியை உண்டாக்கியது.

இன்னும் இந்த வீரர் பெருங் கூட்டத்தில் ஆயிரமாயிரம் வலிய குரல்களிலிருந்து, ''மாமல்லர் வாழ்க!'', ''புலிகேசி வீழ்க!'', ''காஞ்சி உயர்க'' ''வாதாபிக்கு நாசம்!'' என்பன போன்ற கோஷங்கள் காது செவிடுபடும்படியான பெருமுழக்கமாக ஏகோபித்து எழுந்து வானமும் பூமியும் அதிரும்படி செய்தன.

இப்படி ஆரவாரித்த மாபெரும் சைனியத்திலிருந்து தனியே பிரிந்து



உயர்ந்த ஜாதிக் குதிரை மீது ஆரோகணித்திருந்த ஒரு கம்பீர புருஷன் சக்கரவர்த்தியின் ரதத்தை எதிர்கொள்வதற்காக முன்னோக்கிச் சென்றான். ரிஷபக் கொடி ஏந்திய வீரர் இருவர் அவனைத் தொடர்ந்து பின்னால் சென்றார்கள்.

அப்படி மாமல்லரை எதிர்கொள்வதற்காகச் சென்றவன்தான் மானவன்மன் என்னும் இலங்கை இளவரசன்.

* * *

இந்த மானவன்மனுடைய தந்தையும் மகேந்திர பல்லவரும் நண்பர்கள். மகேந்திர பல்லவரைப் போலவே மானவன்மனுடைய தந்தையும் கலைகளை வளர்ப்பதில் ஈடுபட்டு ராஜ்யத்தை அதிகமாகக் கவனியாது விட்டிருந்தார். இதன் பலனாக அவர் இறந்ததும் மானவன்மன் சிம்மாசனம் ஏற இடங்கொடாமல் அட்டதத்தன் என்னும் சிற்றரசன் இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மானவன்மன் காஞ்சி மாமல்லருக்கு உதவி கோரித் தூது அனுப்பினான். அப்போதுதான் தொண்டை மண்டலத்தைப் பெரும் பஞ்சம் பீடித்திருந்தது. எனினும், மாமல்லர் ஒரு சிறு படையைக் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்தார். அந்தப் படை இலங்கையை அடையும் சமயத்தில் மானவன்மன் படுதோல்வியுற்றுக் காட்டில் ஒளிந்து கொண்டிருந்தான். மாமல்லர் அனுப்பிய சிறு படை அட்டதத்தனோடு போரிடுவதற்குப் போதாது என்று கண்ட மானவன்மன், பல்லவர் படையோடு தானும் கப்பலில் ஏறிக் காஞ்சிக்கு வந்து சேர்ந்தான்.

மகேந்திர பல்லவருடைய சிநேகிதரின் மகன் என்ற காரணத்தினால், மானவன்மன் மீது இயற்கையாகவே மாமல்லருக்கு அன்பு ஏற்பட்டது. அதோடு அயல்நாட்டிலிருந்து தம்மை நம்பி வந்து அடைக்கலம் புகுந்தவனாகையால் அன்போடு அநுதாபமும் சேர்ந்து அழியாத சிநேகமாக முதிர்ச்சி அடைந்தது. வெகு சீக்கிரத்தில் இணைபிரியாத தோழர்கள் ஆனார்கள்.


மாமல்லர் பரஞ்சோதிக்குத் தமது இருதயத்தில் எந்த ஸ்தானத்தைக் கொடுக்க விரும்பினாரோ, அந்த ஸ்தானத்தை இப்போது மானவன்மன் ஆக்கிரமித்துக் கொண்டான்.

உண்மையில் மாமல்லருக்கும் பரஞ்சோதிக்கும் மனமொத்த அந்தரங்க சிநேகிதம் எப்போதும் ஏற்படவேயில்லை. ஏனெனில், பரஞ்சோதியின் உள்ளத்தில், மாமல்லர் புராதன சக்கரவர்த்தி குலத்தில் உதித்தவராகையால் தாம் அவரோடு சரிநிகர் சமானமாக முடியாது என்னும் எண்ணம் எப்போதும் இருந்து வந்தது.

அதோடு, ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் வாதாபியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து சேனாபதி பரஞ்சோதி படையெடுப்புக்கு வேண்டிய ஆயத்தங்களில் முழுவதும் கவனத்தைச் செலுத்தியிருந்தார். ஊர் ஊராகச் சென்று வீரர்களைத் திரட்டுவதிலும், அவர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிப்பதிலும், அவர்களில் யானைப் படை குதிரைப் படைகளுக்கு ஆட்களைப் பொறுக்கி அமைப்பதிலும், ஆயுதங்கள் சேகரிப்பதிலும் அவர் பரிபூரணமாய் ஈடுபட்டிருந்தார். மாமல்லரிடம் சிநேக சல்லாபம் செய்வதற்கு அவருக்கு நேரமே இருப்பதில்லை.

எனவே, மாமல்லருக்கு மனமொத்துப் பழகுவதற்கு வேறொருவர் தேவை

கொசுக்கடியின் தொல்லை சகிக்கமுடியவில்லை





அதிகமாக விற்பனையாகும் கொசு விரட்டி

உங்களுக்குத் தேவை ஓடோமாஸ்



லட்சக் கணக்கானோர் நம்பிக்கையுடன் உபயோகிப்பது • சிறு குழந்தைகளுக்கும் முற்றிலும் பத்திரமானது.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, நகீந்தாஸ் மாஸ்டர் ரோடு, பம்பாய் 400 001.

CHAITRA BLS 45 TAM


"வறுத்து அரைத்த காபி யைப்போல் அபாரமான ருசி"

(விலையும் அதைவிட அதிகமில்லை)



ஒரு மாதமாக நாங்கள் அருந்தி வந்தது ப்ரூ என்பதை நம்ப மறுக்கிறார் என் கணவர். அதைவிட அதன் நயமான விலைதான் அவரை அதிக ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஒவ்வொரு கப் ப்ரூவுக்கும் வறுத்து அரைத்த காபியின் விலையைவிட அதிகமில்லை



தலைமுறை தலைமுறையாக நாங்கள் காபித் தூளையே உபயோகித்து வருகிறோம்.

இப்பொழுது இன்ஸ்டன்ட் காபிகளில் ப்ரூ ஒன்றையே விரும்பி சாப்பிடுகிறோம். ஏனென்றால், ப்ரூவின் ருசி, சிறந்த காபியின் ருசியேதான். ப்ரூ ஸ்ட்ராங்கானது-திடமானது. சிறந்த மணம் கொண்டது.

அவசரத் தேவைக்கு ப்ரூ ரொம்பவும் சௌகரியமானது. மிகச் சிக்கனமானது. சுமார் நான்கு ரூபாய்க்கு 30 கப்புக்கு மேல் ஸ்ட்ராங் காபி கிடைக்கிறது.

இன்ஸ்டன்ட் காபிகளில் நிகரற்றது ப்ரூ.

ப்ரூ ருசி சிறந்த காபியின் ருசி

யாக இருந்தது. அந்தத் தேவையை இலங்கை இளவரசன் மானவன்மன் பூர்த்தி செய்வித்தான்.

* * *

மானவன்மன் இலங்கையிலிருந்து காஞ்சி வந்தவுடனே மாமல்லர் அவனுடைய உதவிக்காகப் பெரிய சைனியத்தை அனுப்பி வைப்பதாகக் கூறினர். ஆனல், அப்போது வாதாபிப் படையெடுப்புக்காகச் சைனியம் திரட்டப்பட்டு வந்ததை மானவன்மன் அறிந்ததும் அந்தச் சைனியத்தில் ஒரு பெரும் பகுதியைப் பிரித்துக் கொண்டு போக விரும்பவில்லையென்பதைத் தெரிவித்தான். வாதாபி யுத்தம் முடியும் வரையில் அங்கேயே தான் தங்குவதாகவும் பிறகு இலங்கைக்குப் போவதாகவும் சொன்னன்.

இதனல் மாமல்லர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அச்சமயம் இலங்கைக்குப் பெரிய சைனியம் அனுப்புவதற்குச் சேனதிபதி பரஞ்சோதி ஆட்சேபிப்பார் என்ற பயம் மாமல்லருக்கு உள்ளுக்குள் இருந்தது. எனவே, மானவன்மன் இலங்கைப் படையெடுப்பைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னது நரசிம்மவர்மருக்கு மிக்க திருப்தியை அளித்தது. மானவன்மனுடைய பெருந்தன்மையைப் பற்றியும், சுயநலமில்லாத உயர்ந்த குணத்தைப் பற்றியும் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிப் பாராட்டினர்.

பின்னர், வாதாபிப் படையெடுப்புக்குரிய ஆயத்தங்களில் மானவன்மனும் பரிபூரணமாய் ஈடுபட்டான். முக்கியமாக யானைப் படைப் போரில் மானவன்மனுக்கு விசேஷ சாமர்த்தியம் இருந்தது. எனவே, யானைப் படைகளைப் போருக்குப் பயிற்சி செய்வதில் அவன் கவனத்தைச் செலுத்தினன்.

புலிகேசி முன்னம் படையெடுத்து வந்தபோது அவனுடைய பெரிய யானைப் படைதான் அவனுக்கு ஆரம்பத்தில் வெற்றி அளித்ததென்றும், யானைப் படை போதிய அளவு இல்லாதபடியாலேயே மகேந்திர பல்லவர் பின்வாங்கவும், கோட்டைக்குள் ஒளியவும் நேர்ந்தது என்றும் பரஞ்சோதியும் மாமல்லரும் அறிந்திருந்தார்கள். எனவே, வாதாபிப் படையெடுப்புக்குப் பெரும் யானைப் படை சேகரிக்கத் தீர்மானித்து, சேர நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான யானைகள் தருவித்திருந்தார்கள். அந்த யானைகளைப் போருக்குப் பழக்குவதற்கும், யானைகள் மீதேறிப் போர் செய்ய வீரர்களைப் பழக்குவதற்கும் மானவன்மன் மிக்க உதவியாக இருந்தான்.

வாதாபிக்குப் படை கிளம்ப வேண்டிய தினம் நெருங்க நெருங்க, மானவன்மனுக்கும் மாமல்லருக்கும் ஒரு பெரும் வாக்குப் போர் நடக்கலாயிற்று; படையெடுப்புச் சேனையோடு தானும் வாதாபி வருவதற்கு மானவன்மன் மாமல்லரின் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

மாமல்லரோ வேறு யோசனை செய்திருந்தார். அதிதியாக வந்து அடைக்கலம் புகுந்தவனைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போக அவருக்கு விருப்பம் இல்லை. அதோடு அவர் மனத்தில் இன்னொரு யோசனையும் இருந்தது. தாமும் பரஞ்சோதியும் வாதாபிக்குச் சென்ற



பிறகு, காஞ்சி இராஜ்யத்தைக் கவனித்துக் கொள்ளவும், அவசியமான போது தளவாடச் சாமான்கள், உணவுப் பொருள்கள் முதலியவை சேகரித்துப் போர்க்களத்துக்கு அனுப்பி வைக்கவும் திறமை உள்ள ஒருவர் காஞ்சியில் இருக்க வேண்டும். அதற்கு மானவன்மனைவிடத் தகுந்தவர் வேறு யார்?

அன்றியும் மானவன்மனைக் காஞ்சியில் விட்டுப் போவதற்கு மாமல்லரின் இதய அந்தரங்கத்தில் மற்றொரு காரணமும் இருந்தது:

வாழ்வு என்பது சதமல்ல; எந்த நிமிஷத்தில் யமன் எங்கே எந்த ரூபத்தில் வருவான் என்று சொல்ல முடியாது. அதிலும் நெடுந் தூரத்தில் உள்ள பகைவனைத் தாக்குவதற்குப் படையெடுத்துப் போகும்போது எந்த இடத்தில் உயிருக்கு என்ன அபாயம் நேரும் என்று யாரால் நிர்ணயிக்க முடியும்? புலிகேசியைக் கொன்று வாதாபியையும் நிர்மூலமாக்காமல் காஞ்சிக்குத்

திரும்புவதில்லை என்று மாமல்லர் தம் மனத்துக்குள் சங்கல்பம் செய்து கொண்டிருந்தார். வெற்றி கிடைக்கா விட்டால் போர்க்களத்தில் உயிரைத் தியாகம் செய்யும்படியிருக்கும். அப்படி ஒரு வேளை நேர்ந்தால், காஞ்சிப் பல்லவ இராஜ்யம் சின்னபின்னமடையாமல் பார்த்துக் கொள்வதற்கும், குமாரன் மகேந்திரனைச் சிம்மாசனத்தில் ஏற்றி ஸ்திரப்படுத்துவதற்கும் யாராவது ஒரு திறமைசாலி வேண்டாமா? அந்தத் திறமைசாலி தம்முடைய நம்பிக்கைக்கு முழுதும் பாத்திரமானவனுயும் இருக்க வேண்டும்.

காஞ்சி இராஜ்யத்தையும் குமாரன் மகேந்திரனையும் நம்பி ஒப்படைத்து விட்டுப் போவதற்கு மானவன்மனைத் தவிர யாரும் இல்லை. தம் மைத்துனனுகிய ஜயந்தவர்ம பாண்டியனிடம் மாமல்லருக்கு அவ்வளவாக நம்பிக்கை



இல்லை. ஜயந்தவர்மனுக்கு ஒரு காலத்தில் தமிழகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆள வேண்டும் என்ற ஆசை இருந்தது என்பது மாமல்லருக்குத் தெரியும்.

பாண்டியனிடம் தமக்கு உள்ளுக்குள் இருந்த அவநம்பிக்கையை மாமல்லர் வெளியே காட்டிக் கொள்ளாமல் வாதாபிப் படையெடுப்புக்கு அவனுடைய உதவியைக் கோரினுர். ஜயந்தவர்மனும் தன்னுடைய மகன் நெடுமாறனின் தலைமையில் ஒரு பெரிய சைனியத்தை அனுப்புவித்தான்; அந்தச் சைனியம்தான் வராக நதிக்கரைக்கு அப்போது வந்திருந்தது.

இப்படி மாமல்லர் பாண்டியனிடம் யுத்தத்துக்கு உதவி பெற்றுரெனினும், தம் ஆருயிர்த் தோழனுன மானவன்மனிடமே முழு நம்பிக்கையும் வைத்து, அவனைக் காஞ்சியில் இருக்கச் சொல்லி விட்டுத் தாம் வாதாபி செல்வதென்று தீர்மானித்தார்.

மானவன்மனே, பிடிவாதமாகத் தானும் வாதாபிக்கு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தான். மேற்படி விவாதம் அவர்களுக்குள் இன்னும் முடியாமலே இருந்தது.

* * *

மாமல்லர் ரதத்திலிருந்தும் மானவன்மன் குதிரை மீதிருந்தும் கீழே குதித்தார்கள். ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு மகிழ்ந்தார்கள். பிறகு மானவன்மன் ரதத்திலிருந்த ஆயனரைச் சுட்டிக்காட்டி, "அண்ணு! இந்தக் கிழவரை எதற்காக அழைத்து வந்தீர்கள்? படையெடுக்கும் சைனியத்தைப் பார்த்துவிட்டுப் போவதற்கா? அல்லது ஒருவேளை யுத்தத்துக்கே அழைத்துப் போக உத்தேசமா?" என்று கேட்டான்.

அதற்கு மாமல்லர், "அதை ஏன் கேட்கிறுய், தம்பி! ஆயனக் கிழவர் எல்லாருக்கும் முன்னுல் தாம் போருக்குப் போக வேண்டும் என்கிறுர். அவருக்குப் போட்டியாகக் குமாரன் மகேந்திரன் தானும் யுத்தத்துக்குக் கிளம்புவேன் என்கிறுன். 'அண்ணு யுத்தத்துக்குப் போனுல் நானும் போவேன்' என்கிறுள் குந்தவி. இதோடு போச்சா? நமது சாரதி கண்ணன் மகன் சின்னக் கண்ணன் இருக்கிறுன் அல்லவா? அவன் நேற்றுக் கையிலே கத்தி எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குள் புகுந்து, 'சளுக்கர் தலையை இப்படித்தான் வெட்டுவேன்' என்று சொல்லிக் கொண்டே அநேக செடிகளை வெட்டித் தள்ளிவிட்டானும்" என்றுர்.

மானவன்மன் குறுக்கிட்டு, "ஆயனக் கிழவர், சின்னக் கண்ணன், குமார சக்கரவர்த்தி, குந்தவி தேவி ஆகிய வீரர்களைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போங்கள். என்னைப் போன்ற கையாலாகாதவர்களைக் காஞ்சியில் விட்டு விடுங்கள்!" என்றுன்.

"அப்படியெல்லாம் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போகமாட்டேன். மாமா காஞ்சியில் இருந்தால் தானும் இருப்பதாக மகேந்திரன் [illegible] மகேந்திரன் இரு[illegible] தானும் இருப்பதாகக் குந்[illegible] சொல்கிறுள்" என்றுர் மாமல்லர்.

உடனே மானவன்மன், குமார சக்கரவர்த்தியைத் தூக்கிக் கொண்டு, "நீ ஒரு குழந்தை; நானும் ஒரு

குழந்தை. நாம் இரண்டு பேரும் காஞ்சியில் இருப்போம். மற்ற ஆண் பிள்ளைகள் எல்லாம் யுத்தத்துக்குப் போகட்டும் !'' என்ருன்.

அப்போது குந்தவி, ''ஏன் மாமா ! உங்கள் அப்பாவுக்கு நீங்கள் குழந்தை தானே ?'' என்று வெடுக்கென்று கேட்டாள். மானவன்மன் குமார மகேந்திரனைத் தரையில் விட்டுவிட்டுக் குந்தவியின் முன்னல் வந்து கைகட்டி வாய் புதைத்து நின்று, ''தேவி ! தாங்கள் இருக்குமிடத்தில் யாரும் வாயைத் திறக்கக் கூடாதல்லவா ? நான் பேசியது பிசகு! மன்னிக்க வேண்டும் !'' என்று வேடிக்கையான பயபக்தியோடு சொல்லவும், ஆயனர் உள்பட அனைவரும் நகைத்தார்கள்.

* * *

அன்று சாயங்காலம் மாமல்லரும் மானவன்மனும் தனிமையில் சந்தித்த போது, ''அண்ணு ! உண்மையாகவே ஆயனரை வாதாபிக்கு அழைத்துப் போகப் போகிறீர்களா ?'' என்று கேட்டான்.

''ஆமாம், தம்பி ! இரண்டு முக்கிய காரணங்களுக்காக அவரை அழைத்துப் போகிறேன். முதலாவது, நம் படை வீரர்கள் தூர தேசத்தில் இருக்கும் போது கால் ஒடிந்த கிழவரைப் பார்த்தும் அவருடைய புதல்வியை நினைத்தும் மன உறுதி கொள்வார்கள். அதோடு, யாருக்காக இத்தகைய பெருஞ் சேனை திரட்டிக்கொண்டு படையெடுத்துச் செல்கிருேமோ, அவளை ஒருவேளை உயிரோடு மீட்க முடிந்தால், உடனே யாரிடமாவது ஒப்புவித்தாக வேண்டுமல்லவா ? அவளுடைய தந்தையிடமே ஒப்புவித்துவிட்டால் நம் கவலையும் பொறுப்பும் விட்டது '' என்ருர் மாமல்லர்.

அப்போது அவர் விட்ட பெருமூச்சு மானவன்மனுடைய இருதயத்தில் பெரு வேதனையை உண்டாக்கியது. (தொடரும்)

இன்பக் கதவே, திற!

''இன்பத்தின் ஒரு கதவு மூடும்போது மற்றென்று திறக்கிறது. ஆனல் மூடிய கதவையே உற்று நோக்குவதில் நமக்காகத் திறந்திருக்கும் கதவை நாம் கவனிப்பதில்லை!'' இப்படிச் சொன்னவர் ஊனத்தின் உக்ரத்தை முழுதும் அனுபவித்த ஹெலன் கெல்லர்!

சேலம் ஆத்தூரைச் சேர்ந்த ஏ. பி. ஜகதீசன் எட்டு வயதில் 'போலியோ'வின் தாக்குதலினல் கால்களில் ஊனமுற்ருர். ஆயினும் என்ன? 1973ம் வருஷம் இந்த ஊனமுற்ற இளைஞர் தளரா ஊக்கத்துடன் சென்னையிலிருந்து புதுதில்லி வரையில் 2,500 கிலோ மீட்டர்கள் கைகளால் இயக்கும் மூன்று சக்கரச் சைக்கிளில் பயணப்பட்டார். காடு மேடுகளிலும் பள்ளங்களிலும் பயணத்தைத் தொடர்ந்தார். இந்தத் தீர இளைஞரை இந்திரா காந்தியும் வி. வி. கிரியும் தட்டிக் கொடுத்துப் பாராட்டினர். மத்திய அரசு 2,500 ரூபாய் பரிசு வழங்கியது.

''மேட்டில் ஏறும்போது உங்களுக்குச் சைக்கிளில் போவது மிகுந்த கஷ்டமாக இருந்திருக்குமே!''


''ஆமாம்! சைக்கிளில் கயிற்றைக் கட்டிப் பற்களினல் இழுத்தபடியே மேட்டில் பல இடங்களில் ஊர்ந்து சென்றிருக்கிறேன்!'' என்று ஜகதீசன் சொல்லும்போது வியப்பின் எல்லையை அடைகிருேம்.

''உங்கள் பயணத்தினல் ஏதாவது நன்மை விளைந்துள்ளதா?''

''ஓ! குண்டூர், நாக்பூர், ஆக்ரா லயன்ஸ் கிளப்புகள் மூன்று அநாதரவான ஊனமுற்ற குழந்தைகளை 'எடுத்து' வளர்க்க முன் வந்தது எனது பயணத்தால் கிடைத்த நன்மை!''

இப்பொழுது ஜகதீசனுக்குச் சென்னையிலிருந்து லண்டன் வரை ஆறுயிரம் மைல்கள் மூன்று சக்கர சைக்கிளில் போய் வர அசுர ஆசை! யார் கண்டது, இதையும் வெற்றிகரமாக நிறைவேற்றிவிடலாம் இந்த அதிசாமர்த்தியப் பேர்வழி! — பி. எஸ். மணி

டில்லிப் பயணத்துக்குச் சென்னையில் வழியனுப்பு வைபவம். அமைச்சர் ராஜாராம் வாழ்த்துகிறார்.



மனிதனுக்குக் கூண்டு; மிருகத்துக்குச் சுதந்திரம்!

காரில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு குரங்கின் சேஷ்டைகளைப் பார்த்துச் சந்தோஷப்படலாம். ஆனால் அடுத்தாற்போல் பல சிங்கங்களை ஒருசேரக் காண நேர்ந்தால்....?

ஆப்பிரிக்கக் கானகமா என்கிறீர்களா? அங்கே இம்பாலாவிலும் கெடிலாக்கிலும் எப்படிப் போக முடியும்? அடர்ந்த காட்டில் ஜீப் செல்வதே கஷ்டமாயிற்றே!

அமெரிக்காவின் ஃப்ளாரிடா மாநிலத்தில்தான் இப்படி ஒரு குட்டி ஆப்பிரிக்கக் கானகம் செயற்கையாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த வன விலங்குகள் சரணாலயத்தில் உல்லாசப் பயணிகள், சிங்கம், காண்டாமிருகம், யானை முதலானவை சுதந்திரமாகத் தன்னிச்சையாகத் திரிவதை மிக அருகில் இருந்து பார்க்கலாம். ஒரே ஒரு நிபந்தனை. காரை விட்டு இறங்



[illegible]



"எப்படி எங்க குரூப் டான்ஸ்?"



"அம்மா கட்டித் தள்ளுங்க; காமிராவாக இருக்க நேரமே இல்லே!"




▲ ''நீர் யானைன்னு பேர் வைச்சுக்கிட்டு நிலத்தில இருக்கோமேன்னு பார்க்கறீங்களா? இங்கே வறட்சி? ஒண்ணும் கிடையாது, கவலைப்படாதீங்க!''



▲ ''கணவனும் மனைவியும் எப்படி ஒற்றுமையா இருக்கணும்னு எங்ககிட்ட கத்துக்கிட்டுப் போகலாம் நீங்க.''

''உங்க வாகனங்களில் பிரேக் சரியா இருக்குதான்னு பரீட்சை பண்ணத்தான் அப்பப்போ சாலையில் வந்து நிக்கறேன்!'' ▼





▼ [illegible]



▲ ''பாதசாரிகளுக்கு இந்த ரோட்டில் வழி விட்டுத்தான் போகணும்.''

கவோ அல்லது ஜன்னல் கண்ணாடிகளை இறக்கவோ கூடாது. எனவே; ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட காரைத்தான் பயன்படுத்த வேண்டும். ஏர்கண்டிஷன் சாதனம் பொருந்திய கார் இல்லாதவர்கள் இந்தச் சரணாலயத்தின் நுழை வாயிலில் அத்தகைய கார்களை வாடகைக்குப் பெறலாம். அதே சமயம் ஓர் அறிவிப்புப் பலகையும் அவர்களை எச்சரிக்கும்: ''உத்தரவின்றி உள்ளே நுழைபவர்கள் உண்ணப்படுவார்கள்!''

முதலில் சிரிப்பை வருவிக்கும் இந்த அறிவிப்புப் பலகை, சரணாலயத்தின் பல மைல் நீளமுள்ள தார் சாலைகளில் கார் சுற்றிக் கொண்டு போகும் போது வேடிக்கையாகத் தோன்றும். அதுவும் ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு சிங்கங்கள் காரைச் சூழ்ந்து கொள்ளும்போது கொஞ்சம் என்ன, நிரம்பவே திகிலாகத்தான் இருக்கும். ஆனால் அந்தச் சிங்கங்கள் யாரையும் துன்புறுத்தத் தயாராயில்லை. தம் வழியே போகின்றன. குறுக்கே நிற்கும் காரை ஒரு நோட்டம் விட்டு விட்டுப் போகின்றன. அவ்வளவுதான்!

திடும்மென்று அந்தச் சிங்கங்களுக்கு ஒரு வேகம் பிறக்கிறது. நளினமும் எழிலும் மிக அவை துள்ளிப் பாய்ந்து ஓடுகின்றன. என்ன அவசரம் என்று மனத்தில் எழும் கேள்விக்கு உடனே பதிலும் கிடைக்கிறது.

சற்றுத் தூரத்தில் சரணாலயக் காப்பாளர்களில் ஒருவர் தமது ஜீப்பின் முன் பக்கத்தை விட்டுக் குதித்து இறங்குகிறார். மூடப்படாதிருக்கும் ஜீப்பின் பின் பகுதிக்கு வந்து அதிலிருந்து பெரிய பெரிய இறைச்சித் துண்டங்களை எடுத்து வானில் வீசுகிறார். பிறகு ஒரே ஓட்டமாக ஓடிப் பாதுகாப்பு மிக்க ஜீப்பின் முன் பகுதியில் திரும்பவும் ஏறிக் கொள்கிறார்.

பெரும்பாலான சிங்கங்கள் தரையில் விழும் மாமிசத் துண்டங்களை உண்பதிலேயே திருப்தி அடைகின்றன. ஆனால் ஒரு சில ஜீப்பைத் துரத்திக் கொண்டு ஓடுகின்றன. ''சரிதான், கானகத்தில் வேட்டையாடிப் பெறும் உடற்பயிற்சியை இந்தச் சிங்கங்கள் அடைய விரும்புகின்றன'' என்று புரிந்து கொண்டு சரணாலயத்தின் காப்பாளரும் சிறிது நேரம் ஜீப் அதனிடம் அகப்படாதவாறு ஓட்டுகிறார். பிறகு வேகத்தைக் குறைத்து ஜீப்பைச் சிங்கங்கள் எட்டிப் பிடித்துவிட அனுமதிக்கிறார். அந்தச் சிங்கங்கள் ஜீப்பின் பின்புறம் வெளியே தொங்கிக் கொண்டிருக்கும் பெரிய இறைச்சித் துண்டங்களை இழுத்துக் கொள்கின்றன, ஜீப் மேலே செல்கிறது. சரணாலயத்தின் இதர பகுதிகளில் உள்ள மிருகங்களுக்கு உணவு அளிக்க வேண்டுமே? சிங்கங்களோ மொத்தம் நூற்றிஐம்பது இருக்கின்றனவே!

சிங்கங்கள் குடும்பம் குடும்பமாக வாழ்பவை. ஒரு குடும்பத்தில் நாலு முதல் முப்பது சிங்கங்கள் வரை இருக்கலாம். ஆனால் ஒரு சராசரி குடும்பம் பல்வேறு வயதினரான பதினாறு அங்கத்தினர்களை உடையது. ஜீப்பைத் துரத்திப் போவதைத் தவிர சிங்கங்கள் இயற்கையாக வேட்டை ஆடவும் முடியும். சிறிய காட்டு மிருகங்கள் ஏராளமாய்ச் சரணாலயத்தில் உண்டு. ஒரு பெரிய நீர் எலியைச் சிங்கம் பிடித்துக் கொண்டு வந்து சகாக்களுக்குப் பெருமையுடன் காட்டும். ஆனால் அந்த வேட்டையின் வெற்றியைச் சிங்கங்கள் கொண்டாடுமே தவிர அதைச் சாப்பிடுவதில்லை. மாட்டிறைச்சி இதோ வரப் போகிறது என்னும்போது எலியை ஏன் தின்னப் போகின்றன? பாயசம் இருக்கும்போது பழையது எதற்கு?

காட்டு எலிகள் மட்டும் தாம் என்றில்லை. இந்தச் சரணாலயத்தில் ஆப்பிரிக்காவிலிருந்து கொணரப்பட்ட ஒட்டைச் சிவிங்கிகள், வரிக் குதிரைகள், மான்கள், காட்டெருமைகள் முதலியனவெல்லாம் உண்டு. ஆனால் அவற்றைச் சிங்கங்கள் துன்புறுத்த முடியாது. காரணம் சுற்றுலாப் பயணிகளின் கண்ணில்கூடத் தென்படாதபடி சாமர்த்தியமாக அமைக்கப்பட்டுள்ள அகன்ற, ஆழமான அகழிகள், அவற்றைச் சிங்கங்கள் இருக்கும் பகுதியிலிருந்து பிரித்துவிடுவதுதான்.

இந்தச் சரணாலயத்தின் அருகே உள்ள பாம்பீச் போன்ற நகரங்களில் ஆப்பிரிக்கக் கானகங்களுக்குப் போய் வேட்டையாடியவர்கள் பலர் வசிக்கின்றனர். ஆனால் அவர்களே இந்த வனவிலங்குகள் சரணாலயம் பிரபலமடைவதில் நிரம்ப சிரத்தை எடுத்துக் கொள்கிறார்கள். தாறுமாறாக மிருகங்களை மனிதர்கள் வேட்டையாடிக் கொல்வதால் பல மிருக இனங்களே உலகிலிருந்து மறைந்துவிடுவதை இவர்களைவிடச் சிறப்பாக வேறு யாரும் உணர்ந்திருக்க முடியாது அல்லவா?

சரணாலயத்தின் 640 ஏக்கர் நிலப் பரப்பில் யானைகளுக்கு, காண்டாமிருகங்களுக்கு, காட்டெருமைகளுக்கு என்று தனித் தனித் தீவுகள் உண்டு. மான்கள், வரிக் குதிரைகள், ஒட்டைச் சிவிங்கிகள் போன்றவை வேறு ஒரு தீவில் சேர்ந்து வாழும்.

சரணாலயத்துக்கு அவ்வப்போது ஆப்பிரிக்காவிலிருந்து சில மிருகங்கள் தருவிக்கப்பட்டாலும் இனி அதற்கு அவசியமே இராது என்று நினைக்கத்தக்க அளவுக்கு இங்கே இனப் பெருக்கம் நடக்கிறது. மிருகங்களைச் சாதுவாக்க யாருமே முயல்வதில்லை.

இச்சரணாலயத்தைத் தொடங்கிய ஹாரி ஷூஸ்டர் இதன் வெற்றியைக் கண்டு இது போன்ற சரணாலயங்களை அமெரிக்காவின் இதர சில மாநிலங்களிலும் தொடங்கியுள்ளார். லாபகரமான ஒரு வியாபாரமாகவே கருதிப் பங்குதாரர்களையும் ஏற்கிறார். ஜப்பானிலும் இத்தாலியிலும் இது போன்ற சரணாலயங்களை அமைக்குமாறு அவருக்கு அழைப்புக்கள் வந்துள்ளன!

சர்க்கஸ்காரர்கள் ரொம்ப வயதாகிவிட்டது என்று கட்டுத் தள்ளிவிடவிருந்த ஒரு சிங்கத்தைக் கருணைகொண்டு இங்கு அழைத்து வந்து வைத்தியம் செய்து டானிக்கும் தந்து மீண்டும் ராஜகம்பீரம் பெறச் செய்தார் ஷூஸ்டர். மனிதாபிமானி என்பது போல் இவரை மிருகாபிமானி என்று வர்ணிப்பது பொருத்தம்தானே!

— வெஸ்லி பெடெர்லென்

தமிழாக்கம்: **கி. ரா.**

மேலட்டை வண்ணப்படம்: **யு.எஸ்.ஐ.எஸ்.**

நான்தான் ஸ்டேட் பாங்கின் திருவான்மியூர் கிளை.

சென்ற சனிக்கிழமையன்று பகல் 12 மணி சுமாருக்கு நான்கு முகமூடி தரித்த மனிதர்கள் நானிருக்கும் கட்டிடத்துக்குள் வந்தார்கள். அவர்கள் கைகளில் கத்திகையும் ரிவால்வர்களையும் வைத்துக்கொண்டு சிப்பந்திகளைப் பயமுறுத்தினார்கள். அவர்களை 'டாய்லட்' அறைக்குள் செல்லச் செய்து அங்கே அடைத்து வைத்தார்கள். பிறகு கரன்ஸி நோட்டுக்களை எண்ணிக் கட்டுக்களாகக் கட்டிக் கொண்டிருந்த காஷியரைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திவிட்டு அவர் மேஜை மீதிருந்த சுமார் 36,500 ரூபாயையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். நல்லவேளையாக இரும்பு அறைக்குள்ளிருந்த இரண்டு லட்சம் ரூபாயை விட்டுப் போய் விட்டார்கள். காரணம், அதன் சாவியை வைத்துக் கொண்டிருந்த இன்னொரு காஷியர் 'டாய்லட்' அறைக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டதுதான். அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்னால் டெலிபோன் கம்பியைக் கத்திரித்து விட்டார்கள்.

நானும் என்னைப் போன்ற இதர பாங்குகளும் இத்தகைய பட்டப் பகல் கொள்ளை நடந்ததைப் பற்றி ஆச்சரியப்படவில்லை.

'கன்மென்' என்ற துப்பாக்கி ஆயுதம் தரித்தவர்கள் பட்டப் பகலில் பாங்குக் கொள்ளை யடிப்பதென்ற வழக்கம் அமெரிக்காவில் ஏற்பட்டது. பிறகு மற்ற நாகரிக தேசங்களுக்கும் அந்த வழக்கம் பரவிற்று. மேற்கு வங்காளத்தில் மார்க்ஸிஸ்ட் கட்சி மந்திரி சபை அமைந்திருந்த காலத்தில் பாங்குக்



பாங்குக் கிளையின் பயம்!

கொள்ளையடிப்பது, ஜேப்படி செய்வது போல் அத்தனை தாராளமாய் அடிக்கடி நடந்தது. இப்போதும் அங்கு மிங்குமாக ஒரொரு சமயம் 'பாங்கு ஹோல்ட்அப்' என்ற கொள்ளை முறை நடந்து வருகிறது.

1969ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 14 கமர்ஷியல் பாங்குகள் தேசிய உடைமையாக்கப்பட்டபோது இந்தியா முழுவதும் மொத்தம் 8262 கிளைகள் இருந்தன. இன்று அவற்றின் எண்ணிக்கை, சுமார் 20,000 இருக்கும். பாங்குகள் தொடர்ந்து இன்னும் குட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன. தினசரிப் பத்திரிகைகளில் தம்பட்டம் அடிக்கும் படம் அல்லது நாயனம் வாசிக்கும் படம் அல்லது மாவிலைத் தோரணங்கள் கட்டித் தொங்கும் படம் என்று இருந்தால் அது கட்டாயம் ஏதாவது ஒரு பாங்கின் புதிய கிளை திறப்பது சம்பந்தப்பட்ட விளம்பரமாகவே இருக்கும்.

''எங்களது 437வது கிளை'' ''இதோ எங்களது 513வது கிளை'' என்று பாங்குகள் போட்டி போட்டுக் கொண்டு கிளைகளைத் திறந்து வைத்துக் கொண்டே இருக்கின்றன.

கிராமங்களில், நகரங்களில் மக்கள் ஒதுக்குப் புறமாய் வசிக்கும் இடங்களில் பாங்கு வசதி ஏற்படுவது விரும்பத்தக்கதுதான். ஆனால் அவற்றுக்கும் ஓர் எல்லை வேண்டும். இன்று பெட்டைக்குப் பெட்டை ஒரு சலூன், ஒரு காப்பி ஹோட்டல், ஒரு ஸ்டோர், ஒரு மாவரைக்கும் மில் முதலியவற்றுடன் ஒரு பாங்குக் கிளையும் இருப்பது சகஜமாகி வருகிறது.

''உங்கள் பாங்குக்கு மொத்தம் எத்தனை கிளைகள் இருக்கின்றன? அவற்றை இந்திய யூனியன் பூகோள படத்தில் மார்க் செய்யவும்'' என்று ஒரு பரீட்சை வைத்தால் பாங்குத் தலைமை நிர்வாகிகள் கட்டாயம் அதில் தேற மாட்டார்கள்!

பாங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அம்சம் கவனிக்கப்படவே இல்லை. சிறிய நகரங்களில் உள்ள தாலுகாக் கஜானாக்களில் திருவான்மியூர் பாங்குக் கிளையிலிருந்த அத்தனை பணம் கூட இராது. ஆனால், அவற்றுக்குப் போலீஸ் பாரா கட்டாயம் இருக்கும்.

சென்னையில் பரோடா பாங்கு சிலவற்றில் துப்பாக்கி தரித்த ஓய்வு பெற்ற போர் வீரன் பாங்கு அலுவல் நேரத்தில் காவல் இருப்பதைப் பார்க்கலாம்.

முகமூடி போடாமல் பட்டப் பகலில் பொய்க் கணக்குகள் எழுதி, பொய்ச் செக்குகள், போர்ஜெரிச் செக்குகளைப் பாஸ் செய்து லட்சக் கணக்கில் அபேஸ் செய்யும் பாங்குச் சிப்பந்திகள் சிலர் இருக்கிறார்கள்; அகப்பட்டுக் கொள்ளவும் செய்கிறார்கள். அவர்களைப் போல் தைரியமாக மூளையை உபயோகித்துக் கொள்ளையடிக்க முடியாதவர்கள்தான் முகமூடி அணிந்து வருகிறார்கள்.

—அனுமதேயம்

மாருதி ரோட் ரோலர்!




○ முன்பு அறிவிக்கப்பட்ட விலை எட்டாயிரம். இப்பொழுது மாருதி காரின் விலை 25 ஆயிரம்! இந்திரா காந்தியின் மருமகள் சோனியா காந்தி இப்பொழுது அந்தக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர். அந்தக் கம்பெனி இப்பொழுது ரோடு ரோலர்கள் தயாரிக்கிறது. விலை 1½ லட்சம் ரூபாய். -எக்ஸ்பிரஸ்மான்ஸ்

○ நல்ல நாள் - இன்று. பெரிய பாவம் - பயம். இம்மாதிரி வாசகங்கள் கொண்ட பலகைகளை மத்திய அமைச்சர் பன் தமது அறையில் வைத்திருக்கிறார்.
ஹிம்மத் —பாபு



சுவர் மொழி!



லெனினின் தந்திரம்!

1897ஆம் ஆண்டு. ஜார் ஆட்சி லெனினை நாடு கடத்தியது. அவர் சைபீரியாவில் உள்ள ஷுஷென்ஸ்கி கிராமத்தில் மூன்று ஆண்டுகள் இருந்தார்.

தண்டனைக் காலம் முடிய இன்னும் ஒரு மாதமே இருந்தது. அத்தருணத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் லெனின் இருந்த இடத்துக்கு வந்தனர்.

''நாங்கள் இப்போது உங்கள் வீட்டைச் சோதனையிட வந்திருக்கிறோம். தடை விதிக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் ஏதாவது உங்கள் வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டால் இன்னும் மூன்று ஆண்டுகள் இங்கு இருக்க வேண்டி வரும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

லெனினிடமோ தடை விதிக்கப்பட்ட புத்தகங்களும், புரட்சி சம்பந்தமான தஸ்தாவேஜுகளும் நிறைய இருந்தன. அவை அனைத்தும் அவருடைய புத்தக அலமாரியின் கீழ்த் தட்டில் இருந்தன.

சோதனைக்கு வந்தவர்கள் இரண்டு போலீஸ்காரர்கள். அவர்களில் உயரமாகவும், பருமனாகவும் இருந்த ஒருவர், கதவின் அருகில் நின்று கொண்டார். அடுத்தவர், குள்ளமானவர். அவர் சோதனையைத் தொடங்கினார்.

மேஜைகள், சமையல் அறை, கட்டில், மெத்தை இப்படி வீடு முழுவதையும் சோதனையிட்டார். இறுதியாக அலமாரியிடம் வந்தார்.

''இந்த அலமாரியில் என்ன இருக்கிறது?'' என்று லெனினிடம் கேட்டார், போலீஸ்காரர்.

''அவை என்னுடைய புத்தகங்கள்'' என்று பதில் கூறினார் லெனின்.

போலீஸ்காரர் சிறிது நேரம் பேசாமல் நின்றார். சோதனையை எங்கிருந்து தொடங்குவது? மேலிருந்தா அல்லது கீழிருந்தா? லெனின் மனைவி குருப்ஸ்காயா போலீஸ்காரரைப் பார்த்து மனத்துக்குள் நினைத்துக் கொண்டார்: 'மேலிருந்து தொடங்கினால் நன்றாக இருக்கும். விரைவிலேயே களைப்படைந்து விடுவார். கீழ்வரை பார்க்க மாட்டார். ஆனால் கீழ் அலமாரியிலிருந்து அவர் சோதனை இடத் தொடங்கினால் உடனேயே தடை விதிக்கப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்து விடுவார்' என்று குருப்ஸ்காயா எண்ணினார்.

இதற்குள் லெனின் ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து அலமாரியின் அருகில் போட்டுவிட்டுப் போலீஸ்காரரிடம் கூறினார்:

''நீங்கள் குள்ளமானவர். தயவுசெய்து இதன்மீது ஏறிக்கொள்ளுங்கள். அப்போது தான் என் புத்தகங்களைச் சோதனையிட வசதியாக இருக்கும்'' என்றார்.

போலீஸ்காரர் லெனினுக்கு நன்றி செலுத்திவிட்டு ஸ்டூலின் மீது ஏறினார். மேலிருந்து சோதனையைத் தொடங்கினார். ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பார்த்துக் கொண்டே வந்தார். நேரம் கடந்து விட்டது. புத்தகங்களோ இன்னும் ஏராளமாகக் கிடந்தன. மூன்று மணி நேரத்தில் நாலு தட்டுகளில் இருந்த புத்தகங்களைத்தான் பார்த்து முடித்தார். ஐந்தாவது தட்டு அதாவது கீழ்த்தட்டைப் போலீஸ்காரர் மிகவும் கவனமாகப் பார்க்கத் தொடங்கினார்.

இதற்குள் வாயிலில் நின்று கொண்டிருந்த குண்டு போலீஸ்காரர் குள்ளப் போலீஸ்காரரிடம் கூறினார்:

''நீ எவ்வளவு நாழிகையாகப் பார்க்கிறாய்? எனக்குக் களைப்பாக இருக்கிறது. பசி தாங்க முடியவில்லை. சீக்கிரமாக முடி!'' என்றார்.


உடனே, குள்ளப் போலீஸ்காரர் பதில் கூறினார்:

''சரி, சாப்பிடப் போவோம். வீணாக நாம் இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டோம். ஒன்றும் கிடைக்கவில்லை; பயனில்லை.''

இரண்டு போலீஸ்காரர்களும் லெனினிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

மலரும் பூவெனப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்....இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசிய மான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெட்டின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்



175 ml.
Incremin
syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
Incremin
syrup

பொன்னியின் புதல்வர்

சுந்தா



39. தமிழ்த் தாத்தா

புதையலைத் தேடித் தந்தார் தாத்தா
புதுமையை நாடித் தந்தார் பேரன்

"தமிழ்த் தாத்தா" என்பது மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரைக் குறிக்கும்; அவர் ஒருவரையே குறிக்கும். பலருக்கும் தெரியும் இது.


ஐயரவர்களின் பெயரோடு ஒன்றி விட்ட இந்த மரியாதை அடைமொழி அல்லது சிறப்புப் பட்டத்தைச் சூட்டியவர் கல்கி. இப்போது சிலருக்கே தெரிந்திருக்கக் கூடியது இது. இவர்களுக்கும் எப்போது எப்படிக் கல்கி இதைச் சூட்டினார் என்பது தெரியாமல் இருக்கலாம்.

டாக்டர் சாமிநாத அய்யரின் எண்பதாண்டு நிறைவை, 1935 மார்ச்சு மாதத்தில் ஒரு தமிழ் விழாவாகத் தமிழ் நாடெங்கும் தமிழ் அன்பர்கள் கொண்டாடினார்கள். அதை முன்னிட்டுக் கல்கியும் அம்மாத ஆரும் தேதிய ஆனந்த விகடன் இதழை ஒரு சிறப்புமலராய் வெளியிட்டுக் கொண்டாடினார். ஐயரின் வெவ்வேறு பிராயத்துப் படங்களும், அவரைப் பற்றி வெவ்வேறு அறிஞர்களின் கட்டுரைகளும் நிறைந்த அந்த மலரில் "விகடன்" என ஒப்பமிட்ட மூன்று கடிதங்கள் ஒரு கோவைத் தலையங்கமாய் அமைந்தன.

முதல் கடிதம், "ஸ்ரீமத் சகல குண சம்பன்ன.... மகா புருஷ மகாராஜ மான்ய ராஜஸ்ரீ பொதுஜனம் அவர்களின் திவ்ய சமூகத்துக்கு". அதில் விகடன், ஐயரவர்கள் அதுவரை பதிப்பித்து வெளியிட்டிருந்த சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, பத்துப் பாட்டு முதலிய முப்பத்துமூன்று நூல்களை ஒரு பட்டியலாய்ப் போட்டுக் காட்டி, அவ்







யரவர்களின் அரிய முயற்சிகள் இல்லாமல் போயிருந்தால், நமது தமிழ்ச் செல்வத்தின் பெரும் பகுதியும் இல்லாமற் போயிருக்கும் என்பதை எடுத்துச் சொன்னான். தமிழ்ச் செல்வத்தைத் தமிழருக்கு மீட்டுக் கொடுத்த அன்னாரின் ''சதாபிஷேக வைபவத்துக்கு இஷ்ட மித்ர பந்துக்களுடன், உம்மை அழையாவிட்டாலும் நீர் வந்து சேர வேண்டியது'' என்று பொதுஜன ஸ்வாமிக்கு உரிமையுடன் விகடன் தானே அழைப்பு விடுத்தான்.

இரண்டாவது கடிதம், ''உயர்திருவாளர் தமிழ் அன்பர் அவர்களுக்கு எழுதியது. அதில் விகடன், பாரதியார் பணியையும் அய்யரின் பணியையும் ஒப்பிட்டுக் காட்டினான்:

நம்முடைய காலத்தில் நம் கண் முன்னால் தமிழ் மொழிக்குப் பெருமை அளித்தவர்களுக்குள் இரண்டு பேர் சிறந்து விளங்குகிறார்கள். ஒருவர், தேசிய கவி சுப்பிரமணிய பாரதி; மற்றவர் மகா மகோபாத்தியாய சுவாமிநாதய்யர்.

பாரதியார் வாடா மலர்களைத் தொகுத்துத் தமிழ்த் தாய்க்குப் பாமாலை சூட்டினார்; புதிய நாகரிக முறையில் அழகிய சின்னஞ் சிறு ஆபரணங்களைச் செய்து அணிவித்தார்.

அய்யர் அவர்களோ, காணமற் போயிருந்த தாயின் பழைய ஆபரணங்கள் பலவற்றைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தார்; துருப் பிடித்துக் கிடந்த நகைகளையெல்லாம் துரு வெடுத்துச் சுத்தம் செய்து மெருகிட்டு அளித்தார்.

எனவே, இரண்டு பேரும் ஒவ்வொரு வகையில் தமிழ்த் தாய்க்கு மகத்தான சேவை செய்திருக்கிறார்கள்.

மூன்றாம் கடிதம் முன் இரண்டையும் விடச் சிறப்பானது; ஏனெனில், அது தான் ஐயரவர்களுக்குப் பேரன் பெயர் இட்ட கடிதம்.

தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சமூகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக்கொள்வது:

பெரியவர்கள் என்ன யோசிக்கிறீர்கள் ? இது என்ன புதிய பட்டமாக இருக்கிறது. இவன் யார் கொடுப்பது என்று? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள் நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது, ஔவையாருக்கு எப்படித் ''தமிழ்ப் பாட்டி'' என்னும் பட்டம் பொருந்துமோ அதுபோலவே, தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும், ''தமிழ்த் தாத்தா'' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு 'த்'களையும் நீக்கிவிட்டால், தாங்கள் ''தமிழ் தாதா'' ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து, அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக்கணக்கானவர்களுக்குப் பயன்படும் படி செய்த தங்களைத் 'தமிழ் தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது ?

மூன்றாவதாக, ''உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்'' என்பது போல், தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கித் ''தமிழ் தா! தா'' ''தமிழ் நூல்களைத் தா! தா!'' என்று கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்....

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரித்தே தீர வேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும்


⌘ ''தமிழ்த் தாத்தா, தமிழ் தா, தா!'' உ. வே. சா. அவர்கள் அமரரான தினம் ஏப்ரல் 28உ.

⌘ குருநாதரிடம் விளையாட்டாக ஒரு நாடகம் நடத்திய கி. வா. ஜ.

⌘ ''கல்கி எழுதுகிறாரே தமிழ், அதுவல்லவா தமிழ்!'' என்று பாராட்டிய டி. கே. சி.

⌘ ''பேஷ் பேஷ்! நீங்கள்தான் அந்தப் போலிக் கல்கியா?'' என்று கேட்டு வியப்புடன் அவரைப் பார்த்தார் அசல் கல்கி. வி. ஸ்ரீ. சீனிவாசன் - கல்கி.





நான் என்னமோ அந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன். ஏனென்றால், ''மகா மகோபாத்தியாய'' ''தாக்ஷிணாத்ய கலாநிதி'' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, ''தமிழ்த் தாத்தா'' என்பதோ தங்களுடைய தமிழ் வசன நடையைப் போல் எளிதாயிருக்கிறது.

கல்கி இட்ட இந்தப் பெயர் எப்படி நிலைத்தது என்பதையும், இந்தப் பெயருக்கு உரியவர் இதை எப்படி ஏற்றார் என்பதையும் அய்யரவர்களின் அருமைச் சீடரும், ''கலைமகள்'' ஆசிரியருமான கி. வா. ஜகந்நாதன், கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்:

இப்போது தமிழ்த் தாத்தா என்றால் அது ஐயரவர்களைக் குறிப்பது என்பதை யாவரும் அறிவார்கள். சதாபிஷேகத்துக்குமுன் அந்தப் பெயர் ஐயரவர்களுக்கு வரவில்லை.

கல்கியைக் கண்ட போதெல்லாம், உடன் இருப்பவர்களிடம், ''இந்த மனிதர் மிகவும் பொல்லாதவர். நான் என்னை இன்னும் இளையவன் என்றே எண்ணியிருக்கிறேன். தமிழ் நாட்டில் எந்த ஊருக்குப் போனாலும் கொஞ்சம்கூடப் பயம் இல்லாமல், சிறு பையன்களும் பெரியவர்களும் என்னைச் சுட்டிக்காட்டி, தமிழ்த் தாத்தா, தமிழ்த் தாத்தா என்று சொல்லும்படி செய்துவிட்டார். அதைக் கேட்கையில் எனக்கு வெட்கமாக இருக்கிறது. நல்ல வேளை! இதைக் கேட்டு நாணம் அடைய என் மனைவி உயிரோடு இல்லை'' என்று சொல்லுவார்கள்.

(ஆனந்த விகடன் 8-9-63)

அதே கட்டுரையில், மேலும் கி.வா.ஜ., ''எதையும் எளிய தமிழில் சுவையாக எழுதலாம் என்பதைச் சாதித்த தமிழ்ப் பேரறிஞர் கல்கி, தமிழ்ச் சங்க நூல்களை வழங்கிய தமிழ்த் தாத்தாவைச் சந்தித்தது முதல் அவர்களிடையே அன்பு முதிர்ந்து வந்தது'' என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ்த் தாத்தாவையும் தமிழ்ப் பேரறிஞரையும் கி. வா. ஜ. தான் சந்திக்க வைத்தார். அதையும் அவரே சொல்லட்டும்:

''கலைமகள்'' தொடங்கி ஒரு வருஷத்துக்குள் இருக்கும். அப்பொழுதெல்லாம் திரு பெ. நா. அப்புசாமி ஐயர் வீட்டில் அடிக்கடி ஒரு சிறு தமிழர் கூட்டம் கூடும். ரசிகமணி டி. கே. சி., எஸ். வையாபுரிப்பிள்ளை முதலியவர்கள் கூடித் தமிழ் பற்றிப் பேசிப் பொழுது போக்குவார்கள். அந்தக் கூட்டங்களுக்கு எப்போதாவது கல்கி வருவார். டி. கே. சி. அவர்களுக்கும் கல்கிக்கும் நட்பு உண்டானது அந்தக் கூட்டத்தில்தான். இலக்கிய உலகில் வளைய வந்த பலரை ஒருவருக்கு ஒருவர் அறி

முகப்படுத்தும் கூட்டமாகவே அது விளங் கியது.

அந்தக் கூட்டத்தில்தான் முதன் முதலில் நான் கல்கியைக் கண்டேன். டி. கே. சி. அவர் களுக்கு எப்போதும் பண்டிதர்களைக் கிண்டல் பண்ணுவதென்ருல் தனி உற்சாகம் உண் டாகும். பண்டிதர்கள் என்று பட்டமும் உத்தியோகமும் பூண்ட எல்லாரையுமே அவர் பண்டிதர்கள் என்று சொல்வதில்லை. சிலரை விலக்கி விடுவார். அவர்களில் டாக்டர் ஐயரவர்களும் ஒருவர்.

''பண்டிதர்கள் பழங் காலத்துச் சொற் களைத் தேடிப் பிடித்து அவைகளைப் போட்டுத் தான் எழுதுவார்கள். அவர்கள் எழுதுவதைப் படிக்க வேண்டுமானல் ஓர் அகராதிப் புஸ்தக மும் அமிர்தாஞ்சனம் ஒரு புட்டியும் அருகிலே வைத்துக் கொள்ள வேண்டும்'' என்று டி. கே. சி. சொன்னர். ''கல்கி எழுது கிருரே, தமிழ்; அதுவல்லவா தமிழ்'' என்று பாராட்டினர். ''பேசுவது போலவே எழுதி ஞல் அதில் அழகு இருக்கிறது'' என்ருர்.

அப்போது கல்கி இடையே, ''நீங்கள் அப் படிச் சொல்கிறீர்கள். சில பண்டிதர்கள் தாங்கள் எழுதுவது போலவே பேசவும் பேசு கிருர்களே! உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

அந்தச் சமயத்தில் நான் கல்கியிடம், ''நீங்கள் ஐயர் அவர்களைப் பார்த்திருக் கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''நான் பார்த்ததே இல்லை; பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. சாதாரணமாய்ப் போய்ப் பார்க்க முடியும் அல்லவா?'' என்ருர்.

''நன்ருகப் பார்க்கலாம். தாராளமாகப் பேசலாம். உங்களைக் கண்டால் அவர்கள் மிகவும் சந்தோஷம் அடைவார்கள்'' என்று சொன்னேன்....

ஒரு நாள் அவரும் துமிலனும் தியாகராஜ விலாசத்துக்கு வந்தார்கள். திருவல்லிக் கேணியில் ஒரு பகுதியாகிய திருவேட்டீசு வரன் பேட்டையில், பிள்ளையார்கோயில் தெருவில் உள்ள ஐயரவர்கள் இல்லந்தான் தியாகராஜ விலாசம். முன்கூட்டியே திட்ட மிட்டிருந்தமையால் நான் அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

தியாகராஜ விலாசத்தில் மேல் மாடியில் தான் ஐயரவர்கள் இருந்து ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். கல்கியையும் துமிலனை யும் அழைத்துக் கொண்டு சென்று அறிமுகப் படுத்தி வைத்தேன்.

''அப்படியா? மிகவும் சந்தோஷம். சிதம்பரநாத முதலியாரவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். பால்யமாகத் தானே இருக்கிறீர்கள்? அவர்கள் சொன்ன தைப் பார்த்தால் வயசு அதிகமாக இருக் குமோ என்று நினைத்தேன்'' என்று ஐயர் அவர்கள் பேசத் தொடங்கினர்கள்.

''எல்லோரும் உங்களைப் போல் பழுத்த பழமாக இருக்க முடியுமா?'' என்ருர் கல்கி.

''எனக்கு வயசாகிவிட்டது உண்மைதான். இந்த உலகத்தைப் பார்த்து அநுபவிக்க எவ் வளவு பிராயம் இருந்தாலும் போதாது. எவ்வளவோ பெரிய மனிதர்களை எனக்குத் தெரியும். என்னிடம் வாசித்தவர்களாகவே பலர் இருக்கிருர்கள்.''

''பெரிய மனிதர்கள் இங்கே பாடம் கேட் கிருர்களா?''

''இல்லை, இல்லை. காலேஜ்களில் வாசித்த வர்கள். நான் வீதியிலே போய்க் கொண்டே யிருப்பேன். ஒருவர் காரில் போவார். என் னைக் கண்டதும் நிறுத்துவார். 'நமஸ்காரம்' என்பார். நான், நம்மைத்தான் ஏற்றிக் கொண்டு போகப் போகிருர் என்று எண்ணு வேன். அவர், 'சௌக்கியந்தானே?' என்று கேட்டுவிட்டு, 'சரி, நான் வருகிறேன், வேலை இருக்கிறது' என்று போய் விடுவார்.''

''அவர் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்'' என்ருர் கல்கி.

''நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான் என்று நான் நினைத்துக் கொள்கிறேன்'' என்று ஐயரவர்கள் சொன்னவுடன் கலீர் என்று சிரித்துவிட்டார் கல்கி. ஐயரவர்களும் சேர்ந்து சிரித்தார்கள்....

இப்படி ஒரு மணிக்கு மேல் பேசிக் கொண் டிருந்தார்கள். பழைய கதைகளை ஐயர் அவர்கள் சொன்னர்கள். அடிக்கடி சிரிக்கச் சிரிக்கப் பேசினர்கள்.... (மேற்படி)

தமிழ்த் தாத்தாவைத் தாம் முதல் தடவையாய்ச் சந்தித்தது பற்றிக் கல் கியே எழுதியிருக்கிருர்:

...போகும்போது நெஞ்சு கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பழந் தமிழ்ப் பண்டிதர் நம்மை எவ்விதம் நடத்துகிருரோ என்ற பயம்தான் காரணம். (பரிதிமாற் கலைஞர்) வி. கோ. சூரியநாரா யண சாஸ்திரியாரைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறேன். அவரிடம் வருகிறவர்களைப் பார்த்து சாஸ்திரியார், ''நீவிர் யாண்டுப் போந்தீர்?'' என்று கேட்பாராம்.

தமிழ்த்தாத்தா அப்படி யெல்லாம் என்னைத் திண்டாட வைக்கவில்லை. நம்மை யெல்லாம் போல் சாதாரண வீட்டுத் தமிழி லேயே பேசினர்....

அதற்குச் சில காலத்துக்கு முன்பு முதல் முதல் வெளியான தமிழ் பேசும் படத்தைப் பற்றி, ''தமிழ்ப் பாட்டி'' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். ''தப்பிலி கப்'' என்ற கதையொன்றும் வெளியாகியிருந் தது. மேற்படி கட்டுரையையும் கதையையும் பற்றித் தமிழ்த் தாத்தா திருப்பித் திருப்பித் தமது பாராட்டுதலைத் தெரிவித்தார். தாம் ரஸித்த சில சில வாக்கியங்களையும் அப்படியே சொன்னர். எனக்கு இதெல்லாம் ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும், இன்னெரு பக்கம் சங்கடமா யிருந்தது. எனவே, பேச்சை மாற்றும் பொருட்டு, அவரைச் சுற்றிலும் இருந்த ஓலைச்சுவடிகளைப் பற்றிப் பிரஸ் தாபித்தேன். உடனே, தமிழ்த் தாத்தா தமது பழைய அநுபவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அவை மிகவும் ரஸமாயிருந் தன. உணர்ச்சியுடன் நகைச்சுவை பொருந்தி யும் இருந்தன. (கல்கி இதழ் 16-5-42)

ஐயரவர்களுக்குத் ''தமிழ்த் தாத்தா'' என்ற பட்டத்தைச் சூட்டிய பெருமையுடன் இன்னொரு பெருமையும் கல்கிக்கு உண்டு — அதுதான் அவர்களைச் சுயசரிதம் எழுத வைத்த பெருமை.

பட்டம் சூட்டி எழுதிய கடிதத்தின் இறுதியிலேயே அது பற்றி விண்ணப்பம் செய்திருந்தார் கல்கி:

... தாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ பாக்கி இருக்கின்றன. தமிழ்த் தாய் இன்னமும் கையில் ஏராளமான பழைய நகைகளை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள். அவைகளையும் தாங்கள் மெருகிட்டுத் தர வேண்டுமாம். எப்படியும் ஸ்திரீ அல்லவா? அசாத்திய நகை ஆசை!

நிற்க, தங்களிடமிருந்து பேரன் பேத்திகளாகிய நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிற இன்னும் ஒரு காரியமும் பாக்கி இருக்கிறது. எங்களுக்குக் கதை கேட்பதில் மிகவும் பிரியம். தங்கள் சொந்தக் கதையை முழுதும் பூரணமாகக் கேட்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கிறோம்... இந்த ஆவலைப்பூர்த்தி செய்தல் தங்கள் பொறுப்பு.

இவ்வாறு பத்திரிகை மூலம் வேண்டுகோள் விடுத்ததோடு கல்கி நிற்கவில்லை. நாலாண்டு காலம் நேரில் சென்று சென்று வற்புறுத்தினார். பலனும் கண்டார்—

...அது முதல் நான் சில சமயம் தனியாகவும், பெரும்பாலும் டி. கே. சி.யுடனும் தமிழ்த் தாத்தாவை அடிக்கடி பார்க்கப் போவதுண்டு. அப்போதெல்லாம் அப்பெரியாரின் வாழ்க்கை அநுபவங்கள் சிலவற்றை அவருடைய வாய்மொழியாகக் கேட்க நேரும். கேட்கக் கேட்க, அந்த அநுபவங்களையெல்லாம் அவர் புத்தகமாக எழுத வேண்டும் என்ற ஆசை உண்டாகும். ''உங்களுடைய சுய சரித்திரத்தை நீங்கள் எழுத வேண்டும்'' என்று அடிக்கடி தெரிவித்துக் கொள்வோம். மகாத்மா, ஜவாஹர்லால் நேரு முதலியவர்கள் 'சுய சரிதம்' எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுவோம். ''என்னுடைய சரித்திரத்தை நானே எழுதிக் கொள்வது என்பது பிடிக்கவில்லையே!'' என்பார் ஐயர்வாள். ஆனாலும் நாங்கள் விடுவதில்லை. ''அதில் ஒரு பிசகும் கிடையாது. தங்களுடைய சுய சரித்திரம் என்றால், அது தமிழ் நாட்டின் எண்பது வருஷத்துச் சரித்திரமாக அல்லவா இருக்கும்?'' என்று வற்புறுத்துவோம். எங்களுடைய வேண்டுகோளை அவருடைய அருமைப் புதல்வர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அய்யரும், அவருடைய தலைசிறந்த சிஷ்யரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதய்யரும் ஆதரித்தபடியால், கடைசியில் எங்கள் மனோரதம் நிறைவேறிற்று. தமிழ்த் தாத்தா தமது சுயசரிதத்தை எழுதச் சம்மதித்து எழுதியும் வந்தார்.

(கல்கி 16-5-42)

தமிழ்த் தாத்தாவின் சுய வரலாற்றை ஆனந்த விகடனில் வெளியிடும் பெருமையைக் கல்கி அடைந்திட்டார். 1940 புத்தாண்டு இதழில் தொடங்கி, வாரம் ஓர் அத்தியாயமாக அதை வெளியிட்டு வந்தார். அடுத்த புத்தாண்டு தினத்தன்று ஆனந்த விகடன் மெய்யாசிரியர் பதவியிலிருந்து கல்கி விலகினார். அதற்குப் பிறகும் அந்தச் சுயசரிதம் அந்தப் பத்திரிகையில் வந்துகொண்டிருந்து, 1942 மே மாதத்தில் ஐயரவர்கள் காலமான காரணத்தால் நின்று போயிற்று.

மொத்தம் வெளிவந்த 122 அத்தியாயங்களையும் ஐயரவர்களின் குமாரர் கல்யாணசுந்தரமய்யர், 1950யில் ''என் சரித்திரம்'' என்ற பெயருடன் புத்தகமாக வெளியிட்டார். இந்த நூலின் முகவுரையில் கல்யாணசுந்தரமய்யர், தம் தந்தையாரைச் சுயசரிதம் எழுதச் செய்வதில் கல்கி மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டியிருக்கிறார்.

தமிழ்த் தாத்தாவின் மறைவு குறித்துத் துக்கித்துக் கல்கி எழுதிய அஞ்சலிக் கட்டுரைக்கு, ''வீழ்ந்த ஆலமரம்'' என்பது தலைப்பு. தமது கிராமத்தில் வெகு காலமாய் நின்று ஒரு புயலில் விழுந்து போன ஆலமரத்தை நினைவிற்கொண்டு, அதனுடன் தமிழ்த் தாத்தாவை ஒப்பிட்டு, அதைக் கல்கி எழுதியிருந்தார்:

விசாலமாகத் தழைத்து விழுதுவிட்டு வளர்ந்திருந்த ஆலமரம் வீழ்ந்ததைப் போல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. ஸ்வாமிநாதய்யர் நம்மைப் பிரிந்து சென்றுவிட்டார். திருவட்டீசுவரன் பேட்டை, 'தியாகராஜ விலாச'த்தின் மேல் மாடியில் தமிழ்த் தாத்தா இன்று இல்லை — விசு பலகையில் படுத்தவண்ணம் ஓலைச் சுவடியையோ புத்தகத்தையோ பார்த்துக் கொண்டிருக்கவில்லை — சீடப் பிள்ளைகளிடம் எழுதுவதற்கு விஷயம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை—என்பதை நினைத்தால் நெஞ்சை என்னவோ செய்கிறது.

(கல்கி இதழ் 16-5-42)


இப்படிக் கல்கி புலம்பியது, ஐயரவர்கள் தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பணியாற்றிய பெரியார் என்ற மதிப்பினால் மட்டும் அல்ல; பணிவுக்கும் மரியாதைக்கும் உரிய அன்புத் தாத்தா என்பதனாலுந்தான். ஐயரவர்களும் கல்கியைப் பாராட்டுக்குரிய எழுத்தாளராயும் பத்திரிகாசிரியராயும் மட்டும்

பழரசம் பருகுங்கள்

ஸ்பென்ஸர்ஸ்

பழரசங்கள் மற்றும் ஸிரப்புகள்

உங்கள் விருந்தினருக்குப் புதுமை யான விருந்து படையுங்கள். ஸ்பென்ஸர்ஸ் பழரசங்களையும் ஸிரப்களையும் பருகக் கொடுங்கள். அவர்கள் மட்டுமின்றி உங்கள் குடும்பத்தினரும் விரும்பிப் பருகுவார்கள். ஏனெனில் இவை புதுச்சுவை குன்றாத, தெவிட்டாத பானங்கள். சிக்கனமானவையும் கூட. வாயு கலந்த குளிர்பானங்களைக் காட்டிலும் மொத்தத்தில் விலை மலிவானவை. ஸ்பென்ஸர் தயாரிப்பு என்றால் தரத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்ல வேண்டாமல்லவா?



தரமுயர்ந்த
பானங்களைத்
தருவோர்

ஸ்பென்ஸர்ஸ்

FDS SP 2166 TAM

ஸ்பென்ஸர் & கோ. லிட்., சென்னை மற்றும் கிளைகள்



பெண்கள் தபாலாபீஸ்!

சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஒன்பது பெண்கள் தபாலாபீஸ்களுமே Nondelivery ஆபீஸ்கள். ஏன் இப்படி?

நீந்துல்தான் கடம்ஸ்-கேயார்

கருதவில்லை. தமது பரிவுக்கும் பாசத்துக்கும் உரிய செல்லப் பேரனாகவே கருதினார்.

கல்கியிடம் பெரியவர் எவ்வளவு அன்பு பூண்டிருந்தார் என்பதை ஒரு நிகழ்ச்சி எடுத்துக் காட்டிற்று. ஆனந்த விகடனை விட்டு விலகியதை அடுத்து, கல்கி சத்தியாக்கிரகம் செய்து சிறை புகுந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகியிருந்தன. அப்போது ஒருநாள் பிற்பகலில் தமிழ்த் தாத்தா, தமது இல்லத்தின் மாடிக் கூடத்தில் சயனித்து இலேசாகத் துயில் கொண்டிருந்தார். அருகே காலடிச் சப்தம் கேட்டு அவர் துயில் கலைந்தபோது, கி.வா.ஜ.வுடன் கல்கி நிற்பதைக் கண்டார். உடனே அவர் பரபரப்புடன் எழுந்து, பதறும் குரலில், "ஐயா! ஐயா!" என்று கூவிக் கல்கியை அணைத்துக் கொண்டார். "இப்படிச் செய்யலாமா? ஜெயிலுக்குப் போய்விட்டீர்களாமே! போகிறவர்கள் போகட்டும். நீங்கள் உங்கள் எழுத்துத் தொழிலைச் செய்து கொண்டிருந்தால் போதாதா?"... இன்னும் இப்படியே பரிவும் பாசமும் வருத்தமும் தொனிக்க ஏதேதோ சொல்லிக் கொண்டேயிருந்தார்.

கி. வா. ஜ. மெல்லக் குறுக்கிட்டு, "இவர் கல்கி அல்ல" என்று கூறினார்.

"கல்கி அல்லவா?" என்று தமிழ்த் தாத்தா திகைத்தார். பிறகு, தமது அணைப்பில் இருந்தவரை விடுவித்து உற்றுப் பார்த்துவிட்டு, அவர் கல்கி அல்லதான் என்பதைக் கண்டார். "கல்கி மாதிரியே இருக்கிறாரே, யார் இவர்?" என்று கேட்டார்.

"சூரிய நாராயண சாஸ்திரியாரின் பெண் வயிற்றுப் பேரர்" என்று அவரை அறிமுகம் செய்து வைத்தார் கி.வா.ஜ. "இவர் பெயர் வி.ஜி. சீனிவாசன்; மதுரை சேதுபதி பள்ளியில் ஆசிரியராய் இருக்கிறார்."

"தங்களைப் பார்க்க ஆசையோடு வந்தேன்" என்று சீனிவாசன் சொல்லித் தமிழ்த் தாத்தாவை வணங்கி, தாம் கொணர்ந்திருந்த ஆரஞ்சுப் பழங்களைக் கொடுத்தார்.

"உங்கள் குரல் கூடக் கல்கியின் குரல் போல இருக்கிறதே!... சூரியின் பேரனா நீங்கள்? அடேயப்பா, அவர் பெரிய ஆளாயிற்றே! செந்தமிழிலே தடலடி அடிப்பாரே?"

உரையாடல் முடிந்து வெளியே வந்ததும், "அருமையான நாடகம் தான்" என்று கி. வா. ஜ.விடம் சீனிவாசன் சொன்னார்.

ஒத்திகை செய்து நடந்த நாடகம் தான் அது. மதுரையிலிருந்து வந்திருந்த சீனிவாசன், அன்று காலையில் கி.வா.ஜ.வைச் சந்தித்துத் தம்மை இன்னார் என்று சொல்லிக் கொண்டார். முகச் சாயல், நிறம், உயரம், குரல் எல்லாவற்றிலும் அவர் ஓரளவு கல்கி மாதிரி இருந்ததைக் கண்டு கி. வா.ஜ. வியந்தார். தமிழ்த் தாத்தாவைப் பார்க்க வேண்டும் என்று சீனிவாசன் விரும்பவே, அவரை வைத்துக் கொண்டு தம் குருநாதரிடம் விளையாட்டாய் ஒரு "நாடகம்" நடத்தத் திட்டமிட்டார். நாடகமும் பலித்தது. கல்கி மீது தமிழ்த் தாத்தா கொண்டிருந்த பரிவும் அதன் மூலம் வெளியாயிற்று.

இந்த "நாடகம்" பற்றிய விவரத்தைக் கி. வா. ஜ., 1963 கல்கி தீபாவளி மலர்க் கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரை இந்த வாக்கியங்களுடன் முடிவடைகிறது.

கல்கி அவர்கள் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு, இப்படி நிகழ்ந்தது என்று அவருக்கு நான் சொன்னபோது, அவர் கேட்டு உண்மையாகவே மனம் உருகினார். இருவரும் ஒருவருடைய அருமையை மற்றவர்கள் அறிந்து கொண்டவர்கள் அல்லவா?

சீனிவாசனைக் கண்டவுடன் கல்கி என்று எண்ணிக் கொண்டு, "ஐயா! ஐயா! இப்படிச் செய்யலாமா?" என்று அன்று மனம் குழைந்து அந்தத் தமிழ்த் தெய்வம் கேட்ட கேள்வி இன்றும் என் காதில் ஒலிக்கிறது.

1941 அக்டோபர் மாதம், தேவகோட்டையில் நடந்த தமிழிசை மகா நாட்டின்போது சீனிவாசனைக் கல்கி சந்திக்க நேர்ந்தது. அப்போது "பேஷ்! பேஷ்! நீங்கள்தான் அந்தப் போலிக் கல்கியா?" என்று கேட்டு வியப்புடன் அவரைப் பார்த்தார் அசல் கல்கி!

(தொடரும்)

எல்லோரும் நல்லவரே

ஜெமினியின் வண்ணப் படமான இது கிராமச் சூழலில் புனையப்பட்ட கதை. கன்னடத்தில் சக்கைப் போடு போட்ட வெற்றிப் படமான 'பூதய்ய ந மக அய்யு'வின் தமிழாக்கம். கிராம மக்களின் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கடன் பத்திரங்களில் மிரட்டிக் கையெழுத்து வாங்கி அவர்கள் சொத்துக்களைக் கபளீகரம் செய்து வந்த தர்மலிங்கம்தான் திரைக் கதையில் முக்கியமானவர். அவர் மகன் நாகப்பன்.

வட்டியும் முதலுமாக, ஜப்திகளோடு வளர்ந்து வரும் திரைக் கதைக்குச் சுவை யூட்டக் கண்ணம்மா — கந்தன் காதல் பிறந்த வேகத்தில் கல்யாணமும் முடிந்து வேதனையும் ஆரம்பமாகிவிடுகிறது. கந்தனும் நாகப்பனும் எதிரிகளாகி விடுகின்றனர்.

அடி, தடி, உதை, குத்து என்று பல சம்பவங்கள் வந்தாலும் மஞ்சுளா — முத்துராமனின் ரஸமான காதல் காட்சிகள் சுவையூட்டுகின்றன. கிராமத்து மக்களின் பிடிவாத குணமும், முரட்டு சுபாவமும், முத்துராமனின் நடிப்பில் நன்கு வெளிப்படுகின்றன. நாகப்பனாக வரும் லோகேஷ் (கன்னடப் படத்தின் ஹீரோ) பாத்திரத்தை உணர்ந்து நன்றாய் நடித்திருக்கிறார். நாகப்பனின் மனைவியாக வரும் ஜெயந்தி மிக இயல்பாக நடித்து நல்ல பெயரைத் தட்டிக் கொள்கிறார். மஞ்சுளாவிடம் காணும் துருதுருப்பும் துள்ளலும், படத்துக்குக் கவர்ச்சியூட்டுகின்றன.

கோகுல்நாத் தாம் ஏற்ற பாத்திரத்தை மிகவும் சிறப்பித்துக் காட்டிப் படத்துக்கும் சிறப்பை அளித்திருக்கிறார். அடுத்துக் கெடுக்கும் பகையாளியாக வரும் வி. எஸ். ராகவனின் நடிப்பு நிறைவைத் தருகிறது. மேஜர் சுந்தரராஜன் இரக்கமற்ற, பணத்தாசை பிடித்த தர்மலிங்கமாகவே மாறி ரசிகர்களின் ஏகோபித்த கோபத்தைப் பெறுகிறார். அதுதானே சிறந்த பாராட்டு! ஸ்டுடியோ செட் எதுவும் இல்லாமல், கல்சாபுரா என்ற சிறு கிராமத்தில் படப்பிடிப்பு முழுவதையும் நடத்தியிருப்பது பெரிய சாதனைதான். இப்படப் பிடிப்புக்காகவே அப்பகுதியில் உண்மையாகவே வீடுகள் கட்டி ஒரு புது ஊரையே நிர்மாணித்திருக்கின்றனர்.

வரலாறு காணாத முறையில் பெரும் மழை பெய்து ஏரியின் அணைக்கட்டு உடைந்து ஊரே வெள்ளக்காடாகும் காட்சி திகைக்க வைக்கிறது. (நாம் இருக்கும் வறட்சி நிலையில் அவ்வளவு ஜலமும் வீணாய்ப் போவதையும் மேலும் மேலும் மழை பொழிவதையும் காணும்போது ஏக்கம் இதயத்தைக் கவ்வுகிறது!) நாகப்பனின் குடும்பத்தைப் பயங்கர வெள்ளத்திலிருந்து கந்தன் காப்பாற்றுவது அரியதொரு சாதனைதான்..... ஒளிப் பதிவுக் கலையில், மீனாட்சிசுந்தரம் தம் திறமையை நன்கு பதித்திருக்கிறார். ஐந்து பெரிய பாடல்களின் கொடுமையை உணராமலிருக்கத் துரிதமான காட்சி மாற்றங்களுடன்கூடிய அற்புதமான படப்பிடிப்பு பெரிதும் உதவியிருக்கிறது.

படத்தின் தயாரிப்பாளரும், டைரக்டருமான எஸ். எஸ். பாலன் திரையுலக மேதை எஸ். எஸ். வாசனை நினைவுபடுத்துகிறார். பரவசமூட்டும் வண்ணப் படம் 'எல்லோரும் நல்லவரே'.

— காந்தன்




கட்சி மாறும் பட்சி
3
கதை: குட்டி கிருஷ்ணன்
படம்: ராஜு
பொதுக் கூட்டத்தில் பட்சி பேசினான்.
வெற்றூரில் வேலை நீக்கம் செய்யப்பட்ட பலருக்குப் பதவிக் கட்சி அரசிலேயே வேலை போட்டுத் தர வில்லையா? வேலை இழந்த என்னை அப்படி கவனிக்கக் கூடாதா? ஏன் இந்த ஓர வஞ்சனை?....
ஏன் என்று சொல்கிறேன்! வேண்டியவர் வேண்டாதவர், லஞ்ச ஊழல், அதிகார ஆணவம் எல்லாம் அங்கே விளையாடுவது தான் காரணம்!
இதையெல்லாம் எதிர்த்துப் போராடி மக்கள் பணியாற்றவே நான் பிரிந்த கட்சியில் சேர்ந்தேன். பதவிப் பித்தனாய் இருந்தால் பதவிக் கட்சி யிலேயே ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேனா?
மக்கள் பணமே மகேசன் பணம் என்று மதிப்புக்குரிய என் மாமா கூறியிருக்கிறார்!
அடுத்து, கீதாவின் தகப்பனார் பேசினார்.
தோழர்களே! இன்று தேர்தலை முன்னிட்டு கட்சிக்குப் பணம் சேர்ப்பதற்குப் பதில் தியாகி பட்சிக்கு நிதி சேர்க்கிறோம். அதன் ஆரம்பமாக இந்த நோட்டு மாலையை அணிவிக்கிறேன்!
மறு நாள் மாலை...
கீதா டார்லிங்! நோட்டு மாலையை உன் அப்பா திருப்பி எடுத்துக் கிட்டார். ஆனாலும் அப்படி அவர் நன்கொடையைத் தொடங்கி வைச்சது பிரமாத பலனைத் தந்திருச்சு! நேற்று கூட்டத்தில் ஐம்பது ரூபாய் முப்பத்தேழு காசு சேர்ந்தது!


சரி, பத்து நாளைக்குக் கவலை இல்லை. அப்புறம் என்ன பண்ணுவீங்க?
இன்னிக்கு பேப்பர்லே பாரு, கட்சி மாறிய பட்சி பேரு எப்படி அடிபடுதுன்னு!
முழு நேர அரசியல்வாதியா ரொம்ப பிரபலமாயிட்டேன்! பணம் காசு பற்றி இனி என்ன கவலை? யார் கண்டது? வருங் காலத்தில் நீ முதல் மந்திரி மனைவியாகக் கூட விளங்கலாம்!
சீதாவை அனுப்பி விட்டுப் பட்சி வீடு திரும்பும் போது இருட்டான ஒரு சந்தில்....
டேய்! மரியாதையா பர்ஸை எடு!
ஐயோ! இருக்கிற நாற்பத்தேழு ரூபாயை நீ கொண்டு போயிட்டா நான் என்ன பண்ணுவேன்?
என்ன ரீல் விடறே? நேற்று ஐயாயிரம் பண முடிப்பு தந்தாங்களே உனக்கு!
அங்கே வசூலானதே ஐம்பது ரூபாய் தான். பப்ளிசிடிக்காக ரெண்டு சைபர் சேர்த்துச் சொன்னேம். மூணு ரூபா செலவழிஞ்சு போச்சு!
டேய்! என்னையா டபாய்க்கப் பார்க்கிறே!
பட்சி பயந்து நடுங்கியதா லேயே கேடியின் கத்தி அவன் மீது பட்டு விடுகிறது.
ஆ! ஐயோ! ரத்தம்! குத்திட்டான்! கொன்னுட்டான்!

தொடரும்

படித்தோம், சொல்கிறோம்!





மேடையிலே புயலும் அடிக்கும்; பூங்காற்றும் வீசும்!

நிலா நானூறு

தமிழர்கள் இயற்கையோடு நேயம் பூண்டு இன்பம் துய்த்தவர்கள்; பழந்தமிழ் நூல்களில் இயற்கையின் எழில் வடிவங்களைப் பாடாத நூலே இல்லை. இயற்கையைப் புனையும்போது முழு மதியின் மோகன நிலவு அவர்கள் கண்களில் படாமல் போகுமா? அதைப் பற்றி எத்தனை எத்தனையோ புலவர்கள் எய்ப்பில் வைப்பாகப் பாடி வைத்திருக்கின்றனர். அத்தகைய பாடல்களில் வகைக்கொன்றாகத் திரட்டித் தரப்பட்டிருக்கிறது, இந்நூலில். நிலாவை அண்மைக் காலத்தில் வெற்றி கொண்ட அமெரிக்க விண்வெளி வீரர் ஆர்ம்ஸ்ட்ராங் இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்கியிருப்பது பொருத்தம் தான். ஆனால் சமீபத்திய விண்வெளி வெற்றிக்கு அதிகமாக இந்தக் கவிதை நூலில் இடம் ஒதுக்கப்படாதது ஒரு குறை.

தமிழ் நாட்டுப் புலவர்களின் கவிதைகளை மட்டும் தொகுக்காமல், ஈழநாட்டுக் கவிஞர்களின் கவிதைகளையும் சேர்த்திருக்கின்றனர். பழந்தமிழ்க் கவிதைகளோடு புதுக் கவிதைகளையும் சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது.

பல ரகக் கவிஞர்களின் பிரதிநிதித்துவம் உள்ள ஒரு கவிதைத் தொகுப்பு நூல் என்பது இதன் சிறப்பு.

தமிழன்பர்கள், கவிதைகளை ரசிப்பவர்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டிய நூல். இதைப் பெரு முயற்சி செய்து தொகுத்து வெளியிட்ட தொகுப்பாசிரியர்களான கவிஞர் ஆற்றலரசு, புலவர் கல்லை ஆ. துரை ஆகிய இருவருக்கும் தமிழ் உலகம் கடமைப் பட்டுள்ளது.

பிரசுரம்: அரசு பதிப்பகம், 5, கிரியப்பா சாலை, சென்னை—600017 விலை ரூ. 12.

மூன்றுவது நாள்

பதினொரு சிறுகதைகள், பல்சுவைகளும் கொண்ட சிறுகதைகள், இந்நூலில் அடங்கியிருக்கின்றன. ''சாட்சி'' என்ற சிறுகதையில் பரீட்சைக்குப் போகும் ஒரு மாணவனை நம்முன் நிறுத்தி எத்தனை கற்பனைகளை வாரி விடுகிறார்! அந்த மாணவன் கண்ட வேதனைக் காட்சி அவனைப் பரீட்சை எழுத வொட்டாமல் செய்துவிட்ட கொடுமையை நேரில் கண்டது போல் எழுதியிருக்கிறார்.

''மூன்றுவது நாள்'' என்ற கதையில், சாவு விழுந்துவிட்ட வீட்டின் நிலைமையை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். சோக நிகழ்ச்சியின் அவலச் சுவையை ஆசிரியர் எடுத்துக் காட்டும் விதம் நன்றாயிருக்கிறது.

''அழைப்பு'' என்ற சிறுகதை சிந்தனையைத் தூண்டும் கதை.

ஒரு பெரிய பணக்காரனையும், ஓர் ஏழையையும் அறிமுகப்படுத்திவிட்டு, இருவருடைய மனப்பான்மைகளையும் எடுத்துக் கூற ஆசிரியர் கையாண்டிருக்கும் உத்திகள் உள்ளத்தை நெகிழ வைக்கின்றன. சர்வசாதாரண நிகழ்ச்சி என்று நாம் கருதக்கூடிய சம்பவங்களிலும் ஆழ்ந்த உணர்ச்சிகளுடன் கூடிய கதையம்சத்தைக் காண்பதே ஆசிரியர் ஸ்ரீ நீல. பத்மநாபனின் தனி ஆற்றல்.

— ஸோமாஸ்


பிரசுரம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—600001; விலை ரூ. 7.50.


மேடையிலேவீசிய மெல்லியபூங்காற்று

புத்தி சாதுர்யத்தை எடுத்துக் காட்டக் கூடிய புத்தகம் ஒன்று வேண்டுமானால் தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி அவர்களின் மேற்படி புத்தகத்தை யாரும் யாருக்கும் சிபாரிசு செய்யலாம். 1964ம் ஆண்டிலிருந்து 1974ம் ஆண்டுவரை பல்வேறு விழாக்களில் முதல்வர் கலந்துகொண்டு நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து முப்பத்திரண்டு சொற்பொழிவுகளின் தொகுப்பு இந்நூல்.

தி. மு. க. வின் வளர்ச்சியையும், கருணாநிதியின் பூர்வகால மேடைப் பேச்சுக்களையும், கொள்கைகளையும் கேட்டவர்களுக்கு, இந்நூலைப் படிக்கும்போது கருணாநிதி எப்படியெல்லாம் சமாளிக்கிறார், எவ்வளவு லாகவமாகப் பல்டியடிக்கிறார் என்ற வியப்பு ஏற்படாமலிராது. அந்தச் சமத்காரத்தைப் பாராட்டாமலிருக்கவும் முடியாது.

திரு கருணாநிதி சார்ந்துள்ள கட்சி, சட்டசபைக்குள் புகும் கட்சியாக மாறுவதற்கு முன் கவிச் சக்கரவர்த்தி கம்பனைப் பற்றியும், ராமனைப் பற்றியும், ராமாயணத்தைப் பற்றியும் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தது என்பதை நாடறியும். விதியின் விளையாட்டு என்னென்பது? இவர்களை ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வைத்து விட்டது. அது மட்டுமா? கம்பனைத் தெய்வமாகப் போற்றும் காரைக்குடி கம்பன் கழகத்தார், திரு மு. க. வையே அழைத்து விழாவைத் தொடங்கி வைக்கச் சொல்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கருணாநிதி நிகழ்த்திய உரை — தமது பழைய நிலைக்கு மாறுபடாமலும் அதே சமயம் கம்பனை வழிபடவே செய்பவர்கள் மனம் புண்படாமலும் நிகழ்த்திய உரை—பேச்சுக் கலையில் ஓர் அரிய சாதனை என்று சொல்ல வேண்டும். இப்படியொரு தர்ம சங்கடமான நிலையில் சிக்கிக்கொள்ளும்போது பல விஷயங்களைத் திரித்துக் கூற வேண்டிய நிலை பேச்சாளருக்கு ஏற்படுகிறது.





யானைக்குட்டி
மோரா

நாதமுனிகள், கம்பராமாயணத்தில் சடையப்ப வள்ளலை ஆங்காங்கு பாராட்டிப் பாடியிருப்பதால், அப்பாடல்களை நீக்கிவிட்டால் பிரபந்தத்தில் நாலைச் சேர்த்துவிடலாம் என்று கூறினாராம்.

கம்பர், தமது காவியத்துக்குப் பிரபந்தத்தில் சேர்கிற அந்தஸ்து இல்லாவிட்டாலும் போகட்டும் சடையப்ப வள்ளலைப் பற்றியுள்ள பாடல்களை அகற்ற முடியாது என்று கூறினாராம்.

இது கம்பனுடைய நன்றி உணர்ச்சியை உணர்த்த வந்த கதை.

ஆனால் முதல்வரோ நன்றியுணர்ச்சியை ஒதுக்கிவிட்டு வேறு அனர்த்தங்களைக் காண்கிறார். பொருளை முற்றும் திரித்து விடுகிறார்.

இதேபோல் மற்றோர் இடத்தில் ராஜாஜி கலைஞரின் குதர்க்கவாதத்துக்கு ஆளாகிறார். வாலி வதத்தைப் பற்றி ராஜாஜியின் கருத்தை முதல்வர் திரித்துக் கூறுவதைக் கேளுங்கள்:

''இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது தவறல்லவா?'' என்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு ராஜாஜி சொல்கிற பதில்:

சாமானிய சம்பவங்களில்கூட மனத்தின் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் உள்ளத்தின் கோணல்களையும் படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் பத்மநாபனுக்கு உண்டு. மேலே காணப்படுவது 'ஃபைல்கள்' என்ற அவரது நாவலுக்கான மேலட்டை.

'இராமன் மானிட அவதாரம் எடுத்துவிட்டான். மானிடன் தவறு செய்வான். ஆகவே அத்தவறுகளைப் பெரிதாகக் கொள்ளக் கூடாது' என்பதாகும். ''ஒரு கடவுள் கஷ்டப்பட்டு மனித அவதாரம் எடுப்பதே மனிதர்களைத் திருத்துவதற்காக இருக்கலாமே தவிர, இதைப் போல் நடந்து கொண்டால் தவறல்ல என்று சொல்வதற்காக இருக்கலாமா?'' என்று கருணாநிதி கேட்டிருக்கிறார்.

எல்லா அவதாரமும் ஒன்றுபோல் அல்ல. ராமன் மானிட வடிவில் வந்து, மனிதன் படக் கூடிய கஷ்டககங்கள் எல்லாம் தானும் அனுபவித்து வழிகாட்டினான். தவறே இழைக்காத மானிடனாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதல்ல நோக்கம். எந்த மனிதனும் செய்யக் கூடிய தவறு செய்து ராமன் வாழ்ந்து காட்டியதால், சாதாரண மக்களுக்கும், தவறிழைக்கும் மக்களுக்கும் 'நமக்கும் உய்வுண்டு' என்ற நம்பிக்கை பிறக்கிறது. நாமும் ராமனைப்போல் லட்சிய புருஷனாக வாழலாம் என்ற நம்பிக்கை எழுகிறது. ராமன் நமக்கு மிக நெருங்கியவனாகிறான். இது தான் ராஜாஜியின் கருத்து.

இது நமது முதல்வருக்குத் தெரியாது என்றல்ல. ஆனால் பழைய பழக்கத்தின் காரணமாகத் திரித்துக் கூறுகிறார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், உமாமகேசுவரன்

'நிலா நிலா வா வா!' என்று அழைக்கவில்லை ஆர்ம்ஸ்ட்ராங். வெற்றி ஊர்வலத்தில் மக்களின் வாழ்த்தை ஏற்கிறார்.



நெல்லெபிள்ளி நவநீதகோபாலன்

பாலக்காடு மாவட்டத்தில் நெல்லெபிள்ளி அக்ரஹாரத்தில் நவநீத கோபாலகிருஷ்ணன் அருள்பாலித்து வருகிறான். எண்ணிய கருமங்களை ஈடேற்றி வரப்பிரசாதியாகத் திகழ்ந்து வருகிறான்.

நவநீத கோபாலகிருஷ்ண பஜனை மடம் என்ற பெயரில், மிகப் புராதனமான கோயில் ஒன்று உள்ளது. அது இன்று சிதிலமாகி ஜீர்ணோத்தாரணப் பணியை எதிர்நோக்கியிருக்கிறது. அருகிலேயே ஒரு கல்யாண மண்டபமும் கட்டித் திருப்பணியும் செய்து கும்பாபிஷேகம் செய்யக் குறைந்தபட்சம் நாற்பதினாயிரம் ரூபாய் செலவாகலாம் என்று கருதப்படுகிறது.

இப்பணி பூர்த்தியுற ஆஸ்திக அன்பர்கள் தாராளமாக நன்கொடை வழங்கி நவநீத கோபால கிருஷ்ணனின் அருட்பிரசாதத்துக்குப் பாத்திரர்களாகக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ என். எச். ராமகிருஷ்ணசாஸ்திரி, தலைவர், நவநீத கோபாலகிருஷ்ண பஜனை மடத் திருப்பணிக் குழு, அக்ரஹாரம், நெல்லெபிள்ளி, பாலக்காடு மாவட்டம்.

பின்னை, உடுமலை நாராயணக் கவி, சங்கர தாசர், வள்ளலார் போன்றவர்களின் நினைவு விழாக்களில் கலந்துகொண்டு அவர்களைப் பற்றி யெல்லாம் ஆற்றியுள்ள உரைகள் சுவை மிக்கவையாகும்.

ஆட்சி மொழி பற்றி, பயிற்றுமொழி பற்றி, தமிழிசை பற்றி அவருடைய கருத்துக் களைத் தமக்கே உரிய முறையில் மிகத் தெளி வாகக் கூறுகிறார்.

படிக்கப் படிக்கத் திகைப்பும் வியப்பும் ஊட்டும் கட்டுரைகள் இதில் நிரம்பிக் கிடக் கின்றன. —எஸ்.வி.எஸ்.

பிரசுரம்: தமிழ்க் கனி பதிப்பகம். விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை—600001, விலை ரூ. 6.00

சின்னச் சின்ன நூல்கள் - சிறுவர்களுக்கான சிறந்த நூல்கள்

கதை என்றால்தான் குழந்தைகளுக்குக் கற்கண்டாக இனிக்கும். இப்படிக் கதை சொல்லும்போதே அறிவியல் செய்திகளையும் அதனூடே கலந்து கலந்துகொடுத்துவிட்டால் இளம் உள்ளத்தில் அவை நன்கு படிந்து விடும். பின்னால் அதே செய்தியைப் பாடப் புத்தகத்தில் படிக்கும்போது 'இது நமக்கு முன்பே தெரியுமே' என்ற பெருமிதம் ஏற் படும். 'இன்னும் இதை விரிவாகப் படிக்க வேண்டும்' என்ற ஆர்வமும் உண்டாகும்.

இந்த மாதிரியான முறையில் குழந்தை களுக்கான புத்தகங்களை நேரு நூலகம் வரி சையாக வெளியிட்டு வருகிறது. நேஷனல் புக் டிரஸ்ட் மூலமாக.

மோரா என்ற யானைக்குட்டி தன்னுடைய கதையைக் கூறுகிறது. தந்தையை இழந்த ஒரு குட்டி யானை இந்த மோரா. முதல் முத லாக அது காணும் பெரிய கானகம், வேட்டை யாட வருவோர்கள், அவர்களிடம் அதன் அம்மா சிக்கிக்கொள்வது, துஷி என்ற அதன் மாமாவின் அனுபவம், இப்படி யானை களின் குணங்கள் பழக்க வழக்கங்கள் இவை களை ஒரு குட்டி யானையின் கண்ணோட்டத் தில் விளக்கிக் கொண்டு போகிறார் இதன் ஆசிரியரான பிரபல நாவலாசிரியர் முல்க்ராஜ் ஆனந்த். அழகாக மொழிபெயர்த்திருப்பவர் அழ. வள்ளியப்பா. புத்தகம் அற்புதமான வண்ணங்களில் அழகான படங்களுடன் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

படாபாணி என்ற கதையும் இதே முறை யில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. காட்டிலாகா வில் உழைத்து ஓய்வு பெற்ற நாநா என்ற முதி யவரிடம் கனு என்ற சிறுவன் எத்தனையோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறான். காக் கையின் குஞ்சைப் பிறர் எடுத்துவிட்டால் பிறகு அது அந்தக் குஞ்சைத் தன்னுடன் சேர்க்காதாம். பாம்புகள் தூங்கும்போது அவற்றின் கண்கள் திறந்தே இருக்குமாம். ஏனென்றால் அதற்கு இமை கிடையாது. சாம்பிராணி எதிலிருந்து வருகிறதுதெரியுமா? தேவதாரு மரத்தின் பிசின்தான் அது. தேன் கூடு, சிறுத்தை, பூச்சிகள், இப்படிக் கான கத்தின் அற்புதங்களை யெல்லாம் விளக்கு கிறார் பேரன் கனுவுக்குத் தாத்தா நாநா. ஆற்றின் போக்கு, காட்டுத் தீயின் கோரம் இப்படி ரொம்பவும் விறுவிறுப்பாகப் போகி றது படாபாணி. மூல ஆசிரியர் லீலா மஜூம் தார். நடை இன்னும் கொஞ்சம் சரளமாக இருந்திருக்கலாம். மூலமே இப்படித்தானோ அல்லது மொழிபெயர்ப்பாளரின் கோளாறோ தெரியவில்லை.


ஏகலைவனின் குரு பக்தி, கோகுலக் கண்ணன், வீரன் அபிமன்யு, லவகுசர்கள், சகுந்தலையின் மகன் பரதன் ஆகியோரின் கதைகளைக் கொண்டது **வீரர் கதைகள்** என்ற புத்தகம். எழுதியவர் ராஜேந்திர அவஸ்தி.

டைனமோ, தந்தி முறை, அணுசக்தி, எலெக்ட்ரானிக்ஸ் இவற்றின் தோற்றம் வளர்ச்சி பற்றிய அறிவியல் விளக்க நூல் **உலகை மாற்றிய புதுப் புனைவுகள்** (பகுதி இரண்டு) மூல ஆசிரியர் மீர் நஜாபத் அலி.

— வாண்டுமாமா

[ஒவ்வொரு புத்தகத்தின் விலையும் ரூ. 1.50 தான். வெளியிட்டோர்: நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி, விநியோகிப்பாளர்கள் (தமிழ் நாட்டுக்கு) பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை—1.

ஒவ்வொரு மாதமும் கடைசி வாரக் கல்கியில் இப்படி சில நூல்களை நேயர்களுக்கு அறிமுகப்படுத்தத் தீர்மானித்திருக்கிறோம். வாங்கிப் பார்க்கவோ அல்லது நூலகங்களில் தேடவோ வசதி செய்யும் இப்பகுதிக்கு வரவேற்பு இருக்குமென நம்புகிறோம்.


லக்மே லவெண்டர் டால்க்
கொஞ்சி மணக்கும் ஃபிரெஞ்சு மயக்கம்...
ஃபிரெஞ்சுக்காரரே நெஞ்சாரப் பாராட்டுவார்.
Lakme
Lakme
லக்மே லவெண்டர் டால்க்—பூத்து மலர்ந்த ஃபிரெஞ்சு லவெண்டர் பூக்களின் வைபோக மணம். இன்ப இரகசியங்கள் பேசும்...மோகனக் கணை வீசும். பூசிக் கொள்வீர் லக்மே லவெண்டர் டால்க். யாவரையும் மதிமயக்குவீர்!
லக்மே
லவெண்டர் டால்க்
உங்கள் எழில் எங்கள் தொழில்
லக்மே

3

மோகினி கபூரிடம் தன் குறைகளை அடுக்கினாள்: ''ஒரு பிள்ளை பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக் கொண்டு, 'நீ வீட்டில் இருக்கும் வரை இது நரகந்தான்' என்கிறான். ஒரு பெண், மூன்றாம் மூன்று இலை விடவில்லை. சிகரெட் குடித்துவிட்டு வீட்டில் நினைத்தபடி ஆட்டம் போடுகிறாள். மூத்த பெண்ணைப் பற்றியும், பிள்ளையைப் பற்றியும், கேட்கவே வேண்டாம்.... இப்படிக் குடித்துவிட்டு நாலு பேர் வீட்டில் கொண்டு வந்து விடும்படியாக ஆகிவிட்டதே, நம் மானம் சந்தி சிரிக்கவில்லை?''

''சரி, சாப்பிடலாமா ?''

''சீ.... நீங்கள் ஒரு மனுஷனா ? 'பக்கத்து வீடுதானே பற்றி எரிகிறது, நமக்கென்ன?' என்று இருக்கிறீர்களே, இன்று என்னைத் தூக்கி எறிந்து பேசுகிறவர்கள், நாளைக்கு உங்களைச் செருப்பால் அடிக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம் ?''

'' நீ இப்படி ரஸனையற்ற முறையில் பேசுவதைக் கேட்பதைக் காட்டிலும், செருப்பால் அடிபடுவது மேல்.''

'' அப்படியானால் அடிக்கட்டுமா ?'' என்று கேட்டு அவள் கீழே குனிந்தாள்.

அப்படியே கழுத்தை நெரித்து அவளைக் கொன்றுவிட வேண்டும் போல் அவருக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அவள் இப்படிப் பேசுவது இது முதல் தடவையல்ல. பல தடவைகளில் இதைவிட மோசமாகப் பேசியிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவருக்கு இப்படித்தான் ஆத்திரம் வரும். ஆனால் பதில் சொல்வது என்பது அவரால் முடியாத காரியம்.

அவர் மௌனமாகச் சென்று 'டைனிங் டேபிள்' எதிரே நாற்காலியில் உட்கார்ந்தார்.

'' இதற்கு முடிவு கட்டினால் தான் உங்களுக்கு இன்று சாப்பாடு''என்று கத்தினாள் மோகினி.

அவர் எழுந்து, தம் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அவர் எதிரே அவள் சென்று, வழியை மறைத்துக்கொண்டு நின்றாள்.

''ஊ^ம்.... சொல்லுங்கள்.''

''அம்மா.... அப்பாவுக்கு வழியை விடு.''

அவள் திரும்பிப் பார்த்தாள். ராகேஷ்...!

''நீ யாரடா இதைச் சொல்ல? ஊமைக் கோட்டான் மாதிரி இருந்தாய்.... நீயும் பேச ஆரம்பித்துவிட்டாயா ?''

''பேசாவிட்டால் உன்னைப் பற்றி எனக்கு எந்தவித அபிப்பிராயமும் இடையாது என்று அர்த்தமா? நீ பெண்ணே இல்லை...ராட்சசி!''

'' பார்த்தீர்களா? அவனும் பேச ஆரம்பித்து விட்டான்.... எல்லாம் நீங்கள் கொடுத்திருக்கும் இடம்... நான் ராட்சசி தான்..... ராட்சசிதான்'' என்று சொல்லிக் கொண்டே கபூரைப் பிடித்து அவள் உலுக்க ஆரம்பித்தாள்.

ராகேஷ் அவள் அருகில் சென்று அவளைப் பலவந்தமாகப் பற்றிப் பக்கவாட்டமாகத் தள்ளினான்.

'' இப்படி நடந்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லை?'' என்று அவன் நிதானமாகக் கேட்டான்.

'' அவருக்குப் பரிந்து கொண்டா வருகிறாய்? அவரை என்ன செய்கிறேன், பார் !'' என்று கூச்சலிட்டுக் கொண்டே அவள் கபூரை நோக்கி ஓடினாள்.

ராகேஷ் அவளை வழிமறித்தான். '' நீ மேலே ஓர் அடி எடுத்து வைத்தால் உன்னைக் கொன்றுவிடுவேன்..... எனக்கு வார்த்தைகளை விரயம் செய்யத் தெரியாது.... தெரிந்து கொள்'' என்றான் ராகேஷ்.

கபூர் வாசலை நோக்கிச் சென்றார். இந்த இடத்தை விட்டுப் போயாக வேண்டும். எங்கே போனாலும் சரிதான்.

அவர் காரை 'ஸ்டார்ட்' செய்தபோது மோகினி கூச்சல் போட்டுக் கொண்டிருப்பது அவர் காதில் விழுந்தது. அவருக்கு இவ்வளவு ஆத்திரம் உண்டானதில் ஆச்சரியம் இல்லை. ராகேஷ் இப்படி இந்தச் சண்டையில் தலையிடுவான் என்று அவரும் எதிர்பார்க்கவில்லை.

தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி



சாதாரணமாக அவன் வீட்டிலிருப்பதே யாருக்கும் தெரியாது. தன் அறையை விட்டு நகர மாட்டான், படித்துக் கொண்டோ இல்லாவிட்டால், ஏதாவது ஒன்றை, 'ரிப்பேர்' செய்து கொண்டோ இருப்பான். இந்த வருஷம் 'எலெக்ட்ரானிக்ஸ் என்ஜினீயரிங்'கில் 'மாஸ்டர்' பட்டம் பெற்றுவிட்டானானால், அவனை அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும்.... பிள்ளைகளில், நல்ல வேளை, மூத்தவளைத் தவிர மற்றைய இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள்தான், சந்தேகம் இல்லை. அசோக் அமெரிக்காவில் 'பிஸினஸ் மானேஜ்மெண்ட்' படித்துவிட்டு, நல்ல வேலையில் இருக்கிறான். ஸ்வர்ணாவையும் சதீஷையும் நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது.

'நான் ஏன் கவலைப்பட வேண்டும்? எனக்குக் கல்யாணம் ஆகிக் குழந்தைகுட்டிகள் இருக்கின்றன என்பதை மறந்த ஒரு மானசிக நிலையில் என்னால் இருக்க முடியும். வாழ்க்கை எனும் கோப்பையில் உள்ள இன்ப மதுவைக் கடைசித் துளி வரை சுவைக்கத் துடிக்கும் இளைஞன் நான்........'

மோகினி அவருடன் சண்டை போடும் போதெல்லாம், அவர் இத்தகைய நினைவோட்டத்தில் மூழ்கி, அவளிடமிருந்து தாம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பது போல் உணர்வது வழக்கம். வர வர இந்த நினைவோட்டம் ஓர் 'அப்ஸெஷனை'ப் போய்விட்டது. எப்பொழுது எப்பொழுதெல்லாம் மனசுக்குச் சங்கடமான செய்திகள் அவரை வந்து தாக்குகின்றனவோ, அப்பொழுதெல்லாம் அவர் தன்னிச்சையாக இப்படி எண்ணத் தொடங்கி விடுகிறார்.

அவரை மறுபடியும் 'கிளப்'பில் பார்த்ததும், ரத்தன்லால் ஆச்சரியம் அடைந்தான். அவனைக் கண்டதும் அவர் மனத்தில் எங்கோ ஓர் ஓரத்தில் குடிகொண்டிருந்த நைப்பாசை உருப்பெறத் தொடங்கியது.

''என்ன இப்படி மறுபடியும்?'' என்று கேட்டான் ரத்தன்லால்.

''அன்று ஜன்பத் ஹோட்டலில் 'கஸல்' கேட்ட போது, 'இதெல்லாம் என்ன கஸல், உண்மையான கஸல் கேட்க வேண்டுமென்றால் என்னுடன் வாருங்கள்' என்று சொன்னாயே, அது எங்கே? வா, போகலாம்'' என்றார் கபூர்.

''நிஜமாகவா?'' என்று மிகுந்த வியப்பு முகத்தில் தெரிய அவன் வினவினான்.

''ஆமாம்.... புறப்படு, சீக்கிரம்.... என் மன நிலை மாறுவதற்குள் கிளம்பு....''

ரத்தன்லாலைப் பார்க்க வேண்டுமென்று அவர், கிளப்புக்கு வரவில்லை. அவனைப் பார்த்த பிறகுதான், இதுவரை 'மானசீகங்'களாக இருந்தவற்றைச் செயலாக்க வேண்டும் என்ற ஆவேசம் அவருக்கு ஏற்பட்டது. ரத்தன்லால்தான் இதற்கு ஏற்ற துணை. ஒரு 'ஸ்டாக் புரோக்கர்' கம்பெனியின் நிர்வாகத் தலைவனான அவனுக்கு 'இந்த விஷயங்கள்' எல்லாம் அத்துப்படி.



காரில் உட்கார்ந்ததும் ரத்தன்லால் கேட்டான்: ''கேட்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். வீட்டில் தகராறு?''

அவர் பதில் சொல்லவில்லை.

''சதீஷ் குடித்துவிட்டுக் 'கிளப்'பில் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தான். உங்கள் குடும்ப விவகாரத்தை அறிய வேண்டுமென்பதற்காகவே சிலர் வேண்டுமென்றே அவன் வாயைக் கிளறிக் கொண்டிருந்தனர்.....''

''நாம் இப்பொழுது எங்கே போக வேண்டும்?''

''ஜி. பி. ரோட்.''

''மை காட்.... அங்கேயா?''

ரத்தன்லால் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''அது.... மிகவும் மோசமான.... இடம் இல்லை....?''

''உங்களை அங்கு யாருக்குத் தெரியப் போகிறது? உங்கள் பர்சுக்குத்தானே மதிப்பன்றி, உங்களுக்கல்ல......''

'இவன் சொல்லுவது வாஸ்தவம்தான். போகும் இடங்கள்தோறும், நான் ஒரு பொருளாதார மேதை, தொழில் துறை விற்பன்னன் என்ற நினைவைச் சுமந்து கொண்டு ஏன் போக வேண்டும்? சதையும் இரத்த ஓட்டமும் உள்ள ஓர் ஆதார பௌதிக மனிதன் நான்.... நாகரிக நிர்ப்பந்தத்தினால் விளைந்த மேற்பூச்சுக்கள் எனக்குத் தேவையில்லை. சமூக அந்தஸ்து ஏணியில் உயர்ந்த பதவியில் இருப்பதினால் உருவாகியிருக்கும் என் மன நிலையைச் சூன்யமாக்கிக் கொண்டு, ஓர் அநாமதேயனாக, இருக்க முயல்வதில் என்ன தப்பு?'

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றான் கபூர்.

''ஒன்றுமில்லை......''

''நான் நிச்சயமாக யாரிடத்திலும் நாம் போகும் இடம் பற்றிச் சொல்லமாட்டேன். என்னை நீங்கள் நம்பலாம்.''

''நீ சொல்வதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.''

ரத்தன்லால் சிரித்தான்.

''எதற்குச் சிரிக்கிறாய்?''

''சதீஷ் 'கிளப்'பில் சொன்னது நினைவுக்கு வந்தது.''

''என்ன சொன்னான்?''

''சொன்னால் நீங்கள் கோபப்படலாம்.''

''சொல்லாமல் இருந்தால்தான் எனக்குக் கோபம் வரும்...... என்ன சொன்னான், சொல்லேன்.''

'' 'எனக்கு என் அம்மாவைக் கண்டால் பயமில்லை.... அப்பாதான் பயப்படுகிறார்.... நான் ஏன் பயப்பட வேண்டும்? அவளுடைய ரகசியங்கள் எனக்குத் தெரியும்.....' இப்படி ஏதேதோ வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிக் கொண்டிருந்தான்.''

''ரகசியங்களா?''

''விடுங்களேன்..... ஸம் நான்ஸென்ஸ்.''

''கம் ஆன், டெல் மீ.... என்ன ரகசியங்கள்?''

''குடித்தவன் ஏதேதோ உளறியிருக்கிறான். இதைப் போய் நாம் 'ஸீரியஸாக' எடுத்துக் கொண்டு.....''

''என்ன சொன்னான், சொல்.....''

''நான் அவற்றை நம்பவில்லை......''

''நீ நம்புகிறாயா இல்லையா என்பது பற்றி நான் கவலைப்படவில்லை..... அவன் சொன்னதைச் சொல்......''

''உங்கள் மூத்த மகளுடைய மாமனாருக்கும் மிஸஸ் கபூருக்குமிடையே இருப்பது வெறும் சிநேகிதம் மட்டுமல்ல என்பதுபோல் ஏதோ சொன்னான்..... 'கிளப்' வர வர வெறும் வம்பு மடமாகி விட்டது. சதீஷ் நன்றாகக் குடித்திருக்கிறான் என்று தெரிந்தும், அவனைப் போய் இது பற்றித் துருவித் துருவிக் கேள்வி கேட்டு..... சே! இவர்கள் எல்லோரும் படித்தவர்களா? எனக்கு அவமானமாக இருந்தது.''

கபூர் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார். நல்ல குளிரி



லும், நெற்றியில் வியர்த்திருந்தது. 'எனக்கே இந்தச் சந்தேகம் உண்டு. இதைச் சொல்லி இது என்னுடைய வீண் பிரமை என்று ஏற்பட்டுவிட்டால், இது என் தன்னம்பிக்கையின்மையை எடுத்துக் காட்டுவதாக இருக்கும் என்று இதுவரை பேசாமலிருந்திருக்கிறேன். இது ஸ்வர்ணாவுக்குத் தெரிந்திருக்கலாம்.... இதனால்தான் அவள் மோகினியைக் கண்டு பயப்படுவதே கிடையாது. மோகினி அவளைக் கண்டு ஓரளவு பயப்படுவது போல் தோன்றுகிறது. ஒரு வேளை.... ஒரு வேளை.... வீட்டில் எல்லோருக்குமே தெரிந்து...என் முதுகுக்குப்

பின்னால் எல்லாரும் சிரித்துக் கொண்டிருக் கிறார்களா?

மோகினிக்கு எத்தனை சிநேகிதர்கள் இருக் கிறார்கள்? எல்லாரைப் பற்றியும் நான் சந் தேகப்பட வேண்டுமா? ஸ்வர்ணாவின் மாம னார் கோயல் அவளூர்க்காரன்.... பெண்க ளிடம் நாசூக்காகப் பழகத் தெரிந்தவன்..... அவனுடைய வீரப் பிரதாபங்களை என் னிடமே அளந்திருக்கிறான்.... மோகினியின் இன்னொரு சிநேகிதன் டாக்டர் கன்வர்....வீடு அதிரும்படியாகச் சிரிப்பான். அவனுக்கும் மோகினிக்கும் உள்ள பொது ஈடுபாடு, ஏதோ ஒரு ஸ்வாமிஜியிடம் இருவரும் வைத்துள்ள அபார நம்பிக்கை. எல்லாப் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கும் அவளை அழைத்துக்கொண்டு போய்விடுவான். எனக்கு இரண்டு வருஷங் களுக்கு முன்னால் குடியரசு தினத்தின் போது, அரசாங்க விருது கிடைத்ததற்கு அவன்தான் காரணம் என்று மோகினி சொல்லிக் கொள் கிறாள்...... 'ஹோம் மினிஸ்டிரி'யில் பல உயர்தர உத்தியோகஸ்தர்கள் அவனுக்கு உற வினர்கள்.......'

''நீங்கள் பேசாமல் இருப்பதைப் பார்த் தால் எனக்குப் பயமாக இருக்கிறது'' என் றான் ரத்தன்லால்.

'' என்ன பயம் ?''

'' உங்களுக்கும் அந்த மாதிரிச் சந் தேகம்......?''

''நான் உன்னுடன் ஜி. பி. ரோட் வரலாம் என்றால், என் மனைவியின் நடத்தையைப் பற்றிக் கேள்வி கேட்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது ?''

'' ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தி யாசம் இல்லையா ?''

''வித்தியாசம் இருப்பதுதான், உலகத்துப் பிரச்னைகளுக்கெல்லாம் காரணம்.....''

ரத்தன்லால் சிரித்தான். கபூரும் புன்னகை செய்தார். இவனிடம் தான் இதனால் பாதிக் கப்பட்டுவிட்டதாக எதற்குக் காட்டிக் கொள்ள வேண்டும்?

''இங்கே நிறுத்துங்கள்'' என்றான் ரத்தன் லால்.

கபூர் காரைத் 'தெரு ஓரமாக நிறுத்தினார். பகல் வேளைகளில் கீழேயிருந்த கடைகளில் வியாபாரநிமித்தம் 'ஜே ஜே' என்று கூட்டம் இருக்கும். இப்பொழுது தெரு விளக்கைக் கூடக் காணோம். சந்தடியின்றி இருட்டாக இருந்தது.

ஒரு 'பான்' கடைக்குப் பக்கத்தில் இருந்த மாடிப் படிகளில் ரத்தன்லால் ஏற ஆரம்பித் தான்.

''நமஸ்தே பாபுஜி!'' என்றான் 'பான்' கடைக்காரன். அவன் காவிப் பற்கள் தெரியப் புன்னகை செய்தான்.

இந்த வணக்கம் ரத்தன்லாலுக்குத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தார் கபூர். ஆனால் இதை அவன் கவனித்ததாகத் தெரிய வில்லை.

மாடிப் படிகளில் இருட்டாக இருந்தது. மூன்று படிகள் ஏறியதும், அங்கு ஒரு கறுப்பு நாய் படுத்துக் கொண்டிருந்தது. ரத்தன்லால் இங்கு வாடிக்கைக்காரனாக இருக்க வேண்டும். அறிமுகமான வாசனை என்று அந்த நாய் அதைக் கடந்து சென்ற போது, பேசாமல் படுத்துக் கொண்டிருந்ததிலிருந்து தெரிந்தது.

ரத்தன்லால் கதவைத் தட்டினான். இலேசாகக் கதவு திறந்தது. வக்னௌ குர்த்தா, பைஜாமா அணிந்த ஒருவன் அவனை இன்முகத்துடன் வரவேற்றான்.

''வாருங்கள்.....'' என்று திரும்பிக் கபூரை அழைத்தான் ரத்தன்லால்.

உள்ளே வெளிச்சம் கண்ணைப் பறித்தது. ஒரு பெரிய கூடம். ஏழெட்டுப் பெண்கள் பளிச்சென்று வண்ண உடை உடுத்து, முழங் கால் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டிருந் தார்கள். அவர்கள் எதிரே பலதிறப்பட்ட ஆடவர்கள், கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

பெண்களுக்குப் பதினெட்டு வயதிலிருந்து நாற்பது வரை இருக்கலாம். சாயம் பூசிய முகங்கள். தோல்கள் தடிமனாக இருந்தன. கபூரையும் ரத்தன்லாலையும் கண்டதும் அவர் களுடைய வருகைக்குத்தான் காத்திருந்தது போல் பெண்கள் புன்னகை செய்தார்கள். வெளியே வராந்தாவில் ஒரு கட்டிலில் நாற் பத்தைந்து வயதுக்காரி ஒருத்தி படுத்துக் கொண்டிருந்தாள். உதடு சிவக்கச் சிவக்க அவள் வெற்றிலைப் பாக்கு மென்று கொண் டிருந்தாள்.

பெண்களுக்குப் பக்கவாட்டத்தில் ஹார் மோனியக்காரர்களும், தப்லா வாசிப்பவர் களும் உட்கார்ந்திருந்தார்கள்.

அறைக்கு மத்தியில், ஆடவர்களுக்கெதிரே இருந்த ஹுக்கா, கைமாறிக் கொண் டிருந்தது.

ரத்தன்லால் வேகமாக வராந்தாவில் கட்டி லில் படுத்துக் கொண்டிருந்த பெண்ணருகே போய் உட்கார்ந்தான். அவள் எழுந்திருக்க வில்லை. அவன் கபூரைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். அவள் எழுந்து புன்னகை யுடன், 'நமஸ்தே' என்று கைகளைக் கூப்பி னாள். அவன் என்ன சொல்லியிருப்பான் ? தாம் யாரென்று சொல்லப் போவதில்லை என்றானே ? தாம் என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குப் புரியவில்லை. கீழே விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தில் மற்றவர்களுடன் உட்கார வேண்டுமா அல்லது வராந்தாவுக்குச் சென்று அவளைப் பார்க்க வேண்டுமா என்று தெரியாமல் அவர் குழம்பி நின்றார். நல்ல வேளை, ரத்தன்லால் எழுந்து வந்தான்.

''உட்காருங்கள்'' என்றான் அவன்.

அவர் உட்கார்ந்தவாறே கேட்டார்: ''நான் யாரென்று அவளிடம் சொன்னாயா?''

''சே....சே... பொதுவாக ஒரு புது விருந் தாளியை அறிமுகப்படுத்தியாக வேண்டும். உங்கள் பெயர் குப்தா என்றேன்.''

எதிரே இருந்த பெண்களில் மிகவும் இளைய வளாக இருந்த ஒருத்தி எழுந்து வந்தாள். அவர் எதிரே மண்டியிட்டு உட்கார்ந் தாள். பாட ஆரம்பித்தாள். யுகம் யுகமாக அவருக்காகக் காத்துக் கொண்டிருந்ததுபோல் விரக தாப உணர்ச்சியுடன்கூடிய பாட்டு. வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்தவள் அங்கு வந்து ஹுக்காவை அவர் எதிரே நகர்த்தி வைத்தாள்.


''நான் ஹுக்கா பிடிப்பதில்லை'' என்றார் அவர்.




சென்னை ஸ்ரீ டி. எஸ். சோமநாத அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **டி. எஸ். ஸ்ரீனிவாசனுக்கும்** (Managing Director, Durga Small Tools Company, Calcutta), புது தில்லி ஸ்ரீ ஏ. ஏ. ராம அய்யர் அவர்களின் குமாரி சௌ. **சாந்தாவுக்கும்** சமீபத்தில் புது தில்லியில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

கோடையில்—
சாதாரணமான சருமம்...
வாடிவிடும் வியர்க்குருவினால்..





நைஸில்*
கிளாக்ஸோ தயாரிப்பு
*டிரேடு மார்க்

காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை



வேர்க்குரு என்றால்
வீசை என்ன விலை
என்று கேட்பீர்கள்!

அபரிமிதமான வியர்வையினால் சருமத் துவாரங்கள் அடைபடும் போது, யாரும் வியர்க்குருவினால் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பென்னின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.

SISTA'S-GN-410-TAM B

பாடியவள் குரல் மிகவும் இனிமையாக இருந்தது. கண்களைச் சிமிட்டிக் கொண்டே பாட்டுக்கு ஏற்றவாறு அபிநயம் வேறு பிடிக்கத் தொடங்கினாள்.

எதிர்த்தாற் போல் வலப் பக்கக் கோடியில் மோடாவில் ஓர் அறுபது வயதுக்காரன் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரே ஒரு நாற்பது வயதுக்காரி பாடிக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு ரூபாயாகக் கொடுத்து ஒவ்வொரு மாலை வாங்கி கிழவன், பாடிக் கொண்டிருந்தவள் கழுத்தில் போட்டான். அவன் போடப் போட அவள் அதைக் கழற்றித் திரும்ப அவன் கழுத்தில் போட்டாள். கல்யாணத்தில் மாலை மாற்றிக் கொள்வது போல் இருந்தது.

எதேச்சையாக அவர் இடப் பக்கம் திரும்பிய போது, ஆச்சரியம் காத்திருந்தது. பிச்சைக்காரர்கள்! குருடன், முடவன், சில்லறைச் சாமியார்கள்! இது என்ன குரூரமான ஹாஸ்யம் என்று அவர் நினைத்துக் கொண்டார். பிச்சைக்காரர்களுடைய தட்டுக்களில் நாலணாவும், எட்டணாவும் விழுந்தன. இந்த இடத்தில் பிச்சை எடுப்பதற்குக் கடுமையான நடைமுறை விதிகள் இருக்கலாம். டெண்டர் வாங்கி, யார் யார் அதிக சதவீதம், எடுக்கும் பிச்சையில் பங்கு தருகிறார்களோ, அவர்களுக்கு 'லைசென்ஸ்' வழங்கப்படுகிறதோ என்னவோ!

அப்புறம் 'கோலுகப்பா' விற்பவர்கள், 'பான்' விற்கும் பண்டிட்ஜிகள், வேர்க்கடலை வியாபாரிகள்.... இந்தச் சின்ன அறைக்குள்ளே, ஒரு போட்டி உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது!

ரத்தன்லால் அவரிடம் கிசுகிசுத்தான்.... ''ஒரு பத்து ரூபாய் கொடுங்கள், அவளுக்கு.''

அவர் பர்ஸைத் திறந்து அவனிடம் பணத்தைக் கொடுத்தார். அவன் மொகலாய பாணியில் சலாமிட்டுப் பின்பக்கமாக நடந்து சென்று மற்றவர்களுடன் உட்கார்ந்தான்.

''வேறொரு பெண் வேண்டுமா, அல்லது அவளையே கூப்பிட்டு இன்னொரு பாட்டுப் பாடச் சொல்லட்டுமா?'' என்று கேட்டான் ரத்தன்லால்.

''அவளையே கூப்பிடேன்.''

அவன் கூப்பிட்டான். அவள் வர மறுப்பது போல் தலையை ஆட்டினாள்.

அவன் எழுந்து சென்று அவளிடம் ஏதோ பேசினான். அவள் முகத்தைச் சற்றுக் கடுமையாக வைத்துக் கொண்டு பதில் சொன்னாள். ஒரு வேளை அதிக பணம் கொடுத்திருக்க வேண்டுமோ? அல்லது அவள் வயசுக்குத் தாம் பொருத்தமில்லை என்று அவள் வர மறுக்கிறாளோ என்று அவர் நினைத்தார்.

ரத்தன்லால் திரும்பி வந்தான். ''அவள் பாடிய போது நீங்கள் அவளைக் கவனிக்கவே இல்லை என்று அவள் கோபித்துக் கொள்கிறாள். பாராட்டாகத் தலையாட்டியிருக்க வேண்டாமா?''

தினந்தோறும் அவர்கள் இப்படிப் பாடிக் கொண்டிருந்தாலும் இன்னும் அவர்கள் இயந்திரப் பொம்மைகளாகிவிடவில்லை என்பது அவருக்குப் புரிந்தது.

அந்தப் பெண் ரத்தன்லால் எதிரே உட்கார்ந்து பாட ஆரம்பித்தாள். அவன் அவளுடைய பாட்டுக்காகத்தான் இதுவரை உயிர் தரித்திருந்தது போல், மிக உருக்கமாக அவளைப் பார்த்துக் கொண்டே, அவள் தலை மயிரையும் கன்னத்தையும் தடவியவாறு மெய்ம்மறந்த நிலையில் இருந்தான். இது தம்மால் முடியாத காரியம் என்று அவருக்குப் பட்டது.

பாட்டு முடிந்ததும் அவன் தன் வாயில் ஒரு பத்து ரூபாயை வைத்துக் கொண்டு, அதை அவளுடைய வாயால் எடுக்க வேண்டும் என்பதைச் சைகையால் உணர்த்தினான். அவள் அதை அவ்வாறு எடுக்க மறுத்துப் புன்னகையுடன் தலையசைத்துக் காட்டினாள். கையால் எடுக்கப் போனாள். அவன் தலையைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டான். அவள் அவனைக் கெஞ்சும்பாவனையுடன் நோக்கினாள்.

அவன் இன்னொரு பத்து ரூபாயை எடுத்து வாயில் வைத்துக் கொண்டான். அவள் அப்பொழுதும் தன் வாயினால் எடுக்க மறுத்தாள். எத்தனை நேரம் இவனுடன் மன்றாடுவது என்பது போல், வராந்தாவில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த பெண்மணியை அவள் பார்த்தாள். அவள் 'எடுக்காதே' என்பது போல் தலையை அசைத்தாள்.

இவர்களுக்கும் ஒரு நியதி இருக்கிறது என்பது கபூருக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

அந்தப் பெண் பணத்தைத் தான் விரும்பிய படி எடுக்கத் தயாராக இல்லை என்பதை அறிந்ததும், ரத்தன்லால் ஒரு பத்து ரூபாயை மட்டும் அவளுக்குக் கொடுத்தான்.

அவன் எழுந்து போனதும் கபூர் சொன்னார்: ''போகலாமா?''

''அதற்குள்ளாகவா?''

''இந்த இடத்தில் உட்கார்ந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.''

''அப்படியானால் ஒரு தனி வீட்டில் இந்தப் பெண்ணின் கலையுக்கு ஏற்பாடு செய்யலாமா?''

கபூர் பேசாமல் இருந்தார்.

''என்ன சொல்லுங்களேன்.''

''சரி..... அப்படியே செய்.''

அந்த வீட்டைவிட்டு வெளியே வந்ததும், கபூர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். இரவு மணி ஒன்று..... இப்பொழுது வீட்டுக்குத் தானே போயாக வேண்டும் என்ற எண்ணத்தினால் அவர் நெஞ்சு கனத்தது! (தொடரும்)



சப்பாத்தி பாக்கெட்!

புதுடில்லியில் மாடர்ன் பேக்கரீஸ் நிறுவனம் இப்பொழுது சப்பாத்தி தயாரித்துப் பாக்கெட் செய்து விற்கிறது.

ஹிந்துஸ்தான் டைம்ஸ்-பாலி

உடனடிப் பணி : BHEL வழங்கும் புதியசேவை

திட்டக்கமிஷன் மற்றும் சக்தி அமைச்சகத்தின் ஊக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள BHEL நிறுவனத்தின் புதிய 'பணிகள் மற்றும் சாதனங்கள்' பிரிவு இன்றைய தேவைக்கு ஈடு கொடுக்கிறது: அதாவது நாட்டிலுள்ள சக்தி தயாரிக்கும் திறன் அனைத்தும் பூரணமாகப் பயன் பட உதவுகிறது. BHEL துரிதத் தொடர்பினால் சக்தி தயாரிக்கும் ஜெனரேடர் கருவி பழுதுகளை இரவோ பகலோ எந்த நேரமும் கவனித்துச்சீராக முடிகிறது. வியப்பூட்டும் உதவி, விரிவான பல பணிகளை மேற்கொண்டுள்ள இந்தப்பிரிவு ஆற்றிவரும்பலரக உதவிகளின் ஒன்றே இது.



BHEL நிறுவனத்தின் புதிய பிரிவு—வெள்ளம் வருமுன்னே அணை கட்டுவது

சேதம் வருமுன் காப்பதே காப்பு—என்பது பல்லாயிரம் முறை எத்தனையோ பேர் சொன்னதுதான்.

இந்த நல்வாக்கு, சக்தி தயாரிக்கும் அனல்-மின்சார மற்றும் நீர்-மின்சார நிலையங்களுக்கும் பொருத்தமான வாசகம்.

ஏனென்றால் பாதுகாப்புப் பராமரிப்பு, கருவிகள் பழுதாகாமல் பார்த்துக் கொள்வது, கருவிகளை இடையறாது கவனித்துவருவது போன்ற எச்சரிக்கை நடவடிக்கையே பிரச்னை எழுமுன் தடுக்கக்கூடிய வழியாகும். பாரதநாட்டின் பரந்த வயல்களுக்கும் ஆலைகளுக்கும் இடையறாது விசைசக்தி பாய்ந்தபடி இருக்கச் செய்யும் வழியும் இதுவே.

இதற்காக எழுந்ததே BHEL நிறுவனத்தின் இந்தப் புதிய பிரிவு. இதற்கு அனுசரணையாக இருப்பவை பிராந்திய பராமரிப்புத் தொழிற்சாலைகள். அனுபவமிக்க எஞ்ஜினியர்களும் பராமரிப்பு வல்லுனர்களும் கொண்ட பிரிவு.

தேவையான அளவு சாதன உபரி உறுப்புகளை (இறக்குமதியானவையும் உள்நாட்டுத் தயாரிப்பும்) இருப்பில் கொண்ட பிரிவு; இங்கே பழுதுகளைச் சீராக்கும் சாதனங்களும் உள்ளன.

''இந்தப் பிரிவு வழங்கும் பணி வகைகள் என்ன? நலன்கள் யாவை?''

பணிகள் மற்றும் உபரிசாதனப் பிரிவு—

- பெரும் ஜெனரேடர் சாதனங்கள் இருக்கும் இடத்திலேயே தீவிர பராமரிப்புப் பணிகளை நடத்த உதவுகிறது; அது தவிர பிராந்திய பராமரிப்புத் தொழிற்சாலைகளிலும் கூட இவை நடைபெற உதவுகிறது. ஜெனரேடிங் நிலையங்கள், மின்சாரம் ஏற்றி அனுப்பும் சாதனங்கள், டிரைவுகள், ரெக்டிபையர், தொழில்களுக்கான கண்ட்ரோல் கீயர் ஆகியவை அனுபவமிக்க எஞ்ஜினியர்கள் மூலம் கவனிக்கப்படுகிறது.
- அதிநுட்பமான விசேஷப் பணிகளை ஏற்கிறது (காண்டிராக்ட் அடிப்படையில்). டர்பைன், ஜெனரேட்டர், பாய்லர் போன்றவற்றை, குறிப்பிட்ட கால இடைவெளிகளில், அவ்வப்போது சரிபார்க்க முடிகிறது.
- அனல்-மின் மற்றும் நீர்-மின் நிலையங்களில் சேதாரத் தடுப்புப் பராமரிப்பு விஷயமாக ஆலோசனைகள் வழங்குகிறது.
- பராமரிப்புப் பணி நடைமுறைகள் நன்கு இயங்க உதவுகிறது.
- சக்தி நிலையங்களை நவீனப்படுத்தவும், திறன் பெருக்கவும், கவச உறைகளைப் புதுப்பிக்கவும் ஆலோசனைப் பணி வழங்குகிறது.
- மின்தடைக் காரணங்களை ஆராய்ந்து அறியவும், செப்பனிடவும், சக்தி உற்பத்தி முறைகள் பற்றி பூரண ஆராய்ச்சி நடத்துகிறது. இதனால் இன்றைய மின்-நிலையங்களிலிருந்து முழுப்பயனையும் பெற வாய்ப்பு உண்டு.

''இதனால் இறக்குமதியான உபரி சாதனங்களைப் பெற முடியுமா? ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்க முடியுமா?''

முடியும்.

ஸ்டேன்டர்டு சாதனங்களுக்குத் தேவைப்படும் அவசியமான உபரிப் பகுதிகளை BHEL இருப்பில் வைத்திருக்கும். பழுதடைந்த மின்சாரத் தயாரிப்புக் கருவிகள் தாமதமின்றி மீண்டும் இயங்க இந்த ஏற்பாடு வழிசெய்யும். விசேஷக் கருவிகளானால், அவற்றுக்குத் தேவைப்படும் உபரிப் பகுதிகளை புதிதாகத் தயாரிக்கவும் உதவும். தேவைப்படும் மின்நிலையத்தில் அவை போய்ச் சேரவும் உதவும்.

சில பகுதிகள் விரைவில் தேய்ந்து விடும். அவற்றை இனம் கண்டு முன்னரே தருவித்து விடுவதால் 'ஓவர் ஹால்' சமயம் கருவி இயங்காது வீணாகும் நேரம் மிதமாகக் குறைக்கப் படுகிறது. இத்தகைய சேதாரத் தடுப்புப் பராமரிப்பு புதிய பிரிவின் ஒரு முக்கிய பணி.

மேலும், இறக்குமதியான பெருங்கருவிகளுக்கான உபரிக் கருவிகளை நம் நாட்டிலேயே சிறிதுசிறிதாகத் தயாரித்துக் கொள்ளும் சீரிய பணியிலும் இந்தப் பிரிவு உதவுகிறது.

மேலும் ஒன்று. மின்விசை நிலையங்களை நிர்வகிக்கவும் இயக்கவும் எஞ்ஜினியர்களுக்கு BHEL பயிற்சி அளிக்கும்.

மின்விசை தயாரிப்போர் எவருக்கும் எந்த உதவி தேவையானாலும்—அதை வழங்கி—மின்பற்றாக்குறை நேராமல் தடுக்கும் பணியில் முனைந்துள்ளது.

எனவே, BHEL நிறுவனத்தின் பணி-மற்றும் உபரிசாதனப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்களுடன் தொடர்பு கொள்ள ஒரு டெலிபோன் பேச்சு போதுமே.

மக்களுக்கு சக்தி

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம்:
18-20 கஸ்தூர்பா காந்தி மார்க்
புது டில்லி 110 001

இந்தப்பிரிவு எங்கே இருக்கிறது?

பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்,
சர்வீஸ் அண்டு ஸ்பேர்ஸ் யூனிட்

முதல் மாடி, 'சுந்தரலோக்' 36 ஜன்பாத், புது டில்லி 110 001 டெலிபோன்: 48480

"சங்கரீ.....!"

"ஊம்....!"

"என்ன யோசனை...?"

அவள் பார்வை அவர் மீது படிந்திருந்த போதும் அவள் சிந்தனை எங்கோ பறந்துவிட்டதை அவள் முகம் அவருக்கு உணர்த்திவிட்டது.

" நான் இல்லாமல் கல்யாணிக்கு ஒன்றுமே செய்யத் தெரியாது !"


கல்யாணி அவர்களது மூத்த மருமகள்.

அவர் பெரிதாகச் சிரித்தார்.

"இப்போகூட உனக்கு என்னைப் பத்தி நினைப்பு இல்லேன்னு சொல்லு!"

" குழந்தைகளைப் பத்தி நினைச்சால் தப்பா என்ன ?"

பேசிக் கொண்டே, இப்போது அவள் அவருக்கு வெகு அருகில் வந்து நின்று கொண்டிருந்தாள்.



அறையில் ஒரு

"உட்காரு —"

"பரவாயில்லே —"

"இங்கே யாரும் இல்லே. இத்தனை பெரிய அறையில் நானும் நீயும்தான். உட்காரு."

கட்டிலில் அவள் உட்கார்ந்து கொண்டாள்.

அவர் அவள் கண்களை இப்போதும் ரசித்தார். "குடும்பக் கவலையை எல்லாம் மறந்து, ஜாலியா இருக்கத்தான் நாம இங்கே வந்திருக்கோம்.......!"

" அப்படியா ? தெரியாதே..." என்றாள் அவள்.

அவள் பேசும் பாணியில் இளமை உணர்வுகள் ஏறியிருப்பதாக அவருக்குத் தோன்றியது.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு...... இல்லை... வருடங்களுக்குப் பிறகு... அவளைப் பார்ப்பதைப் போல் இருந்தது அவருக்கு.

" சத்யா புத்திசாலிதான்!" என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டார்.

"ஏனும்......?"

" இந்த 'ஐடியா' அவனுக்குத்தானே தோன்றியிருக்கிறது !"

"என்ன ஐடியாவோ? நம்மை ரயிலேற்றி அனுப்பிவிட்டுச் சிரித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் எல்லோரும் ! அவர்கள்தான் விளையாடுகிறார்கள் என்றாலும் நீங்களும் சின்னக் குழந்தையாட்டம் பாடாய்ப் படுத்தி......"

உண்மையாகவே இந்தக் கலாட்டாவை அவளால் ரசிக்கத்தான் முடியவில்லை.

அவர் என்னவோ, அறுபதாம் கல்யாண வைபவத்தின் போதுகூட, புது மாப்பிள்ளை போல அத்தனை கேலியையும் கிண்டலையும் ரசித்துக் கொண்டுதான் இருந்தார். அவரே கூட சில சமயங்களில் 'ஜோக்' அடித்துக் கொண்டிருந்தார் !

சங்கரிக்கு அப்போதும் வெட்கம் பிடுங்கித் தின்றது. இப்போதும்....?

எழுந்து ஜன்னலருகில் போய் நின்று கொண்டாள் அவள். ஜன்னலுக்கு வெளியே இருளும் ஒளியும் விளையாடிக் கொண்டிருந்தன.

"என்ன சங்கரி, எழுந்து போய் விட்டாய்?"

அவர் கேட்டது அவள் காதில் விழவில்லை.

'கேட்பதற்கு ஆளில்லை என்று, அங்கே எல்லாம், வீட்டைத் திறந்து போட்டு விட்டு ஊர் சுற்றப் போய்விடப் போகிறது! கல்யாணி ஒருத்திக்குத்தான் கொஞ்சம் பொறுப்பு உண்டு. மற்ற நாட்டுப் பெண்கள் எல்லாம் வெறும் அலங்காரப் பொம்மைகள்தான் ! பிள்ளைகளைப் பற்றியோ கேட்கவே வேண்டாம் ! வேலைக்கார தாமு கவனித்துக் கொண்டால்தான் உண்டு. இல்லையென்றால் வீட்டை கொள்ளை போனால்கூட யாரும் கவனிக்கப் போவதில்லை !'

ரயிலடிக்குத் தாமுவும் வந்திருந்தான். முகமெல்லாம் சிரிப்பாக அவன் அவர்களை வழியனுப்பி வைத்த காட்சி சங்கரியின் நினைவுக்கு வந்தது.

ரயில் கிளம்புகிற நேரத்தில் தாமுவிடம், " வீட்டைக் கவனமாகப் பார்த்துக்கோ!" என்று மறக்காமல் சொல்லியிருந்தாள் அவள்.

"என்னம்மா இது? எப்பவும் உங்களுக்கு வீட்டுக் கவலைதானா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் தாமு.

இப்படி யெல்லாம்கூடப் பேசமாட்டான் அவன். அப்போது சுற்றிலும் பரவியிருந்த உல்லாசச் சூழ்நிலை அவனது இயல்பான இறுக்கத்தைக்கூடத் தளர்த்தி விட்டிருந்தது.

அவள் இல்லாத குறை தெரியாமல் தாமு தான் வீட்டை நிர்வகிக்கப் போகிறான் அங்கே. ஒரு வேலைக்காரனுக்கு இருக்கும் பொறுப்புக்கூட இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு இல்லையே என்று நினைத்துக் கொண்டாள் அவள்.



பீஷ்மன்

தான் கூப்பிட்டதைக் காதிலே வாங்கிக் கொள்ளாமல், அவள் ஏதோ யோசனையில் ஆழ்ந்துவிட்டதைக் கண்டதும் சர்மாவுக்குச் சற்று எரிச்சலாகத்தான் இருந்தது.

அவளைச் சொல்லிக் குற்றமில்லை. ஆரம்பத்திலிருந்தே பொறுப்புக்களை அவள் தலையில் சுமத்திவிட்டு அவர் ஒதுங்கியிருக்கப் பழகிக் கொண்டுவிட்டார். ஆகவே, குடும்ப நிர்வாகக் கவலைகளில் அழுந்தி அழுந்தி அவை தவிர வேறு எதுவுமே அவளுக்கு மறந்து விட்டது.

என்றுமே உல்லாசியான அவருக்கு வயதின் சுமை கணக்கவில்லை. அவளுக்கு அப்படியில்லை. வயதின் கௌரவத்தைச் சுமக்கின்ற உணர்வோடுதான் அவள் அந்தக் குடும்பத்தை நிர்வகித்து வந்திருக்கிறாள். அந்த உணர்வில் இருந்து அவளால் தப்ப முடியவில்லை.

'நாற்பது வயதானாலேயே பெண்கள் கிழமாகி விடுகிறார்கள்' என்று அவருக்குத் தோன்றியது. எப்போதோ படித்த 'பேர்ல் பக்'கின் நாவல் ஒன்று இப்போது அவருக்கு நினைவுக்கு வந்தது. அதில் வருகின்ற கதாநாயகி தனது நாற்பதாவது பிறந்த தினத்தின் போது, தனக்கு வயதாகிவிட்டதாக உணர்கிற அதே நேரத்தில், தன்னைவிட வயதான தன் கணவன் இன்னும் இளமையுடன் இருப்பதாக உணர்ந்து அவனுக்கு ஒரு விசித்திரமான பரிசளிக்க நினைக்கிறாள்! தன் கணவனுக்கு ஏற்றாற்போல் நடக்கக்கூடிய இளம் பெண் தான் அந்தப் பரிசு!

இந்தக் கதையை அவளுக்கு இப்போது சொல்ல வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

"சங்கரி, ஒரு நிமிஷம் இப்படி வாயேன்!"

அவள் வந்தாள்.

கண்தான் அவரைப் பார்த்ததே தவிர, பார்வையில் வேறு எங்கோ நிலைப்பு இருந்தது.

தேன் நிலவு...

"ஒரு கதை நினைவுக்கு வந்தது; சொல்லறேன்; கேட்கிறாயா?"

முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவள் தலையை ஆட்டினாள்.

அவர் அந்தக் கதையைக் கூறிவிட்டு, அவளிடம் கேட்டார்.

"அந்தக் கதாநாயகிக்குத் தன் கணவனிடம் உள்ள ஆசையில் பத்தில் ஒரு பங்குகூட உனக்கு என்னிடம் இல்லையே!"

"அப்படிச் சொல்லாதேங்கோ....! — நான் என்ன தப்புப் பண்ணியிருந்தாலும் மன்னிச்சுடுங்கோ......!"

திடீரென அவள் கரைந்து போய்விட்ட அந்த நிலையும் அவருக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது.

அடுத்த இதழில்...

வட நாட்டு வீரர்...

ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்களின் தமிழக விஜயத்தையொட்டி சிறப்புக் கட்டுரை — படங்கள்.





...தென்னாட்டுத் தீரர்!

காமராஜர் அவர்களுடன் செய்த சுற்றுப் பயணத்தில் நமது நிருபருக்கு ஏற்பட்ட அனுபவங்கள்.

நகர்வலம்:

மங்களூர்

நமது நிருபர் நேரில் சென்று கண்டதும் கேட்டதும்.



தன் காலடியில் குனிந்து நமஸ்கரித்துக் கொள்ப் புருக்கும் அவளை மிகுந்த ஆதுரத்துடன் அவர் தொட்டுத் தூக்கினார். அவள் கண்கள் கலங்கியிருந்தன.

அவளுடைய பேதைமை அவர் இதயத்தைத் தொட்டது. அநாவசியமாக அவளுடைய மென்மையான உள்ளத்தைப் புண்படுத்தி விட்ட குற்ற உணர்வு அவருக்குச் சங்கடமாக இருந்தது. ''சே! என்ன இது சங்கரி...'' என்று சொல்லிக் கொண்டே பரிவோடு அவள் தலையைத் தடவிவிட்டார் அவர்.

கதவை யாரோ தட்டினார்கள்.

வெளி வராந்தாவில் அவர் இதற்கு முன் பார்த்திராத ஓர் இளைஞன் நின்றிருந்தான்.

பரபரப்போடு ''மாமி இல்லே?'' என்று வெகு சுவாதீனமாக அவரைப் பார்த்துக் கேட்டான் அவன்.

''உள்ளே வாருங்களேன்!''

அவன் தயங்கினான்.

''மாமியைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன்!''

முள்மேல் நிற்பதைப் போல் அவன் பரபரத்துக் கொண்டிருந்தான்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''என்ன வேணுமாம்...?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்து விட்டாள் அவள்.

''நாங்க பக்கத்து ரூமிலே தங்கியிருக்கோம். திடீரென அவளுக்கு உடம்பு ஒரு மாதிரி இருக்கு. அவள்தான் 'அடுத்த ரூமுக்கு ஒரு வயசான மாமி வந்திருக்கா. அவங்களை அழைச்சுண்டு வாங்கோ'ன்னு சொன்னாள்.''

சங்கரி அவனை மேலே பேசவிடவில்லை.

''இதோ வரேனே...!'' என்று கிளம்பி விட்டாள்.

புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு அடுத்த அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்த அவளைப் பின்தொடர்ந்து அவரும் அவனும் சென்றார்கள்.

அங்கே கட்டிலில் உட்கார்ந்திருந்த பெண், அவர்களைக் கண்டதும் சிரமத்துடன் எழுந்து நின்றாள். சொல்ல முடியாத வேதனையில் அவள் தவிக்கிறாள் என்பதை அவள் முகத்தில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளும் ஆயாசத்தில் துவளும் அவள் உடலும் கூறிக் கொண்டிருந்தன. நல்ல அழகிதான். இத்தனை சோர்விலும் வேதனையிலும் கூட அவள் முகப் பொலிவு குன்றி விடவில்லை.

அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளது வேதனையின் தன்மை சங்கரிக்குப் புரிந்து விட்டது.

''இந்த நேரத்திலே இப்படி இங்கே தனியா வந்திருக்கேளே...!'' என்று பொதுப் படையாகச் சொல்லிவிட்டு அந்தப் பெண்ணிடம் மெதுவாக ஏதோ விசாரித்தாள் சங்கரி.

சர்மாவுக்கு அந்தச் சூழ்நிலை சங்கடமாக இருந்தது. 'இதேதடா வேதனை' என்று எண்ணிக் கொண்டே வெளி வராந்தாவுக்கு வந்து விட்டார் அவர். அவரைத் தொடர்ந்து அந்த இளைஞனும் வெளியே வந்தான்.

''ஸாரி. உங்களை அநாவசியமாத் தொந்தரவு பண்ணும்படி ஆயிடுத்து! எதிர்பாராமல் அவளுக்கு இப்படி உடம்பு சரியில்லாமல் போயிடுத்து...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்ததை அவர் சரியாகக் கவனிக்கக் கூட இல்லை.

மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, உதட்டைப் பிதுக்கிக் கேலியாக அவரைப் பார்த்துச் சத்யா சிரிப்பது போலிருந்தது அவருக்கு.

அவருடைய அறுபதாவது பிறந்த தின விழாவில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவிலிருந்து வந்திருந்தான் அவன். அவனிடம் பேசிக் கொண்டிருந்தபோது விளையாட்டாக அவர் சொன்னது விபரீதமாகப் போய்விட்டது.

''என்னவோ சத்யா...! இவளோடு குடித்தனம் பண்ண ஆரம்பித்து முப்பத்தைந்து வருஷமாகிறது. உல்லாசமா ஒரு நாள் என்னோடு எங்காவது வந்திருப்பாளா ....? இந்தக் காலத்துப் பசங்களைப் பார்க்கிறபோது ஒரொரு சமயம் எனக்கு இப்படியெல்லாம் தோணறது!''

சத்யா பெரிதாகச் சிரித்தான்.

'' நீ சும்மா இரு அண்ணா. கல்யாணம் முடிந்த கையோடு ஒரு ஹனிமூன் டிரிப்புக்கு ஏற்பாடு பண்ணிவிட்டால் போச்சு!'' என்று சத்யா தன் சகோதரனிடம் கூறியபோது ''ரொம்ப அழகுதான் போ!'' என்றுதான் அவர் சொன்னார்.



**பெரியவளாகி உங்களை விட்டுப் பிரிந்த
நெடுங்காலத்திற்குப் பின்பும் புகைப்படம் அவளை மறவாது.**

ஒவ்வொரு 120 ரோல் பிலிம் சுருளுக்கும் உங்களுக்கு 12பெரிய (6×6) புகைப்படங்கள் கிடைக்கும். தனி விலைக்கு ஒரு விசேஷ தொழுறை போர்ட்ரெய்ட் லென்ஸ் மற்றும் ஃபிளாஷ்கள் கிடைக்கின். நல்ல துல்லியமான பிரிண்டுகளுக்கும் என்லார்ஜ்மெண்டுகளுக்கும் ஆக்ஃபா-கேவர்ட் போட்டோ பேப்பர்களே வேண்டுமென வற்புறுத்துங்கள். அங்கீகாரம் பெற்ற எல்லா ஆக்ஃபா-கேவர்ட் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்ஃபா-கேவர்ட் இந்தியா லிமிடெட்.,

Agfa

SIMOES/AG/2/75 TAM

புதிய அனுபவம், பேரானந்தம்





ADROIT/925

செஞ்சுரி
பருத்தித் துணிகள்

செஞ்சுரி -100% பருத்தித் துணிகள்

தி செஞ்சுரி ஸ்பின். அண்டு மானுபு.
கம். லிமிடெட், பம்பாய்-400 025.

ஆனால், சத்யாவின் பேச்சு வெறும் இண்டலாக நிற்கவில்லை. சஷ்டியப்த பூர்த்தி முடிந்த கையோடு, பெங்களூரில் ஒரு லாட்ஜ் ரிசர்வ் செய்து, அவரையும் சங்கரியையும் பிடிவாதமாக ரயிலேற்றி அனுப்பிவிட்டான்.

சங்கரியின் பிடிவாதத்தால் சாமுண்டீசுவரி தரிசனம்தான் முதலில்! மைசூருக்குப் போய்ச் சாமுண்டீசுவரியை இந்தச் சாக்கில் தரிசனம் செய்ய முடிந்ததில் அவளுக்குத் திருப்தியாக இருந்தது.

'' ஒரு டாக்ஸி கொண்டு வாங்கோ சீக்கிரம். அவளை இப்பவே ஆஸ்பத்திரிக்கோ நர்ஸிங்ஹோமுக்கோ கூட்டிண்டு போயாகணும்...... !'' — சங்கரியின் குரல் கேட்டு அவர் சிந்தனை கலைந்தார்.

என்ன செய்வதென்று புரியாத பரபரப்புடன் வெளி வராந்தாவில் குறுக்கும் நெடுக்கும் நடை பழகிய அந்த இளைஞன், ''இதோ வரேன்....'' என்று சொல்லிவிட்டு ஓடினான்.

''என்ன சங்கரி இது.....?''

''என்னவோ சிறிசுகள்! மாசம் சரியாகத் தெரியலே அவளுக்கு. அடுத்த மாசம்தான் பிறந்தகத்துக்குக் கொண்டு விடறதாக இருந்தாளும் அவன்! ஜாலியாக் கிளம்பியிருக்கா....! இப்படி ஆகும்னு நினைக்கலே. இந்த நேரத்துக்கு உதவாமல் இருந்தால் எப்படி.......?''

எந்தவித மனச் சங்கடமும் இல்லாமல் ஏதோ சொந்த வீட்டிலே ஏற்படுகிற நிகழ்ச்சியாக இதை ஏற்றுக் கொண்டு இவளால் எப்படி இப்படி இருக்க முடிகிறது — என்று எண்ணிக் கொண்டு பிரமித்து நிற்கும்போதே, சொல்வதைச் சொல்லிவிட்டு அவள் மறுபடியும் உள்ளே போய்விட்டாள்.

''டாக்ஸி ரெடி....!''

அவன் குரலுக்காகவே காத்திருந்ததைப் போல் சங்கரி தயாராக, பிரம்புக் கூடையில் தேவையான சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு, ''மெள்ள வாடியம்மா, ராஜி !'' என்று கூறிவிட்டு வெளியே வந்தாள்.

''கதவைப் பூட்டிவிட்டு நீங்களும் ரகுவுக்குத் துணையாகக்கூட வாங்கோ'' என்று அவருக்கும் அழைப்பு விடுத்து விட்டாள்.

கையிலிருந்த பிரம்புக் கூடையை அந்த இளைஞனிடம் கொடுத்துவிட்டுக் கைத் தாங்கலாக அந்தப் பெண்ணை அழைத்து வந்து வெளிச்சுவரோரம் நின்று கொண்டாள் அவள்.

டாக்ஸி ஒரு நர்ஸிங்ஹோம் வாசலில் போய் நின்றது.

கை மேலே யாரோ ஐஸ் கட்டியை வைத்த மாதிரி இருந்தது. குளிரில் உடம்பெல்லாம் வெடவெட வென்று நடுங்க அவர் கண் விழித்துப் பார்த்தார்.

வாயெல்லாம் பல்லாகச் சங்கரி அவரை எழுப்பிக் கொண்டிருந்தாள்.

நர்ஸிங் ஹோமில் — விஸிட்டர்கள் தங்கும் வெளி ஹாலில் சோபாவில் உட்கார்ந்திருந்தவர் அப்படியே தூங்கிப் போயிருக்கிறார் !

''பெங்களூருக்கு வந்த நேரம் — உங்களுக்கு இங்கே ஒரு பேரன் பிறந்திருக்கிறான்!''

சொந்தப் பேரன் பிறந்தபோதுகூட அவள் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பாளோ, என்னவோ ?

கடைசியாக....



பிரான்ஸ் நூல்நிலையம் ஒன்றில் 'கடைசிப் பக்கங்கள்' என்று ஒரு பகுதி உண்டு. மர்ம நாவல்களில் சிலர் விளையாட்டாக, கடைசிப் பக்கங்களைக் கிழித்து விடுவார்கள். அடுத்துப் படிப்பவர்கள் சஸ்பென்ஸ் தெரியாமல் தவிப்பார்கள். அவர் உடனே 'கடைசிப் பக்கங்கள்' பகுதிக்கு வரலாம். காணாமல் போன கடைசிப் பக்கங்களின் வேறு பிரதிகள் அங்கு இருக்கும். படித்துவிட்டுச் செல்லலாம். இதற்காகவே மர்ம நாவல் ஒவ்வொன்றிலும் கடைசிப் பத்துப் பக்கங்களைத் தனியாக அச்சிட்டுத் தரச் சொல்லிப் புத்தகம் வெளியிடுவோரைக் கேட்டிருக்கிறது இந்த நூல் நிலையம்.

பிரான்ஸ் சாவர் - ராகவன்

'' என் அம்மா திருநெல்வேலியில் இருக்கிறாள். அவளுடைய அம்மா மதுராந்தகத்தில் இருக்கிறாள். எங்கள் இரண்டு பேருக்கும் அம்மாவாக இந்த வேளையிலே மாமி வந்து உதவினாங்க! நான்கூடக் கொஞ்சம் தூங்கிப் போயிட்டேன். ராத்திரி முழுக்க மாமிதான் கண்ணை மூடலை!'' — என்று தழுதழுக்கும் குரலில் ரகு சொல்லிக் கொண்டிருந்தான்.

வெளியே பொழுது விடிந்து கொண்டிருந்தது. காலைக் காற்று பனியை வாரிக் கொட்டியது. குளிரில் உடம்பே சில்லிட்டு விட்டாற் போல இருந்தது அவருக்கு.

திடீரென நேற்றிரவு முதல் ஒரு தள்ளாமை வந்து ஆட்கொண்டுவிட்டதாக அவருக்குத் தோன்றியது. மனத்தை எப்போதுமே இலேசாக வைத்துக் கொண்டு அதன் மீது உல்லாசமாக மிதந்து கொண்டிருந்தவர் அவர். சொந்தமாகப் பேரனோ பேத்தியோ பிறந்தபோதுகூட, இப்படி நர்ஸிங்ஹோம் வாசலில் போய் அவர் காத்துக் கிடந்ததில்லை. குடும்பத்தின் காரணமாக எந்தப் பொறுப்பையுமே சுமக்காது பழகிவிட்ட அவருக்கு, நேற்றிரவு முதல் சங்கரி மேற்கொண்டுள்ள பொறுப்பில் தமக்கும் ஒரு பங்கு விழுந்துவிட்டாற்போன்ற உணர்வே ஒரு சுமையாகத் தோன்றியது.

இந்தச் சுமையே இப்படிக் கனத்தால்...?

குடும்பச் சுமைகளை முழுக்க முழுக்கத் தாங்கி அழுந்திவிட்ட சங்கரிக்கு.....

''என்ன யோசனை அப்படி...?'' சங்கரி அவரருகே வந்து பரிவுடன் கேட்டாள்.

''ஓ.... கன்கிராட்ஸ். கன்கிராட்ஸ் !'' என்று கூறி ரகுவின் கையைக் குலுக்கினார்.

அவர் கை குளிரில் நடுங்குவதைச் சங்கரி கவனித்தாள். ''குளிர் தாங்க முடியலே இல்லே ?'' என்று கேட்டாள் சிவசங்கரி.

''எஸ்.... எஸ்.... நான் சின்னப் பையனா என்ன? எனக்கும் வயசாகலியா?'' என்று கூறிக் கொண்டே அங்கவஸ்திரத்தை இன்னும் நன்றாகப் போர்த்திக் கொண்டார் அவர்.

சங்கரி அப்போது அவரைப் பார்த்த பார்வையையும் அவரால் தாங்கிக் கொள்ளத் தான் முடியவில்லை.

பாலுஸேரி பேனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்". 3, சிங்கராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தந்தி: 'EVERMANS', போன்: 85834, தபால்பெட்டி: 414

நீண்டகாலச் சீட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகியகாலச் சீட்டுகள்

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குரூப்பை விவரித்து எழுதவும்

கிளைகள் : -புதுடில்லி-பம்பாய்-பெங்களூர் கல்கத்தா-கோயம்புத்தூர்

ஸ்தாபிதம்: 1947

29 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



(இடமிருந்து வலமாக) 1. தேசிய சாம்பியன் குமாரி கீதா சுந்தரம். 2. மிஸ் ஏ. லலிதா. 3. மிஸ் டி. கே. வரலக்ஷ்மி. 4. குமாரி சந்தியா.

"எனக்கு 1973ம் ஆண்டிலேயே லக்னோவில் தேசிய வெற்றி கிட்டியிருக்கும். துப்பாக்கி சுடும் போட்டிகள் நடைபெறும் இடத்தைச் சென்றடையக் காலதாமதம் ஆகிவிட்டது! போட்டிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன! நீதிபதிகள் என் ஆர்வத்தைக் கண்டு சுடுவதற்கு அனுமதி அளித்தனர்! வெற்றியாளரைவிட நான் சிறப்புடன் பரிமளிக்கவே, எனக்கு உத்தரப் பிரதேச சர்க்கார் ஆறுதல் பரிசு தந்தனர்!" என்றாள் குமாரி கீதாசுந்தரம். இன்றைய தேசிய சாம்பியன் குமாரி கீதாசுந்தரம் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மாணவி. தாவர இயல் பட்டதாரி. துப்பாக்கி சுடும் கரங்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கியில் ரிஸப்ஷனிஸ்டாக அமர்ந்து வரவேற்கும் கரங்களாகவும் பணி புரிகின்றன.

ஃ ஃ ஃ

"நாங்க இரண்டு பேருமே ஹோம் கார்டுகள்."

"துப்பாக்கி சுடும் போட்டிகளில் நாங்கள் இரண்டு பேருமே ஊர்க் காவல் படையினருக்குப் பெருமை சேர்த்திருக்கோம்!" என்று மாறி மாறிப் பேசுகிறார்கள், கமாண்டர் டி. கே. வரலட்சுமியும், ஏ. லலிதாவும்.

சென்ட்ரல் லெதர் இன்ஸ்டிட்யூட்டிலே டி. கே. வரலக்ஷ்மி ஸ்டெனோ. ஏ. லலிதா தலைமைச் செயலகத்திலே உதவியாளர். 'டீம்ஸ்பிரிட்'டோடு இரட்டையராகப் பல கோப்பைகளையும், விருதுகளையும் 1972ம் வருஷத்திலிருந்து பெற்று வருகிறார்கள்.

"கிரிக்கெட்டில் பட்டோடி நவாப் ஒரு கண்ணோடு ஆடுகிறார் என்று பலர் பெருமைப்பட்டுக் கொள்கிறார்களே, எங்க லலிதா வலது கண் கோளாற்றோடு துப்பாக்கி சுடும் போட்டிகளில் பல பரிசுகளைக் குவிக்கிறாள்! வலது கண் கோளாறினால், இடது கை துப்பாக்கிப் பயிற்சி பெற்று லலிதா பல சாதனைகளைச் செய்திருக்கிறாள்!" என்று வரலட்சுமி லலிதாவை மனம் விட்டுப் பாராட்டுகிறார்.

"இருநூறு பெண்மணிகள் ஊர்க்காவல் படையில் இருக்கிறோம். ஆயினும் ஒருசிலரே இந்தத் துப்பாக்கி சுடும் கலையில் ஈடுபட்டிருக்கிறோம். போலீஸ் உதவிக் கமிஷனர் வெற்றிவேல் எங்கள் பயிற்சிக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டியிருக்கிறார்!" என்கிறார் லலிதா.

இதற்குள் துருதுருவென்று அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் ஒரு சிறுமியைப் பார்த்து வியக்கிறோம்.

"இவள்தான் குமாரி சந்தியா. ஜூனியர் சாம்பியன் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர். ஹோலி ஏஞ்ஜல்ஸ் பள்ளியில் பதினோராவது வகுப்புப் படிக்கிறாள். சண்டிகர் தேசியப் போட்டியில் இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம், மூன்று விருதுப் பத்திரங்கள் பெற்றிருக்கிறாள்!" என்று அறிமுகப் படுத்துகிறார் ரைபிள் சங்கக் காரியதரிசி ஜலாலுதீன்.

1952ம் வருஷம் நாட்டின் தற்காப்புக்காக எழுந்தது சென்னை ரைபிள் கழகம். துப்பாக்கி சுடும் கலையில் பல வீராங்கனைகளைத் தோற்றுவித்து, தேசிய விருது பெறும் நிலைக்கு நாள்வரை உயர்ந்தியுள்ளது.

— குண்டுமணி

உள்ளத்தைக் கொடு, செல்வத்தை அல்ல!

ஓர் ஏழை நோய்வாய்ப்பட்டான். குணமடைந்தால் குருவாயூர் வந்து தன்னை எடை போடுவதாக வேண்டிக்கொண்டான். "அப்பனே நான் ஏழை; பிரமாதமாக எதையும் உனக்குச் செய்ய இயலாதவன்; தண்ணீரால் என்னை எடை போடுகிறேன்" என்று பிரார்த்தித்துக்கொண்டான்.

உடம்பு தேறியதுமட்டுமல்ல, அவன் தரித்திரமும் விடிந்தது. வியாபாரத்தில் விறுவிறுவென்று வளர்ச்சி பெற்றுச் செல்வந்தனானான். ஒரு நாள் பிரார்த்தனை நினைவு வந்தது. குருவாயூர் போனான். பழங்களாலும், வெல்லம், சர்க்கரை முதலியவற்றாலும் தன்னை எடைபோட்டுப் பார்த்தான். பொன்னைக்கூட வைத்தான். தராசு சமப்படவே இல்லை! இந்த அதிசயத்தைக் கேட்டுக் குருக்கள் வந்தார். "உங்கள் வேண்டுதல் என்ன?" என்றார்.

"தண்ணீரால் எடை போடுவதாகப் பிரார்த்தித்துக் கொண்டேன். ஆனால் அன்று நான் ஏழை. அவன் அருளால் இத்தனை சொத்து பெற்ற பிறகும் வெறும் தண்ணீரை அவனுக்கு அர்ப்பணிப்பது அபசாரமல்லவா?" என்றான்.

"இடையிலே கிடையாது. நீ என்ன வாக்களித்தாயோ அதை நிறைவேற்று. ஆண்டவனுக்கு முக்கியம் உன் செல்வமல்ல, உன் மனம்தான்" என்றார் பெரியவர்.

அவன் மனம் நெகிழ்ந்து பிரார்த்தித்துத் தன்னை நிறுக்கச் செய்தான். துலாபாரம் நேராயிற்று.

எஸ். ஒ. கே. கூறிய
ஒரு கர்ண பரம்பரைக் கதை

இளமைக்கு....

இன்றைய இளம் பருவத்தினருக்குச் சில வற்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நமது மூதாதையர்கள் முட்டாள்களல்ல.

காலையில் குளித்து, விபூதி பூசி, கடவுளைத் தொழுது, காலைப் பலகாரம் உண்டு, கடமையைத் தொடங்கி, மாலையில் சிறிது தூரம் நடந்து, விளக்கு வைத்ததும் கொஞ்ச நேரம் படித்து, ஒன்பது மணிக்குமுன் உணவருந்தி அமைதியான தூக்கத்தில் ஆழும் முறையான வாழ்க்கைதான் ஒருவனை நோயற்றவனாகவும், கவலையற்றவனாகவும் வைத்திருக்கும்.

காலம் தவறிய, முறை தவறிய எதுவும் உடலைக் கெடுத்து உள்ளத்தின் நிம்மதியை அழித்துவிடும்.

கடந்து போன காலங்களை எண்ணி நான் நொந்து வெந்து கொண்டிருக்கிறேன்.

சில பழக்கங்களைப் பழகாமலிருந்திருந்தால், சில சேர்க்கைகளைச் சேராமல் இருந்திருந்தால் இன்று நான் உலகத்தில் ஒருவனாக நிமிர்ந்திருப்பேன்.

செய்த தவறுகள் எதிரொலிக்கின்றன.

''அவசரத்தில் கல்யாணம்; சாவகாசத்தில் சங்கடம்'' என்றாகி விட்டது.

புகை பிடிப்பது கொடிய பழக்கம் ; பழகி விட்டேன்; நிறுத்த முடியவில்லை.

கடைசிப்பக்கம்



கண்ணதாசன்

மதுப் பழக்கம் உடலைக் கெடுக்கிறது; மறக்க முடியவில்லை.

கல்யாணமென்று ஒன்று முறையாக நடந்தும், சுகமாக இருந்தும் இளமையின் வெறித்தனத்தால் — இரண்டாவது ஏற்பாட்டைச் செய்து கொண்டேன்.

பல்லாயிரக்கணக்கான வருமானமும் போதவில்லை; நிம்மதியும் இல்லை.

நேரடியாகக் கவனிக்க முடியாத நிலையில் சில தொழில்களை ஆரம்பித்தேன்.

என்னிடம் வேலை பார்த்தவன் பணக்காரனாக இருக்கிறான்; நான் கடன்காரனாக இருக்கிறேன்.

மோசமான மனிதர்களை நண்பர்களாகப் பெற்றேன்; பொருள் அழிவும், அவமானமுமே மிச்சம்.

ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு முள் குத்துகிறது.

இன்றைய இளைஞனுக்கு என்னுடைய வாழ்க்கை ஓர் எச்சரிக்கை.

பழைய பண்பாடுகளை அவன் மறந்துவிடக் கூடாது.

புகை, மது போன்ற கொடிய பழக்கங்களைப் பழகிக் கொள்ளக் கூடாது.

தனக்குத் தெரியாத தொழிலில் ஈடுபடக் கூடாது.

நாணயம் கெட்டவர்களை வேலைக்கு வைக்கக் கூடாது.

தனக்காகக் கையெழுத்துப் போடும் உரிமையை எந்தப் பங்காளிக்கும் தரக் கூடாது.

வேறு வழியில்லாத கடுமையான நிலை இருந்தாலொழிய கடன் வாங்கக் கூடாது.

வாங்கினால், கடனை மொத்தமாகத் திருப்பிக் கொடுத்து, 'புரோநோட்'டைத் திருப்பி வாங்கிவிட வேண்டும்.

இல்லையென்றால், அந்தக் கடனே ஆயுள் காலக் கடனாகிவிடும் !

தாய்—தகப்பன், குலம்—கோத்திரம் பார்த்துத்தான் கல்யாணம் செய்ய வேண்டும்.

பின், 'அந்த மனைவியே உலகம்' என்று அதிலேயே அடங்கிவிட வேண்டும்.

வரவுக்கு மேல் செலவிட்டால் மானமிழந்து, மதியிழந்து, செல்லுமிடமெங்கும் 'திருடன்' என்று பேர் வாங்க நேரிடும் !

ஒருவனைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அவனைப் புகழ்ந்து பேசிவிடக் கூடாது.

பல வருஷ காலம் நம்பிக்கையாக இருந்த ஒருவனை, திடீரென்று சந்தேகிக்கக் கூடாது.

ஒவ்வொரு பைசாவும் எதிர்காலத்துக்கு உதவுமே என்று சேமிக்க வேண்டும்.

அயோக்கியர்களின் சாகசத்தைக் கண்டு இரக்கப்பட்டுவிடக் கூடாது.

அடிக்கடி அழுகின்ற பெண்ணையும், வாசனைத் திரவியம் பூசிக் கொள்ளும் பெண்ணையும், வாய்விட்டு ஓங்கிச் சிரிக்கும் பெண்ணையும், சபையிலே நாணமில்லாது நிமிர்ந்து நடக்கும் பெண்ணையும், தெய்வ பயமில்லாத பெண்ணையும் நம்பக் கூடாது.

தாரத்தை விலக்கி வைத்தாலும் வைக்கலாம்; தாயை அலட்சியப்படுத்தக் கூடாது.

மதச் சின்னங்களை அணிவதில் வெட்கப்படக் கூடாது.

ஒவ்வொரு நாளும் என்ன செய்தோம் என்பதை அன்றிரவே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆத்திரத்தில் ஓர் ஆபத்தான பொய்யைச் சொல்லிவிட்டால், உடனே பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும்.

இன்றைய இளைஞன் இவற்றை மனத்திலே கொண்டு வாழ்ந்து பார்க்கட்டும்; எந்தக் கட்டத்திலும் அவனுக்குத் தோல்வியில்லை, அவமானமில்லை.

மேற்கண்ட ஒன்றையும் நான் சரியாகக் கடைப்பிடித்ததில்லை; அதன் விளைவு கேவலமான, துயரம் மிகுந்த பாபச் சின்னங்கள் என் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்றன. இனி நான் இளமையில் இருந்து வாழ்க்கையைத் தொடங்க முடியாது !

இன்றைய இளைஞனுக்கு அந்த வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அவன் அவற்றை மறந்துவிடக் கூடாது.

மேற்காணும் தவறுகளைச் செய்யாமலிருந்தால், ஒவ்வொருவருமே 'மகாத்மா'வாகி விடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கண்ணனை நம்புங்கள் ; கவலைகள் குறைந்துவிடும்!

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Ceylon

